Free Circulation | Germany | England | Swiss
ஆவணி. Aug. 2018

# வெற்றிமணி

ESTD 1950
Vettimaniy
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு சிவகுமாரன் B.F.A

**Orientalische Textilien & Schmuck**
தொடர்
மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க
நகை மாளிகை

Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836

## உன் வீட்டுக்குள் ஓர் உளவாளி




## லண்டன் வீட்டு விலைகளின் எதிர்காலம்

Dr IN

## சாக்கலேட் சாப்பிடுவதனால் ஏற்படும் நன்மைகள் என்ன?

## திருவாசக அரண்மனை அமைத்த பெருந்தகை


**S.K.Silks & Gold Paraadise**
16th Anniversary
கேவலர் திருப்பூசை விழாவில்
**மாபெரும் மலிவு விற்பனை!**
11.08.2018 சனிக்கிழமை
திருமணப் பட்டு சேலைகள், சிறியவர் பெரியவர்களுக்கான
பஞ்சாபிகள்,பாட்டி சாறிகள், எதுவானாலும்
அதிக தெரிவும், தரமும், மலிவும் கண்டு
மகிழ்வும் பயனும் பெற நாடுங்கள்
மாபெரும்
ராஜமுத்திரை
Mr.P.Sritharan.Proprietor
Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

MITCHAM (UK) U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12
Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.08
StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.39

# தேர்த் திருவிழாக்களில் மாநகர முதல்வர்களும் நகரக் காவலர்களும் பெறும் முதல் மரியாதை!

மாதவி










தாயகத்தில் தேர்த்திருவிழாக்களில் ஆலய அறங்காவலர்கள், தேர் உபயகாரர்கள், முகாமையாளர்கள் என இவர்களுக்கு முதல் மரியாதை செய்தும் அவர்களுக்கு காளாஞ்சி வழங்கியும், பரிவட்டம் அணிந்தும் அவர்கள் வடம் எடுத்துக்கொடுக்க தேர் இழுப்பதும், தேர் உபயகாரரை தேர் ஏற்றி அமர வைத்து தேரை இழுப்பதை கண்டிருக்கின்றோம்.

பல மரபுகள் ஊருக்கு ஊர் வேறுபட்டாலும் பரவலாக இன்றும் சில இடங்களில் அங்கு உண்டு. மன்னர்காலத்தில் மன்னனுக்கு முதல்மரியாதை செய்து பரிவட்டம் அணிந்து கௌரவிப்பதும் உண்டு. ராஜராஜ சோழனுக்கு இவ்வாறான கௌரவம் செய்யப்பட்டதை தஞ்சைப்பெரிய கோவிலில் காணலாம்.

ஒரு ஆலயத்தை சிறப்பாக நிர்வாகித்து அதன் மூலம் மக்கள் இறைவனின் திருவருள் பெற அயராது உழைக்கும் அன்பர்களை கௌரவிக்கும் நிகழ்வாக அவை அங்கு நடைபெறுகின்றது.

திரைப்படங்களில் கோவில் ஆதினகரத்தவவாக வரும் வில்லன்களும், நாட்டாமைக்காரர்களும் முதல் மரியாதை யாருக்கு என சண்டைபிடித்து பிடித்து நம்மனதில் பல எதிர்மறை எண்ணங்களை விதைத்துவிட்டார்கள். என்பது இங்கு நாம் கருத்தில் கொள்ளவேண்டிய ஒன்றாக உள்ளது. சினிமா வாழ்வாகிபோன காலம் இது. இல்லை என்றால் இன்று இங்கு நடைபெறும் நடைபெறும் திருமணக் கோலங்கள் இவ்வளவுதூரம் மாறுபட்டு இருக்காதல்லவா!

புலம்பெயர் நாட்டில் ஒரு ஆலயம் அமைய அதற்கான அனுமதிமுதல் அவை சீராக சிறப்பாக நடைபெற பக்கதுணையாக இருப்பவர்கள் நகர முதல்வர்களும் நகரக்காவலர்களும் என்றால் அது மிகையாகாது. ஒரு நகரத்தில் எத்தனை ஆலயமும் இருக்கலாம். அதற்கெல்லாம் ஆதரவு நல்குவார்கள் நகரபிதாக்கள். நாம் நமக்குள் மோதாவிட்டால் போதும் அவர்கள் போதும் போதும் என தங்கள் ஆதரவைத் தருவார்கள். (பணம் தருவார்கள் எனக் கொள்வேண்டாம்.) எமது இனம் யாவரும் பார்த்து பரவசமடையும் வண்ணம் ஒழுங்கு பேணுபவர்கள். அது ஊர்வலமாக இருக்கட்டும் இல்லை தேர் வடமாக இருக்கட்டும் நமது கண்ணியம் கட்டுப்பாடு பலதடவைகள் நகரபிதாக்களின் பாரட்டுக்குள்ளாகி உள்ளன.

இந்தக்கோணத்தில் நாம் நகர பிதாக்களையும் நகரக்காவலர்களையும் பார்க்கும்போது அவர்கள் எமக்கு தாயகத்தில் உள்ள அந்த பெருமைமிக்க ஆதின கர்த்தாக்கள் முகாமையாளர்கள் உபயகாரர்கள் என அத்தனைபேரும் ஒருங்கிணைந்த உயர்ந்த மனிதர்களாக தெரிகிறார்கள்.

எனவே ஆலயத் தேரத்திருவிக்களில் அவர்களுக்கு, பரிவட்டம் அணிந்து (தலைப்பாகை கட்டியும்) மலர்மாலை,அணிவித்தும் கௌரவிக்கின்றோம். அவர்கள் ஆலய வளாகத்தில் நகரக் கொடியினை ஏற்றிட ஆலய குரு ஆலயக் கொடியையும் ஏற்றிவைப்பார்கள். அது மட்டுமன்றி சிதறுதேங்காய் அடித்தலையும் அவர்களே தொடக்கியும் வைப்பார்கள். ஆலய குருவும் ஆலய பரிபாலனசபையும் முன்னின்று அவர்களைக் கௌரவிக்கும் காட்சி யாவரும் யேர்மனியில் ஆலய தேர் உற்சவகாலத்தில் கண்ட ஒரு காட்சியாகவே இருக்கும். சிலர் இந்த பந்தாக்கள் ஆலயத்தில் தேவைதானா என்று கதைப்பதும் உண்டு. மனதுக்குள் புளுங்குபவர்களும் உண்டு. எதுவானாலும். சில காரியங்கள் காரண காரியங்களுடன்தான் நடைபெறுகின்றன. இது இன்று மட்டுமல்ல நேற்றும் நடந்தவைதான். எந்த ஒரு செயலுக்கும் காரணம் இல்லாமல் இல்லை. ஆனால் அவை பார்ப்பவர் கோணத்தைக் கொண்டு அவை வேறுபடுகின்றன.

ஆலயத்திற்கு நாம் செல்வதே குறைகளை களைந்து நிறைகளை பெறுவதற்காகவே. எனவே நாம் கற்கவேண்டிய பண்புகள் பாடங்கள் பல. குறைகளைவிடுங்கள் நிறைகளை எடுங்கள். உங்கள் வாழ்வும் வளமும் நிறைவாகும். இதோ யேர்மனியில் நகரபிதாக்களிடம் நாம் கற்கவேண்டிய பாடங்கள். சில.

தொடர்ச்சி 08 ம் பக்கம்.








விளம்பரம் அறிமுகம் செய்யும். தரம் அதை நிலைபெறச் செய்யும்.

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—————கவிஞர்.வி.க
ஓசை 264


ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333
e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# புதிய அரசியலமைப்பு இலங்கையில் சாத்தியமா?

இலங்கையில் இருந்து பாரதி



இலங்கையில் புதிய அரசியலமைப்புக்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் மீண்டும் ஒரு பின்னடைவைச் சந்திந்திருக்கின்றது. இதற்காக உருவாக்கப்பட்ட 20 உறுப்பினர்களைக் கொண்ட அரசியலமைப்பு வழிநடத்தல் குழு கடந்த மாதம் கூடிய போது, நிபுணர் குழு கொடுத்த அறிக்கை மீது முரண்பாடு காணப்பட்டது. இதனையடுத்து வழிநடத்தல் குழுவின் கூட்டம் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. மறுநாள் வியாழக்கிழமை பாராளுமன்றம் கூடிய போது வழிநடத்தல் குழுவில் இடம் பெற்ற சம்பவங்கள் அங்கும் எதிரொலித்தன.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டுஎதிரணி மற்றும் சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய 16 பேர் குழு என்பன புதிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்தன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சி எதிர்கொள்ளும் தடைகளைத் தெளிவாகக் காட்டியது. அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகளை திட்டமிட்ட முறையில் குழப்புவதற்கு கூட்டு எதிரணி முற்படுகின்றது என்பது இதன் மூலம் வெளிப்பட்டது.

அதேவேளையில், அரசாங்கத்தின் பங்காளிகளான ஐ.தே.க.வினரோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களோ அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும், ஐ.தே.க. தேசியப்பட்டியல் உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ணவும்தான் அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சியை முன்னெடுப்பதில் முழுமையாக ஈடுபட்டுள்ளமையையும் காணமுடிகின்றது. இந்த நிலையில், இந்தத் தடைகளைத் தாண்டி புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரக் கூடிய வல்லமை அவர்களுக்கு உள்ளதா என்பதுதான் இன்று எழும் பிரதான கேள்வி.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழிநடத்தல் குழு கூடிய போது, புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான செயற்பாடுகளை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கான அடிப்படையாக இருக்கக்கூடிய 10 உறுப்பினர்களைக் கொண்ட நிபுணர் குழுவின் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அந்த அறிக்கைகளில் பிரதான விடயங்கள் தொடர்பில் வெவ்வேறான கருத்துக்கள் காணப்பட்டதால், வழிநடத்தல் குழுவின் செயற்பாடுகளை அதன் அடிப்படையில் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால், பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு நிபுணர்குழுவுக்கு வழிநடத்தல் குழு பணிப்புரை விடுத்தது. அதற்காகவே இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டது.

அதேவேளையில், வழிநடத்தல் குழுவுக்கு நிபுணர்குழு கையளித்த வரைவு தொடர்பில் 3 குற்றச்சாட்டுக்கள் பொது எதிரணியால் முன்வைக்கப்பட்டது. வியாழக்கிழமை பாராளுமன்றம் கூடியபோது இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டதையடுத்து பாராளுமன்றத்தில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

குறித்த வரைபில் பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இணைந்து ஜனாதிபதியை நீக்கும் வகையிலான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது முதலாவது குற்றச்சாட்டு.

நாட்டை சமஷ்டி ஆட்சிக்குக் கொண்டு செல்லும் வகையில் சூழ்ச்சி இதன் மூலம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பது இரண்டாவது குற்றச்சாட்டு. நிபுணர் குழுவினருடைய கையொப்பங்கள் திருட்டுத் தனமாகப் பெறப்பட்டுள்ளது என்பது மூன்றாவது குற்றச்சாட்டு.

கூட்டு எதிரணி மற்றும் சுதந்திரக் கட்சியின் 16 உறுப்பினர் குழுவால் முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்கள் பாராதூரமானவையாக இருந்தாலும், அது எந்தளவுக்கு உண்மை என்ற கேள்வியும் உள்ளது. வழிநடத்தல் குழுவின் செயற்பாடுகளைக் குழப்புவதற்காகவும், சிங்களத் தேசியவாதிகள் மத்தியில் அதற்கு எதிர்ப்பை ஏற்படுத்தவும் மகிந்த ராஜபக்ஷ தரப்பினரால் முன்னெடுக்கப்படும் ஒரு அரசியல் நகர்வாகவே இது உள்ளது.

வழிநடத்தல் குழுவில் நிபுணர்குழுவின் வரைபு அறிக்கையே சமர்ப்பிக்கப்பட்டது. இது அரசியலமைப் புக்கான இறுதி வடிவம் அல்ல. அடுத்த கட்ட நகர்வுகளை முன்னெடுத்து செல்வதற்கு அடிப்படையாக இருக்கக் கூடிய வரைபுதான் இது. இவ்வாறான வரைபு ஒன்றை முன்வைக்குமாறு வழிநடத்தல் குழுவால் கேட்டு கொள்ளப்பட்டதன் பிரகாரம் இந்த அறிக்கை முன்வைக்கப் பட்டது. ஆனால், இதில் நிபுணர்கள் குழு உறுப்பினர் களிடையே பொதுவான இணக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. அதனால் அந்த வரைபை அடிப்படையாக வைத்து அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகளை முன் னெடுக்க முடியாது. இணக்கப்பாட்டுடனான அறிக்கையை இரு வாரத்தில் சமர்ப்பிக்குமாறு வழிநடத்தல் குழுவினால் கோரப்பட்டது.

நிபுணர் குழுவில் 10 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் ஆறு உறுப்பினர்கள் ஒரு அறிக்கையையும், மற்றும் இரு உறுப்பினர்கள் மற்றொரு அறிக்கையையும் சமர்பித்துள்ளார்கள். ஏனைய இரு உறுப்பினர்களும் இந்த அறிக்கை எதிலும் சம்பந்தப்படவில்லை. அதில் ஒருவர் வெளிநாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதேவேளையில், இந்த அறிக்கைகள் எதிலும் எவரும் கையொப்பமிடவில்லை. இவை மின்னஞ்சல் மூலமாகவே வழிநடத்தல் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. ஆக, போலிக் கையொப்பங்கள் என்பது தவறான ஒரு குற்றச்சாட்டாகும்.

குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய சுமந்திரன், "அரசியலமைப்பு வரைபை தயாரிக்கும் பொறுப்பு வழிநடத்தல் குழுவுக்கே உள்ளது. நிபுணர்கள் குழு அதற்கான கலந்துரையாடல் அறிக்கையையே தயாரிக்கும். வழிநடத்தல் குழுவினால் தயாரிக்கப்பட்டு வரைபு......

தொடர்ச்சி 31ம் பக்கம்.




# காட்டுப்புலமும், சிறுமி றெஜினாவும்







அனித்தா செல்வராஜா பூஷன்

யாழ் மாவட்டத்தில் காட்டுப்புலம் எனும் கிராமம் என்பது யாழ்ப்பாணத்தில் இருக்கும் பலருக்கே தெரியாத ஒன்றாகும். ஆனால், இன்று காட்டுப்புலம் என்ற கிராமத்தை உலகெங்கும் வாழும் தமிழர்களை திரும்பி பார்க்க வைத்தது சிறுமி றெஜினாவின் கொடூமான மரணமே. தாயகத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பிரதேசசெயலர் பிரிவிலும் மிகவும் வறிய நிலையிலுள்ள பின்தங்கிய கிராமங்கள் இன்னமும் இருக்கின்றன. அந்த வகையிலேயே சுழிபுரத்திலுள்ள காட்டுப்புலம் கிராமமும் அமைந்துள்ளது. இங்குள்ள வர்களின் வாழ்வாதாரம் என்பது மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. கூலித்தொழிலாளர்களை கொண்ட குடும்பங்களே அதிகமாகும்.

காட்டுப்புலத்தில் இவர்களுக்கென ஓர் பாடசாலை உள்ளது. அதுவும் ஐந்தாம் வகுப்புவரை மட்டுமே. இதனால் அடுத்த வகுப்பிற்கு வேறு பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. இந்நிலையில் போக்குவரத்து வசதியின்மை காரணமாக பாடசாலை இடைவிலகல், மற்றும் ஒழுங்கின்மை என்பதனால் கல்வியறிவின்மை என்பதும் இச்சமூகத்தைப் பொறுத்தவரையில் மிகவும் அதிகம். இவ்வாறான வறுமை மற்றும் கல்வியறிவின்மை காரணமாக பல்வேறுபட்ட சமூப்பிரச்சினைகள் எளிதில் இச்சமூகத்தினரிடையே ஊடுருவி விடுகின்றது. முக்கியமாக வடபகுதியில் இன்று பரவிவரும் போதைப்பொருள் பாவனையானது இச்சமூகத்து இளைஞர்களையும் விட்டுவைக்கவில்லை. இவர்களும் சுலபமாக போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிவிடுகின்றனர். இக்கிராமத்தில் ஏற்கனவே கசிப்பு உற்பத்தியும் காணப்படுகின்றது.

ஓர் 6 வயது சிறுமியை வன்புணர்வுக்கு உள்ளாக்கும் மனோநிலை எங்கிருந்து வந்தது என்பது ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். மனிததன்மை மறந்தவர்களாலேயே இது சாத்தியமாகும்.
இவ்வாறான வன்கொடுமைகளுக்கு சூழலும் ஓர் காரணமாகும்.

இக்கிராமத்து பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் பாதை கூட ஓர் வயல்வெளியாகும். இதனைவிட ஆங்காங்கே இருக்கும் கைவிடப்பட்ட வீடுகள், காணிகள் போன்றனவும் ஓர் காரணமாகும். பெற்றோர் கூலி வேலைக்குச் செல்வதால் பிள்ளைகள் தனியாகத்தான் பாடசாலைக்குச் செல்கின்றனர். இங்கும் பிள்ளைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகின்றது. 6 வயது சிறுமி தனியே வீதியால் செல்வது என்பதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.
பல வருடங்களுக்கு முன்பு கூட இச்சமூகத்தினரிடையே ஓர் ஆய்விற்காகச் சென்றபோது, சில வீடுகளில் 3, 4 வயது மதிக்கத்தக்க பிள்ளைகளை தமது சிறிய குடிசைக்குள் கட்டி வைத்துவிட்டு தாய்மார் வேலைக்குச் சென்றதை கண்கூடாக காண முடிந்தது. அத்துடன் அச்சமயத்தில் இங்கு ஓரிரு தொழுநோயாளர்கள் இருந்ததையும் அறிய முடிந்நது.

இவ்வளவு தூரம் வாழ்க்கைத்தரத்தை கொண்ட இக்கிராமம் இன்று ஓரளவு உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டு சுமாரான நிலையில் இருந்தாலும் போதியளவு கல்வியறிவின்மை என்பது இன்னமும் உள்ளது.

இன்றைய நிலையில் பல்வேறுபட்ட சமூகமட்ட உத்தியோகத்தர்கள் பணிபுரிந்தும் இவ்வாறு ஓர் கிராமம் வலுவிழந்து இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமே. இருப்பினும் இம்மாதம் சிறுமி றெஜினாவின் காட்டுப்புலத்திலிருந்து 89 மாணவர்கள் தொலைதூர பாடசாலைகளுக்கு செல்வதற்கு பஸ் சேவை ஆரம்பித்திருப்பது மிகவும் மகிச்சிக்குரிய விடயமே. ஆயினும் இச்சேவை நீடிக்க வேண்டும், அனைத்து பிள்ளைகளும் சிறந்த கல்வியறிவைப் பெற வேண்டும் என்பதுமே அனைவரினதும் விருப்பமாகும்.




அருள்மிகு
ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி
ஆலயம்






விநாயகா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, அமேரிக்கா
போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும்
பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த

எவ்வித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!

## பண்டித் துர்க்கா பிரசாத்

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம்,
பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம்
வாகனம், விசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ
முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள்,
கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை

Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655

PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach



ESTM Jewellery Dortmund

எங்கள் சேவை
திருமண ஆபரணங்கள்
ஓடர் நகைகள் திருத்த
வேலைகள் தாலிக்குப்
பொன்னுருக்குதல்
காது முக்குக்குத்தல்

1000€ வாங்குவோருக்கு
1 தங்க நாணயம் வழங்கப்படும்
7தங்க நாணயம் சேர்த்து வருவோருக்கு
1 பவுண் தங்க நகை
அன்பளிப்பாக வழங்கப்படும்
முடிவு திகதி 31.12.2018



பழைய நகைகளுக்கு பதிலாக சிங்கப்பூர் நகைகள் மாற்றிகொடுக்கப்படும்.
Tel;0231-18 990 23 Mobil:0163 364 26 42


ESTM Jewellery Rheinische Str.73 a 44137 Dortmund



Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Gulf Air
Mob:No: 0179 1484 892
என்றும் சிறப்பு விலையில்
தரமான சேவைகள்......
SMILE PRICE!
e.mail:siva 0108 @hotmail.com
Graphic Design Vettimaniy Ltd
QATAR AIRWAYS
Emirates
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
www.Lucky-fly.de


TKS BEST FOODS
5 வது ஆண்டில் கால் பதிக்கும்
ஒரு நாள் மட்டும்
விழாக் காலப் பிரமாண்ட விற்பனை
06. 10. 2018
அன்று நீங்கள் நம்ப முடியாத அளவில்
மாபெரும் மலிவு விற்பனையும்,
குலுக்கல் முறையிலான பரிசில்களும்..!
குலுக்கல் முறையிலான பரிசில் பொருட்கள்....
1ம் பரிசு இலங்கை/இந்தியா செல்வதற்கான விமானப் பற்றுச்சீட்டு (BCN Travels)
2ம் பரிசு 300€ பெறுமதிமிக்க கொள்வனவுக்கான பற்றுச்சீட்டு (TKS Best Foods)
3ம் பரிசு 200€ பெறுமதிமிக்க கொள்வனவுக்கான பற்றுச்சீட்டு (Star Impex)
4ம் பரிசு 6 பேர் கொண்ட குடும்பத்திற்கு ஒருவேளை உணவிற்கான பற்றுச்சீட்டு (Amma's Food)
5ம் பரிசு 5 பேருக்கு வடலி STB (IBC Tamil)
Gutschein
BCN TRAVELS
Airline Ticket
'5000€ பெறுமதியான நிச்சய பரிசில்கள்'
மளிகை உலகின் BIG BOSS
KADHIR
BASMATI RICE
'தரத்திலும் தரம் தள்ளுபடியிலும் தரம்'
0049 231 950 468 83
0049 231 950 468 82
tksbestfoods
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
Rheinische Str. 79, 44137 Dortmund Germany

# முதுமை மனமும், இளமைக் குணமும்



வெற்றி மைந்தன்

பைபிளில் ஒரு சுவாரஸ்யமான கதை உண்டு. இஸ்ரேல் நாட்டின் புதிய அரசனாக 'ரகபெயாம்' தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர் சாலமோன் மன்னனின் மகன். அவனைத் தேடி நாட்டிலுள்ள மக்களெல்லாம் வந்தனர். வந்தவர்கள் அவரிடம் விண்ணப்பம் ஒன்றினை வைத்தனர்.

" உங்கள் தந்தை எங்களுக்கு ரொம்ப கஷ்டத்தைக் குடுத்தாரு. நீங்க எங்களோட கஷ்டத்தைக் கொஞ்சம் குறைச்சீங்கன்னா, நாங்க காலம் பூரா உங்க பணியாளர்களா இருப்போம்" என்பது தான் அந்த விண்ணப்பம்.
"சரி நீங்க போயிட்டு மூணு நாள் கழிச்சு வாங்க" என சொல்லி அனுப்பினார் ரகபெயாம்.
முதலில் அரண்மனையிலுள்ள முதியோர்களைக் கூப்பிட்டு ஆலோசனை கேட்டார். "நீங்க சொல்லுங்க, என்ன பண்ணலாம் ?"
அவர்கள் அவருக்கு நல்ல ஒரு ஆலோசனை சொன்னார்கள். "அரசே..நீங்க கொஞ்சம் இறங்கி வந்து அவர்களுக்கு இரக்கம் காட்டுங்க. அப்போ உங்களுக்கு அவர்கள் பணிந்திருப்பார்கள்" !
பிறகு அவன் அவனுடைய நண்பர்களான இளைஞர்கள் சிலரிடம் ஆலோசனை கேட்டான். அவர்களோ, "என்னது ? பணிஞ்சு போறதா ? உன் வெயிட் என்னாவது ? உங்க கஷ்டத்தை நான் இன்னும் அதிகமாக்குவேன். சாட்டைக்கு பதில் முள் சாட்டை பயன்படுத்துவேன்னு சொல்லுங்க. அது தான் அரசனுக்குரிய மரியாதை" என்றார்கள்.

ரகபெயாம் முதியோரின் வார்த்தையைப் புறக்கணித்து இளைஞர்கள் சொன்னது போல் செய்தான். மக்கள் கிளர்ந்தெழுந்தனர். அவனை விரட்டியடித்து விட்டு இன்னொருவரை தங்களுக்கு அரசராக்கினார்கள்.
முதியோரின் ஆலோசனையைப் புறக்கணித்த ரகபெயாம் அனைத்தையும் இழந்து வாழ்வில் தோல்வியடைந்தான்.

"மூத்தோர் சொல் முழு நெல்லிக்காய், முன்பு கசக்கும் பின்பு இனிக்கும்" என அம்மா அடிக்கடி சொல்வார். பெரியவர்களுடைய வார்த்தைகளுக்கு வலிமை உண்டு. அவை அவர்களுடைய நீண்டகால அனுபவத்தின் வெளிச்சத்தில் வருபவை. அவை அவர்களுடைய தொலை நோக்குப் பார்வையில் வருபவை. அவர்களுடைய அறிவுரைகள் உணர்ச்சி வேகத்தில் உருவானவை அல்ல, அவை பெரும்பாலும் அவர்கள் கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து பெறப்படுபவையே..

முதியவர்களோடு இணைந்து வாழ்கின்ற இளையவர்களைப் பார்த்தால் சட்டென கண்டுபிடித்து விடலாம். அவர்களுடைய அணுகுமுறையில் ஒரு கனிவும் தெளிவும் இருக்கும். முதியவர்களோடு வாழாத இளைஞர்களிடம் பரபரப்பும், பதட்டமும் இருக்கும். காரணம் எளிது. முதியவர்கள் வாழ்க்கையை பயணித்து வந்தவர்கள் அவர்களுடைய அனுபவங்களும், அணுகுமுறைகளும் இளைய தலைமுறைக்கு வரம்., அவர்களுடைய கதைகள் வாழ்வியல் பாடங்களை எளிதாக புரிய வைக்கின்றன.




தாத்தா பாட்டிகளோடு வளர்கின்ற குழந்தைகள் விரைவில் பேசுவார்கள், மன பலத்தோடு வளர்வார்கள் என ஆய்வுகள் சொல்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முதியவர்கள் தான், கடந்த தலைமுறைக்கும் இந்த தலைமுறைக்கும் இடையே பாலமாக இருப்பவர்கள். அந்த பாலம் உடைபடும் போது இரண்டு தலைமுறைக்கு இடையேயான அறிவுப் பகிர்தலும், உணர்வுப் பகிர்தலும் இல்லாமல் போய்விடும் அபாயம் உண்டு.

முதியவர்களை அரவணைப்பது ஒன்றே இந்த உறவு நீட்சிக்கான அடிப்படை ஆதாரம் என்பதை உணர்ந்து கொள்வோம்.

பெரும்பாலும் இளைஞர்கள் உதாசீனப்படுத்தக் கூடிய ஒரு விஷயம் கலாச்சார மாற்றம் சார்ந்தது. கதைகளோடும், உரையாடல்களோடும் வளர்ந்த முதியவர்களுக்கு வாட்ஸப்களும், ஃபேஸ்புக் களும் ஜீரணிக்க முடியாத புதுமைகள். இரவு ஒன்பது மணி ஆனவுடன் தூங்கச் செல்லும் முதியவர்களுக்கு அதிகாலை வரை இளசுகள் அடிக்கும் டிஜிடல் அரட்டை ஒத்துக் கொள்ள முடியாத ஒவ்வாமை ! தங்களுடைய வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டு அவர்கள் காட்டும் பிடிவாதம் இளசுகளுக்கும், முதியவர்களுக்கும் இடையே மனக் கசப்புகளை உருவாக்கி விடுகிறது.
முதியவர்களோடு சேர்ந்து வாழ்தலும், அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டலும் இளைஞர்களுக்கு மட்டும் வலுவூட்டும் செயலல்ல, அது முதியவர்களின் நலனுக்கும் நல்லது என்கின்றன ஆய்வுகள். அவர்களுடைய வாழ்க்கை புதுப்பிக்கப்படுவதாக அவை சொல்கின்றன.

அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களிடம் கேட்கும் அறிவுரை ஞானமுள்ளதாய் இருக்கும் எனவும், அவர்களே நீண்ட கால திட்டத்தை மனதில் வைத்து அறிவுரை வழங்க முடியும் என்றும் அமெரிக்காவிலுள்ள டெக்சாஸ் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று தெரிவித்திருந்தது. "இளைஞர்கள் பாஸ்ட் ஃபுட் போல உடனடி பயன் என்பதை மட்டுமே சிந்திக்கின்றனர். ஆராயாமல் முடிவெடுக்கின்றனர். முதியவர்களோ தொலை நோக்குப் பார்வையுடன் முடிவெடுக்கின்றனர்" ஏன்கிறார் இந்த ஆய்வை நடத்திய பேராசிரியர் 'டாட் மடாக்ஸ்' .
முதியவர்கள் வாழ்வில் பல தோல்விகளைச் சந்தித்து கடந்து வந்தவர்கள். பல வெற்றிகளையும் சந்தித்து வந்தவர்கள். வெற்றிகள் தந்த பரவசங்களும், தோல்விகள் தந்த பாடங்களும் அவர்களுடைய இதயத்தின் இயங்கு தசைகளெங்கும் இயங்கிக் கிடக்கும் என்பதில் சந்தேகமில்லை. அவர்கள் தவறிய இடங்களில் நாம் விழாமலும், வெற்றிகளில் மமதை கொள்ளாமலும் இருக்க அவை உதவி புரியும்.

அதே நேரத்தில் இளைஞர்களிடம் இருக்கக்கூடிய சக்தி அபரிமிதமானது. அவர்களுக்கு தொழில்நுட்பமும் இன்றைய அறிவியல் வளர்ச்சியும் தந்திருக்கும் வாய்ப்புகள் அலாதியானவை. அவற்றை இளைஞர்கள் அரவணைக்க நினைப்பார்கள். அது பல நேரங்களில் முதியவர்களுக்குப் புரிவதில்லை. புரியாதவற்றை ஒத்துக் கொள்வது அவர்களுக்கு எப்போதுமே எளிதாய் இருப்பதில்லை.
தாங்கள் வாழ்ந்த காலமே பொற்காலம் எனும் சிந்தனையை அவர்களிடமிருந்து பிரித்து விட முடியாது. நாம் முதியவர்கள் ஆகும்போது "நாம் வாழ்ந்த காலமே பொற்காலம்" என நாமும் சொல்வோம் என்பதில் கடுகளவும் சந்தேகம் இல்லை. அத்தகைய சிந்தனைகளை கொஞ்சம் விலக்கி வைப்பதே இளைஞர்களின் வலிமையை முழுமையாய் பயன்படுத்த வழிவகை செய்யும்.

தொடர்ச்சி 06 ம் பக்கம்.



## தேர்த் திருவிழாக்களில் மாநகர முதல்வர்களும்....

2ம் பக்கத் தொடர்ச்சி




பிறமதத்தையும் நேசிக்கும் பண்பும் அவர்களது பழக்கவளக்கங்கள் பாரம்பரியங்கள் இவற்றை முழுமையாக கவனித்து மனநிறைவுடன் கூடிய ஒத்தாசையை வழங்கல். தேரத் திருவிழா நேரத்தில் அவர்கள் ஓர் இந்துவாகவே தங்களை மாற்றிக் கொள்வர். இது அவர்கள் மதம் மாறிவிட்டார்கள் எமது மதத்தின் பெருமையை உணர்ந்து அவர்கள் அப்டியே இயல்பாக எமது மதத்துள் கரைந்து போனார்கள் என்று பொருள் அல்ல. அதாவது பிறர் மத்தையும் பிறர் மனங்களையும் முழுமையாக மதிக்கும் பெருந்தன்மை அது என்பதே உண்மை. இந்த பெருந் தன்மையை நாம் அவர்களிடம் கற்றல் வேண்டும். பிற மதத்தை நேசிக்கும் பெருங்குணம் எமக்கு புதிதல்ல இருந்தாலும் அது நம் சமயத்தின் ஆணிவேர் என்பதனையும் நாம் வெளிப்படுத்த வேண்டும்.

Foto: Koness fotos









ஆலயத்திற்கு வந்தால் ஆலயத்தில் கடைப்பிடிக்வேண்டிய ஒழுங்கு முறைகளை பேணல் வேண்டும். தேர் இழுக்கும் போது செருப்பு சப்பாத்து அணிதல் கூடாது. இதனை நகரபிதாக்கள் கடைப்பிடிப்பதை பல இடங்களில் கண்டுள்ளேன். அடுத்து வேட்டி உடுத்து தேர்த்திருவிழாவில் கலந்து கொள்ளும் நகரபிதாக்களும் உண்டு. இவை யாவற்றிற்கும் மேலாக தேர் வடம் பிடித்து இழுத்தும் தேர்வீதியில் தேரோடு வலம்வந்தும், தேர் இருப்புக்கு வரும்வரை கலந்துகொள்ளும் நகரபிதாக்கள் அதிகம். நம்மில் பலர் விழாக்கள் ஆகட்டும் திருவிழாவாகட்டும் தலைகாட்டிப்போட்டு போவோம் என்ற மனப்பாங்கு அதிகமாகவே இன்றும் உள்ளது.
இப்போக்கு பலதரப்பட்ட வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் நகரபிதாக்கள் தாம் சம்மதித்த திகதியில் அவர்கள் முழுமையாக பிரசன்னமாகி கலந்து சிறப்பிக்கும் தன்மையை நாம் அவர்களிடம் கற்றவேண்டிய பெரும்பாடமாகும்.

நகரக்காவலர்கள் எமது பாதுகாப்பினை எவ்வளவு கண்ணியாமாக நடந்து காக்கின்றார்கள் என்பதனை திருவிழா காலங்களில் காணமுடியும். குழந்தைகளை அவர்கள் மதிக்கும் விதமே தனி.

பலர் தேர்த் திருவிழாவில் தேரில் வலம் வரும் சாமியோடும் தெருவீதி வலம்வரும் நகரபிதாவுடன் படம் எடுத்துக் கொள்வர். எத்தனை பேர் படமெடுக்க விரும்பினாலும் முகம் சுளிக்காது படம் எடுக்க சிரித்த முகத்துடன் நிற்பாரர்கள். அது மட்டுமன்றி நாம் எது கொடுத்தாலும் குடிப்பார்கள், வாங்கி உண்பார்கள். இவை நமது அன்புக்கும் விருப்புக்கும் அவர்கள் காட்டும் அன்பு..
நம்மில் பலர் இன்று தாய் நாட்டில் விடுமுறைக்கு சென்றாலும் அங்கு தெருக்கடைகளிலோ அல்லது நம்மிலும் பார்க்க வசதி குறைந்தவர்களிடமோ, எதுவும் வாங்கி உண்ணமாட்டார்கள். அவர்களது அன்புக்கும் அளவு காட்டுவார்கள். தேரோடும் வீதி எங்கும் நம்பண்பாட்டின் வேர்கள் ஓடவேண்டும். நாம் வாழும் நாட்டிற்கு நன்றிமிக்க சமூகமாக இன்முகம் காட்டவேண்டும.




05 ம் பக்கத் தொடர்ச்சி

முதியவர்களோடு இணைவது எளிதாய் நடப்பதில்லை. ஒரே அலைவரிசையில் சிந்தனைகள் இருப்பதில்லை. ஆனால் இணைந்து விட்டால் அந்த நட்பும், உறவும் எளிதில் உடைபடுவதில்லை.
துரதிர்ஷ்டவசமாக இன்றைக்கு முதியவர்கள் கவனிக்கப்படுவதில்லை. அல்லது அவர்களுக்குரிய மரியாதை சரியான அளவில் கிடைப்பதில்லை. கிராமங்கள் முதியோர் இல்லங்களாகிவிட்டன. இளைஞர்கள் வேலை தேடி நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டனர். நகர்ப்புறங்களில் இருக்கின்ற முதியவர்களுக்காய் சொகுசான முதியோர் இல்லங்கள் தயாராக்கப்படுகின்றன. அவர்களது அனுபவமும், அவர்களது உறவுகளும் தனிமைப்படுத்தப்படுகின்றன. வலிகளிலேயே கொடுமையான வலி, தான் உயிருக்கு உயிராய் நேசித்த உறவுகளால் உதாசீனப்படுத்தப்படுவது தான். இன்றைக்கு முதியவர்கள் எதிர்பார்ப்பது சொகுசான வாழ்க்கையல்ல, உறவான வாழ்க்கை. முதியவர் களின் அனுபவங்களை கவனிக்காமல் விடுவது, தேசத்தின் பொக்கிஷங்களை துருப்பிடிக்க விடுவதைப் போன்றது.
இன்று நாம் விதைப்பதையே நாளை நாம் அறுவடை செய்வோம். முதுமையை நாம் மதித்தால், நமது முதுமையும் மதிக்கப்படும். அவர்கள் அன்பினாலும் உறவினாலும் கட்டப்பட்டவர்கள். அவர்களை காயப்படுத்துவது நீங்காத சாபத்தை அள்ளித்தரும்.

முதியவர்களின் அனுபவமும், இளைஞர்களின் மனபலமும் இணைந்து விட்டால் சமூக வீதியில் வெற்றிகளுக்குக் குறைவே இருக்காது !





# உஷ்ணம்

**விக்கி விக்னேஷ்- மலையகம். இலங்கை**

என்னையெல்லாம் எந்தப் பெண்தான் பார்ப்பாள்.

அழகானப் பெண்களை நான் பார்க்கும் போதெல்லாம் இப்படித்தான் நினைத்துக் கொள்வேன். அழகானப் பெண்கள் என்றும் சொல்லமுடியாது.
அநேகமாக என்னைக் கடந்து போகின்ற எல்லா பெண்களையும் நான் பார்ப்பதுண்டு. வயது, நிறம் என்று எதனையும் வகைப்படுத்தி பார்ப்பதில்லை.
சமயத்தில் அவர்களிடம் எதைப்பார்க்கிறேன் என்றுகூட நினைவில் இருப்பதில்லை. ஆனால் பார்க்கிறேன். எப்போதும் அவர்கள் யாரும் என்னைப் பார்ப்பதில்லை.

பார்த்தாலும் அதனைக் காட்டிக் கொள்வதில்லை, அல்லது மீண்டும் பார்ப்பதில்லை. ஆரம்பத்தில் எனக்கு அது கஷ்டமாகத்தான் இருந்தது. பெண்கள் என்னை பார்க்காமல்விடுவது என்பது, என்னை உலகில் இருந்தே தள்ளிவைப்பதைப் போல இருக்கும்.

நான் நிற்கும் எல்லா இடங்களிலும், எல்லாப் பொழுதுகளிலும் ஏதோ ஒருப் பெண்ணால் நான் தள்ளி வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறேன். அதனாலோ என்னவோ, உலக நடவடிக்கைகளில் இருந்து வெகுத்தொலைவில் தனிமைப்பட்டு வாழ்கிறேன். இப்போது பழகிக் கொண்டுவிட்டேன்.

பெண்களோடு மட்டும் அல்ல, அனைத்து மக்களோடும் உலக இயக்கத்தில் ஒன்றித்துதான் செல்ல வேண்டி இருக்கிறது. அவர்கள் விரும்பவில்லை என்பதற்காக, எனக்கு விதிக்கப்பட்ட செயல்களை, சம்பவங்களை கடந்துச் செல்லாமல் தவிர்க்க முடியுமா என்ன?

இப்போது பேருந்தின் ஆசனங்களுக்கு இடையிலான மையப்பகுதியில் நின்றுக் கொண்டிருக்கிறேன். எத்தனைக் கூட்டம்? கூட்டமான இடங்களை நான் பெரிதும் விரும்புவேன். அதுவும் மழை நேரக் கூட்டம் என்றால் இன்னும் பிடிக்கும். கூட்டம் தருகின்ற நெருக்கடியிலும், அசௌகரியத்திலும், மக்களுக்கு என்னை மாத்திரம் தள்ளிவைத்துப் பார்ப்பதற்கான அவகாசம் கிடைக்கப்பதில்லை.

அதிகாலை மழை அழகு.
அதிகாலைப் பேருந்து பயணத்தை நான் விரும்புவதில்லை. அந்த சமயத்தில் பேருந்தில் பெரிதாக கூட்டம் இருக்காது. நான் வெளிப்படையாக பலராலும் ஒதுக்கப்படுவதாக உணர்வேன். உணர்வேன் என்று ஒற்றைவார்த தையில் சொல்லிவிட முடியாது.

வலிக்கும், "இது வழமைதானே" என்று பழகிவிட்டாலும் கூட, அவர்களின் தூரத்தள்ளும் பார்வை இருக்கிறதே... ஒரு பெண்டுலம் போல, என்னை வலிக்கும் பழக்கப்பட்ட மனநிலைக்கும் இடையில் ஆட்டி ஆட்டி வதைக்கும்.

வழமைக்கு மாறாக இன்று கூட்டம் அதிகம் இருந்தது. யாரும் யாரையும் கண்டுக் கொண்டதாக தெரியவில்லை. என்னையும் சேர்த்து பயணிகள் கூட்டம் அணைத்துக் கொண்டிருந்தது. பெரிதாக பிடிமானம் இல்லாமலேயே என்னால் நிற்க முடிந்தது.

சோசலிசம் பழக பேருந்து பயணங்களை மேற்கொள்வது சிறந்தது. எனக்கு அருகில் சிறிய சிறிய இடைவெளிகளும் இருந்தன. அவற்றையும் நிரப்பிக் கொள்ளும் படி நெருங்கி வாருங்கள் என்று சொல்ல வாய் துடித்தது.

அந்த இடைவெளி அடுத்த தரிப்பில் ஏறக்கூடிய யாரோ ஒருவருக்கு உரியதாக இருக்கலாம். ஏன், அந்த இடைவெளி ஒரு அழகான பெண்ணால் நிரப்பவும் படலாம். காத்திருந்தேன்.
அடுத்தப் தரிப்பில் பேருந்து நின்று கடந்தது. நிறையபேர் ஏறினார்கள். நான் இன்னும் நெருக்கப்பட்டேன். இல்லை, உலகத்துக்குள் உள்வாங்கப்பட்டுக் கொண்டிருந்தேன்.

பேருந்து கூட்டத்தின் அணைப்பும், உஷ்ணமும், அசைவுகளும், துள்ளல்களும் நிறைந்த அதன் பயணமும், தாய்மடியில் இருக்கும் ஒரு குழந்தைப் போன்ற உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

நான் எதிர்பார்த்தது சரிதான், ஏற்கனவே கணிப்பிட்டப்படி எனக்கு அருகில் இருந்த இடைவெளியை ஒரு பெண் நிரப்பிக் கொண்டிருந்தாள். எனது இடது பக்க நெஞ்சோடு அவளது உடல் உரசியப்படி இருந்தது.

என்னைவிட குள்ளமாக இருந்தாள். வயது ஒரு 25 இருக்கும். கைகள் மாநிறத்தில் இருந்தன. என் கழுத்தை சற்று வளைத்துப் பார்க்க அவள் உருவம் முழுமையாக தெரிந்தது. முகம் தெரியவில்லை.
அண்ணார்ந்து என்னை அவள் பார்த்தாலே ஒழிய, நான் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்பதை அவள் அறியமாட்டாள்.
நான் அவளை பார்க்கிறேன் என்பதை மற்றப் பயணிகள் அறிந்திருக்கக்கூடும். எனக்கு கவலையில்லை. அவர்களும் அவர்களுக்கு எட்டிய யாரையோ பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

மழையில் முழுமையாக நனைந்துவிடாமலும், ஆனால் நனையவே இல்லை என்று சொல்லிட முடியாத அளவிலும், அவளது உடையில் ஈரம் இருந்தது.
அரைக்குடையை மடித்து ஒருகையில் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையில் ஆசனத்தின் பிடியை பிடித்துக் கொண்டிருந்தாள். உடையின் ஈரம், அவளது உடலை ஒட்டிப் பிடித்துக் கொண்டிருந்தது.

தொடர்ச்சி 10ம் பக்கம்.



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

9ம் பக்கத் தொடர்ச்சி

# உஷ்ணம்



அவளது தலைக்கு மேல் எரிந்துக் கொண்டிருந்த பேருந்தின் மின்விளக்கு, ஈர உடையை இன்னும் சல்லடையாக்கிக் கொண்டிருந்தது. நின்று நிதானமின்றி செல்லும் பேருந்தின் அசைவுக்கு ஏற்ப எங்களது உடல்கள் மோதிக் கொண்டன. அவ்வப்போது என் வாழ்நாளில் நான் பார்த்திராத அங்கங்களும் என்னில் மோதுவதுண்டு. அவற்றை அவள் கண்டுகொண்டதாக தெரியவில்லை.

ஒருகையால் அணைத்துக் கொள்வோமா? என்றும் தோன்றியது. 45 வயதாகிறது, இத்தனை வயதில் எத்தனையோ பேருந்து பயணங்களைச் செய்திருக்கிறேன்.

இதுவரையில் இப்படி ஒன்று வாய்த்ததில்லை. என்னைச் சூழ்ந்திருந்த பயணிகள் கூட்டத்தால் விளைந்த உஷ்ணத்தில் இருந்து, அருகில் பாதி ஈரத்துடன் இடித்துக் கொண்டிருந்த பெண்ணின் உஷ்ணம் வேறுப்பட்டுத் தெரிந்தது.
இதுதான் எனக்கு கிடைத்த இறுதி வாய்ப்பாக கூட இருக்கலாம்.

பயணத்துக்கான சீட்டு இன்னும் எடுக்காமல் இருந்தது வசதியாய் போய்விட்டது. இறங்க வேண்டிய இடம்கடந்தும், அந்த உஸ்ணத்தில் இருந்து விடுபட விரும்பவில்லை. சற்றே இறுக்கி அணைத்துக் கொண்டால் என்ன என்று தோன்றியது.
கழுத்துக்கு அருகில்சில அங்குலங்கள் ஆடை விலகி வெளியில் தெரிந்த பகுதியை, ஈரதுணி ஒட்டி இருந்த இடுப்புப் பகுதியை அல்லது அங்கு... எங்காவது ஓரிடத்தை சீண்டிப் பார்த்தால்தான் என்ன? சபலம் வில்லங்கமான எண்ணங்களைத் தூவிக் கொண்டே இருந்தது. பாதணியின் எல்லையைத் தாண்டி வெளியில் நீண்டுக் கொண்டிருந்த ஒருவிரலையாவது உரசிவிடுவோமா? எதிர்பார்க்கவில்லை, திடீரென முறைத்துப் பார்த்தாள். பின்னர் கீழே குணிந்துக் கொண்டாள்.

எனக்கு புரியாமல் இருந்தது.
கூடாத இடமெதிலும் சீண்டிவிட்டேனா? இல்லை இவ்வளவு நேரம் அவளைப் பற்றிதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை அவள் புரிந்துக் கொண்டிருப்பாளா? எனக்கே தெரியாமல் ஒரு சந்தேகம் வந்தது.
எனக்கு அப்படித்தான், சிறுவயதில் தந்தையுடன் இருக்கும் போது அவர் அடிக்கடி யாராவது சாமியாரிடம் கூட்டிப்போவார்.
அந்தசாமியார் சாமியாடி நடந்தவற்றையெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பார். எனக்கு அவரை பார்க்கவே பயமாக இருக்கும். அறிந்தோ அறியாமலோ நான் செய்த சின்னசின்ன தப்புகளை அப்பாவிடம் சொல்லிவிடுவாரோ? என்று அஞ்சிவேன். சாமியாரைக் கண்டு வீடு வந்த சில நாட்கள் அந்த தப்புகளை எல்லாம் செய்ய மாட்டேன்.காலம் செல்ல மீண்டும் செய்வேன்.

இப்போதும் அதேபோன்ற ஒரு அச்சம் சூழ்ந்துக் கொண்டிருந்தது. இந்தமுறை முறைத்துப் பார்த்ததோடு இல்லாமல், கன்னத்தில் பளார் என்று ஒரு அறையும் கொடுத்தாள். விரும்பியோ விரும்பாலோ ஒரு பெண் என் கன்னத்தை தொடும் முதல் சந்தர்ப்பம் அது.
கன்னத்தில் தோன்றிய எரிச்சலும், பயணிகளின் சலசலப்பும் அந்த அற்புதத்தருணத்தை ரசிக்கவிடாமல் செய்தது.
பூனைகளாக இருந்தவர்கள் பலர் புலிகளாக மாறிப் போனோர்கள். என்ன நடந்தது என்பதை தெரிந்துக் கொள்ள வேண்டும் என்பதைவிட, என்னை தாக்க வேண்டும் என்பதில் இளசுகள் குறியாக இருந்தனர்.

எனக்கும் நடந்தது விளங்காமலேயே இருந்தது. என் காலால் அவளை சீண்டியதாக கத்திக் கூச்சலிட்டாள்.
அங்கும் இங்கும் இருந்து இன்னும் சில கரங்கள் என்னைத் தாக்கின. பேருந்தில் இருந்து இறங்குமாறு கூச்சலிட்டார்கள். மீண்டும் உலகம் என்னை வெகுதூரம் தள்ளிவைக்கும் வலியை உணர்கிறேன். இதோ, சில கணங்கள் மெய்மறக்கச் செய்திருந்த அந்த உஷ்ணத்தை விடுத்து வெளியேறுகிறேன். வேகமாக நடக்கச் சொன்னார்கள்.எனக்கும் சீக்கிரம் வெளியேறத்தான் தோன்றியது. கூட்டத்தில் ஒரு காலில் மட்டும் உந்தி உந்தி நடக்க சிரமமாக இருந்தது.
இன்னொரு காலும் இருந்திருந்தால் இன்னும் இலகுவதாக இருந்திருக்கும்.
www.vikeywignesh.com










# நீரழிவு நோய்!




டாக்டர் எம்.கே.முருகானந்தன்
Dr IN MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்


“சீனி சாப்பிடாவிட்டால் நீரிழிவு வருத்தம் வராதுதானே”. நீரிழிவு நோய் வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கு ஒருவர் மனைவிக்கு அளித்தவிளக்கம் அது.
“தாய் தகப்பனுக்கு இருந்தால்தான்பிள்ளைகளுக்கும் வரும்” என்றார்மற்றொருவர். நீரிழிவைத் தடுப்பதற்கான வழிமுறைகளாக ஒவ்வொருவரும் தாம் நினைத்ததை எல்லாம் சொல்கிறார்கள்.

ஆனால் சீனி சாப்பிடாவிட்டாலும் வருகிறது. பரம்பரையில் இல்லாவிட்டாலும் வருகிறது. அப்படியானால் தடுப்பது எப்படி? போசாக்குள்ள உணவாக உட்கொள்ளல். ஆனால் இது சீனியைத் தவிர்ப்பது என்று அர்த்தம் அல்ல. தினசரி உடற்பயிற்சி செய்தால் அல்லது உடல் உழைப்பில் ஈடுபடுதல் .உடல் எடையை சரியான அளவில் பேணுதல் எனச் சுருக்கமாகச் சொல்லலாம்.
போசாக்குள்ள உணவு என்பது என்ன? இனிப்பு, எண்ணெய், நொறுக்குத் தீனி போன்றவற்றை மிகக் குறைவாக உண்ணல். மாப்பொருள் உணவை அளவோடு உண்ணல், புரத உணவுகளை தேவையான அளவில் உண்ணல், காய்கறி மற்றும் பழவகைகளை அதிகம் உண்ணல் எனச் சொல்லலாம்.

தினமும் ஒவ்வொரு பங்கும் 80 கிராம் நிறையுள்ளதாக 5 பங்கு அளவில் காய்கறிகளையும் பழவகைகளையும் உணவில் சேர்க்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்கப்பட்ட கருத்தாகும்.
எத்தகைய காய்கறி உணவுகள் நீரிழிவு வராமல் தடுக்க உதவும் என்பது அடுத்த கேள்வியாக இருக்கும். மாப்பொருள் குறைந்த அளவுள்ள காய்கறிகள் நல்லது. கிழங்கு வகைகளில் மாப்பொருள் உள்ளதாயினும் அவற்றில் நார்பொருளும் நீர்ச்சத்தும் அதிகம் இருப்பதால் அளவோடு உண்பதில்தவறில்லை. ஏனைய காய்கறிகளில் மாப்பொருள் குறைவாகவும், நார்ப்பொருள் அதிகமாகவும் உள்ளதால் நல்லது.
இலைவகைகள் மேலும் சிறந்தவை என்கிறார்கள். பச்சை நிறமான இலைவகைகள் அதிகளவு உட்கொள்ளும் உணவு முறையானது நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தைக் குறைக்கிறது என University of Leicester யைச் சார்ந்த Patrice Carter தலைமையிலான ஒரு ஆய்வு கூறியது. ஆறு ஆய்வுகளின் முடிவுகளை மீள்பரிசோதனை செய்தபோது இது தெரிய வந்ததாம்.

ஏனைய காய்கறிகள் உண்பவர்களைவிட அதிகளவு பச்சை நிறமான இலைவகைகளை உண்பவர்களுக்கு மட்டுமே நீரிழிவு வருவதற்கான சாத்தியம் 14 சதவிகிதம் குறைவென அது கூறியது. இது 13 வருடங்களாக 223,000 பேரிடையே செய்த அவதானிப்பின் முடிவு.

ஆனால் ஏனைய வகை காய்கறிகளையும் பழங்களையும் அதிகம் உண்பவர்களிடையே இந்த நீரிழிவுக்கு எதிரான சாதகமான பலன் கிடைப்பதாகத் தெரியவில்லை. இதன் அர்த்தம் ஏனைய வகை காய்கறிகள் பழங்கள் பயனற்றவை என்பது அல்ல.
ஏனைய பல ஆராய்ச்சி முடிவுகள் எல்லாப் பழவகைகளும், காய்கறிகளும் நீரிழிவைத் தடுப்பதில் பங்களிப்பதுடன், இருதய நோய்களுக்கான சாத்தியத்தையும் குறைப்பதாகக் கூறுகின்றன. ஆயினும் இலைவகை உணவுகளின் பங்களிப்பு அதிகம் என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது.

இலைவகை உணவுகளின் நற்பயனுக்குக் காரணம் என்ன? ஒட்சிசனெதிரிகள் காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். பசுமையான பச்சை இலைகளின் பீற்றாகரோட்டின், பொலிபீனோல்ஸ், விட்டமின் சீ போன்ற ஒட்சிசனெதிரிகள் மற்றும் மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்களும் தாராளமாக இருப்பதே காரணம் எனலாம்.

பசிய இலை வகை உணவுகளின் போசாக்கு இலைவகைகள் மிகக் குறைந்தளவு கலோரிப் பெறுமானம் உள்ள உணவுகளாகும். அவற்றிலுள்ள மாப்பொருள்களானது நார்ப்பொருள்களிடையே அடைபட்டு இருப்பதால் எளிதில் சமிபாடடைவதில்லை. இதனால் நீரிழிவு நோயாளர்களின் இரத்த குளுக்கோஸ் அளவு அதிகரிப்பதைக் குறைக்கின்றன.
இரும்பு, கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் போன்ற கனியங்கள் உண்டு. விட்டமின் D வகைகளுடன், விட்டமின்கள் K, C, E ஆகியவை நிறையக் கிடைக்கின்றன. ஒரு கப் சமைத்த இலையுணவு ஒரு மனிதனுக்கு தினசரி தேவைப்படும் விட்டமின்கள் K யைவிட 9 மடங்கு அதிகமாகக் கொடுக்கும் எனத் தெரிகிறது.

பீட்டாகரோட்டின், லியுடின் (beta-carotene, lutein, and zeaxanthin) போன்ற பைட்டோநியுரியன்டசை (phytonutrients) இலைவகை உணவுகள் தருகின்றன. இவை எமது உடற்கலங்கள் சேதமாவதைத் தடுக்கின்றன. வயது அதிகரிப்பால் ஏற்படும் பார்வை இழப்பை (Age related macular degemeration) தடுப்பதிலும் இவை உதவுகின்றன.

கொலஸ்டரோல் குறைப்பு, இருதய நோயிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றுக்காக இப்பொழுது ஒமேகா 3 (Omeg 3 Fat) என்ற கொழுப்பை பலரும் பயன்படுத்துகிறார்கள். இது பெருமளவு ஆழ்கடல் மீன்களிலிருந்தே பெறப்படுகின்றது. ஆயினும் தாவர இலை உணவுகளிலும் இது சிறிதளவு காணப்படுகிறது.

தொடர்ச்சி 29ம் பக்கம்




# வெற்றிமணியின் வெற்றிக்குப் பின்னால்!

விரைந்து செல்லும் பொழுதுகளில் விடியலைத் தேடும் மனிதர்கள் மத்தியில் வெற்றி மணியின் வெள்ளிவிழா அரம்ப நிகழ்வின் வெற்றிக்காக இங்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் ஒருமுகமாக வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளு கின்றேன். (16.06.2018)

காலத்தின் தேவையை உணர்ந்த மக்கள் அதை காத்திரமாகப் பயன்படுத்தத் தயங்குவதில்லை. 25 வருடங்களின் முன் வர்த்தக ஸ்தாபனங்களைத் தேடும் மக்களுக்கு கையில் தொலைபேசி இல்லை. இணையத்தின் தொடர்பு இல்லை. இலவசமாக ஒரு பத்திரிகை இல்லை. மின்னலென பளிச்சிட்டது வெற்றி மணி ஆசிரியரின் மூளையில் ஒரு சிந்தனை. விற்பனையாளருக்கு விளம்பரம். நுகர்வோருக்கு வியாபார ஸ்தாபனங்களின் விலாசம். வாசக நெஞ்சங்களுக்கு தேனாய் கட்டுரைத் தீர்த்தம். தனது தந்தை தொட்ட பணியை தொடரத் தனயன் நினைத்தது பெரிய காரியமில்லை. ஆனால், அதைத் தவமாய் நினைத்து இன்று வரைத் தொடருகின்றார் என்றால், அது அவர் 25 வருடங்கள் தொடர்ந்து செய்த தவத்துக்குக் கிடைத்த வரம் என்று தான் சொல்லுகின்றேன். அன்று வெற்றிமணி பற்றி பேசுவதற்கு இருக்கின்றார்கள். இன்றைய நிலையில் வெற்றிமணி என்று பார்த்தால் முக்கியமாக எதைக் கூறலாம் **காலம்.**

வாசிப்பை நேசிப்பவர்கள் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணலாம். ஏன் எழுத்தாளர்களே புத்தகங்களையோ, சஞ்சிகைகளையோ, பத்திரிகை களையோ பிரித்துப் பார்ப்பதில்லை. கேட்டால், தேவையானவற்றை இணையத்தில் பார்ப்போம் என்பார்கள். இணையம் எங்கள் கண்முன்னே விசாலமாகப் பரந்து கிடக்கின்றது. Facebook, Twitter, viber, இவை எல்லாவற்றையும் விட நித்திரையில் இருக்கும் மனிதனைத் தட்டி எழுப்புகின்ற whatsapp இப்படி மனிதர்களின் கைக்குள்ளேயே இணையம் வந்து ஆட்சி செய்கின்றது. சமூகவலைத் தளங்கள் காலடியில் கிடக்கின்றன. 2 நிமிட வீடியோ பார்த்தால் போதும் என்று youtube வீடியோக்குள் கிடக்கும் மனிதர்கள். இப்படியான சூழலிலே வெற்றிமணி இன்றும் பிரகாசமாக வண்ணக்கலவைகளுடன் காட்சியளிக் கின்றது என்றால், அது வெற்றிமணி ஆசிரியருக்குக் கிடைத்த ஞானம் என்றே கருதுகின்றேன். தியானம் என்றால், என்னவென்று கருதுகின்றீர்கள். ஏதாவது ஒருவிடயத்தில் எம்முடைய புலன்கள் அத்தனையையும் ஆழமாக ஒருமுகப்படுத்துதலே தியானம். அப்படி ஒருமுகப்படுத்தும் போது அந்த விடயத்தில் நாம் ஞானம் பெறுகின்றோம். அதாவது எப்படி எக்காலத்துக்கு எவ்விதமாக படைப்புக்கள் கொடுக்கலாம் என்று தேடித் தேடிச் செல்லும் ஞானம் வெற்றிமணி ஆசிரியரின் வெற்றிக்குக் காரணமாகும். எதிர்கொள்ளும் நாட்களுக்கு முகங்கொடுக்கும் இளை யோர்களின் படைப்புக்களின் அவசியம் கருதி இன்று பல இளை யோர்களின் படைப்புக்களைத் தேடிப் பெறுகின்றார்.

ஆலமரமாய் வெற்றிமணி திகழ அத்திவாரமிட்ட வெற்றிமணி ஆசிரியருக்கும் ஒரு வாழ்த்து, அதை வளர்த்தெடுக்க நிருற்றுகின்ற விளம்பரதாரருக்கு ஒரு வாழ்த்து, நான் வாழ்த்து சொல்ல நினைத்தபோது ஆக்கதாரர்கள் என் கண்முன்னே நிற்கின்றார்கள்.

இடைவிடாது மாதம் தோறும் எழுதி வரும் ஆக்கதாரர்களிலே நாம் தேடிப்பெறாது ஓடி வந்து எங்களுடன் ஒட்டிக் கொண்டு, உடன் இருந்தே கொல்லுகின்ற நோய்க்கான காரணங்களையும் தீர்வுகளையும் விளக்கிச்செல்லும் டாக்டர் எம்.கே. முருகானந்தன் அவர்களுக்கும், மனித உணர்வுகளை அழகாக எடுத்துக்காட்டி தன்னம்பிக்கைக் கட்டுரைகளைத் தந்துதவுகின்ற சேவியர் அவர்களுக்கும், வாழ்க்கைச் சூழலிலே காணுகின்ற பிரச்சினைகளைக் காட்சிப்படுத்துகின்ற றஜீனா தருமராஜா அவர்களுக்கும், அன்றாடம் காணுகின்ற காட்சிகளில் காணப்படுகின்ற விஞ்ஞானத்தை விளக்கிச் செல்லுகின்ற டாக்டர் நிரோஷன் தில்லைநாதன் அவர்களுக்கும், சித்தர்களின் இராச்சியத்தில் முக்குளித்து திருமந்திரமும் வாழ்வியலும் என்னும் தொடர் மந்திரங்களைத் தந்துதவுகின்ற சைவசிந்தாந்த ரத்தினம் நாகேந்திரன் கருணாநிதி அவர்களுக்கும், எங்கள் இதயத்தின் ஒரு பகுதி இலங்கையின் தற்கால அரசியலை தற்போது தவறாது இலங்கையிலிருந்து தருகின்ற பாரதி அவர்களுக்கும், நின்னைச் சரணடைந்தேன் என்று பாட்டுச்



## அணிவகுத்தோர் பற்றி - கௌசி

சித்தன் பாரதியின் காலடியில் சரணடைந்திருக்கும் கலாசூரி திவ்யா சுஜேன் அவர்களுக்கும், கண்ணில் கண்டவற்றைக் காட்சிப்படுத்தி தன் கருத்துக்களையும் அதற்குருபடுத்தி தன்னை இனங்காட்டாது எழுதிவரும் மாதவி, கண்ணா, சிவப்பிரியன் என்ற பெயர்களிலே படைப்புக்களை பகிர்ந்தளிக்கும் வெற்றிமணி ஆசிரியருக்கும் வாழ்த்துக்களை பகிர்ந்து நிற்கின்றேன். இவர்கள் தொடர் கட்டுரைகளை எமக்காகத் தந்துதவு பவர்களாக இருக்க

அவ்வப்போது ஆனால், அதிகமான படைப்புக்களைத் தந்து நிற்கும் விஞ்ஞானத்தில் ஆன்மீகத்தையும் தமிழர் அறிவியலையும் ஆராய்கின்ற சிவவிநோபன் அவர்களுக்கும், மெல்போர்னில் இருந்து கொண்டு இலங்கை அரசியல், நிகழ்வுகள், வாழ்க்கைச் சூழல்கள் பற்றித்தரும் ஜுட் பிரகாஸ் அவர்களுக்கும், கதைகள் மூலம் புலம்பெயர் பெண்களின் பிரச்சினைகளை தெளிவாகக் காட்டுகின்ற எழுத்தாளர் சந்திரவதனா அவர்களுக்கும், இலக்கியக் கட்டுரைகள் தந்துதவும் பேராசிரியர். சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சன்முகதாஸ் அவர்களுக்கும், அரசியல் கலந்த கட்டுரைகளை அள்ளித்தரும் வ.சிவராஜா அவர்களுக்கும், உள்ளத்தைத் தொடும் வரிகளில் உரைநடைக்கவிதைகளைத் தரும் நெடுந்தீவு முகிலன் அவர்களுக்கும், நடைமுறை வாழ்க்கையின் சிக்கல்களை விதந்துரைக்கின்ற அனித்தா செல்வராஜா பூஷன் அவர்களுக்கும், கதைகளின் மூலம் வாழ்வியல் சிக்கல்களை படம்பிடித்துக் காட்டுகின்ற கே.எஸ். சுதாகர் அவர்களுக்கும், நம்மவர் பெருமைகளை இனங்காட்டுகின்ற இலக்கியச் செம்மல் இந்துமகேஷ் அவர்களுக்கும், செல்லும் பாதையிலே காண்பவற்றை சொல்ல வேண்டும் என்று கதை மூலம் சொல்ல வருகின்ற ஏலையா முருகதாஸ் அவர்களுக்கும், சிறுகதைகள் மூலமாக சிந்தனைகளைத் தூண்டும் குரு அரவிந்தன் அவர்களுக்கும், வாழ்த்துக்களை சொல்லி மனம் மகிழ்கின்றேன். இதைவிட அவ்வப்போது வந்து போகும் ஆக்கதாரர்களாக விஞ்ஞானம், அறிவியல், தன்னம்பிக்கைக் கட்டுரைகளைத் தருகின்ற சிவஜெனனி அரவிந்தன் அவர்களும், தகவல்களையும், கவிதைகளையும் தந்துதவுகின்ற நகுலா சிவநாதன் அவர்களும், சமய இலக்கியக் கட்டுரைகள் தரும் கவிஞர் கந்தவனம் அவர்களும்,


தொடர்ச்சி 29ம் பக்கம்







25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்





# பறக்கும் தட்டில் இருக்கும் விஞ்ஞானம்

வாருங்கள் நண்பர்களே இன்று நாம் பறக்கும் தட்டில் ஏறி ஒரு பயணம் செய்வோம். உங்களுக்கு மறக்க முடியாத ஒரு விசித்திர அனுபவத்தைக் கொடுக்கவுள்ள இந்தப் பயணத்திற்கு, விண்வெளியின் விந்தை என்று பெயர்வைப்போம். விண்வெளியின் விந்தைகளில் ஒன்று தான் இந்த பறக்கும் தட்டு. உலகில் விசித்திரமான பல தருணங்கள் உண்டு, வாழும் உயிரினங்கள் அனைத்திற்கும் விதிமுறைகள் உண்டு ஆங்காங்கே விதிவிலக்காய் உள்ள ஒரு சில பொருட்களில் ஒன்று தான் இந்த பறக்கும் தட்டு.

பொருட்கள் எல்லாம் ஏன் மேலிருந்து கீழே வீழ்கின்றது என்று கேள்வி எழுந்த போது பூமிக்கு புவியீர்ப்பு விசையுண்டு என்று கற்றுக் கொண்டான் மனிதன். அந்தப் புவீர்ப்பை எதிர்த்து விசை கொடுத்தால் பறக்கலாம் என்று மனிதன் கண்டுபிடித்தான். ஆனால் இந்தக் கண்டு பிடிப்பிற்கெல்லாம் ஒரு முன்னோடி தான் இந்த பறக்கும் தட்டு. மனிதன் பறவையைப் பார்த்து விமானம் கண்டுபிடித்தான் என்று நாம் அனைவரும் எண்ணிக்கொண்டு இருக்கின்றோம் ஆனால், மனிதன் பறவையைப் பார்த்து பறக்க வேண்டும் என்று ஆசைப்பட்டதுடன், அதற்காக கைகளில் இறக்கையை இணைத்து மலைகளில் இருந்து குதித்து முயன்று மடிந்தான். அப்படி இருக்கும் போதுதான் அவன் கண்களுக்கு பறக்கும் தட்டுக்கள் தெரிந்துள்ளது. இதற்கான ஆதாரங்களாக பல குகை ஓவியங்கள் உண்டு.

இன்று விமானம் உருவாக்குவதற்கு முக்கிய அடிப்படையே பறக்கும் தட்டுக்கள் தான். ஒரு வாகனத்தை உருவாக்கி அதற்குள் அமர்ந்து கொண்டு அந்த வாகனத்தைப் பறக்க வைக்க முடியும் என்று அறிவியலைக் கொடுத்தது இந்தப் பறக்கும் தட்டுக்கள் தான். இன்று விமானம் பறக்க வேண்டும் என்றால், ஓடுதளத்தில் வேகமாக ஓடவேண்டும் அவ்வாறு ஓடி தன் பாரத்திற்கு சமமான வளித்துணிக்கையின் அழுத்தத்தைப் உருவாக்கும் போது வானில் பறக்கும் நிலையை உருவாக்கிக் கொள்ளலாம். அல்லாவிட்டால் உலங்கு வானூர்தி (Helicopter) தன்னுடைய இயங்கும் இறக்கைகளால் சுற்றியுள்ள வளித்துணிக்கைகளை இழுத்து கீழ்நோக்கு அழுத்தும் போது ஏற்படும் அழுத்தத்தால் தன்னுடைய பாரத்தை பூச்சியம் ஆக்கி வளிமண்டலத்தில் மிதக்கும் தன்மையை உருவாக்கி அதன் பின் இரண்டாவது இறக்கையைப் பயன்படுத்தி பயணிக்க ஆரம்பிக்கின்றது. இவையெல்லாம் மனிதன் கண்டுபிடித்த பறக்கும் சாதனங்களில் உள்ள விஞ்ஞானம் ஆனால் பறக்கும் தட்டில் இதெல்லாம் கிடையாது. பறக்கும்தட்டுக்கள் ஓடுதளத்தில் ஓடி எழுந்து பறப்பதில்லை, பறக்கும் தட்டில் மின்விசிறிகளும் இல்லை. அது ஒரு மூடிய கோளம் போன்றது. அதுவும் முழுமையான கோளம் அல்ல. இரண்டு சாப்பாட்டுக்கு கோப்பைகளை இணைத்தால் ஒரு உருவம் ஏற்படுமே அது போன்ற அமைப்பில் இருக்கும் ஒரு பறக்கும் சாதனமே பறக்கும் தட்டு.

இந்தப் பறக்கும் தட்டு எப்படிப் பறக்கின்றது என்ற ஆராய்ச்சியில் பல விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர். அந்தத் தொழில்நுட்பம் மட்டும் கைகூடினால், மனிதன் செலவில்லாமல் பயணத்தை மேற்கொள்ளும் தருணம் உருவாகும். அதற்கு பறக்கும் தட்டை யார் உருவாக்கினார்கள்? எங்கிருந்து வருகின்றது? என்ற அறிவியலைக் கண்டு பிடிக்க வேண்டும்.

**சிந்தனை சிவவினோபன்**

பறக்கும் தட்டு என்றவுடனேயே அடுத்த நொடி நினைவிற்கு வருவது வேற்றுகிரக வாசிகள். ஸ்டீபன் ஹக்கிங்ஸ் (Stephen Hawking) உட்பட பல விஞ்ஞானிகளின் எதிர்வுகூறலின் படி பூமியில் உள்ள மனிதர்களை விட பல மடங்கி அறிவியலில் சிறந்த வேற்றுகிரக வாசிகள் அவ்வப்போது பூமி வந்து செல்கின்றார்கள் என்பது ஆங்காங்கே தகவலாகக் கசிந்தாலும். இதுவரை எந்த ஆதாரங்களும் சமர்ப்பிக்கப் படவில்லை.

1911 இல் காந்தவியல் மட்டும் கதிர்வீச்சுப் பற்றி ஆராய்ச்சி செய்த டெஸ்லா என்ற விஞ்ஞானி ஒரு பறக்கும் சாதனத்தை வடிவமைக்கின்றார் அது அச்சசல் பறக்கும் தட்டுப் போலவே இருக்கின்றது. அந்த அறிவியலை மேற்கொண்டு விரிவாக வடிவமைக்க அனுமதி மறுக்கப்பட்டு அவரின் கண்டு பிடிப்புக்களை முடக்கவும் செய்தாரகள் அக்காலத்தைச் சேர்ந்த அரசியல் ஞானிகள். இப்போது பறக்கும் தட்டு என்றால் என்ன அது எப்படி உருவாகி இருக்கும் என்று ஒரு விரிவான பார்வையை யோசிப்போம் வாருங்கள்.

எம் உலகம் எண்ணுக்கடங்காக கால வயதைக் கொண்டது அதில் மனிதர்கள் நாம் இப்போது அறிவுஞானம் பெற்று, சில ஆயிரம் வருடங்களைத் தான் ஊகித்துக் கண்டு பிடித்து வைத்துள்ளோம். ஆகவே இராட்சத உயிரினங்கள்(டைனோசர்) வாழ்ந்த காலத்தில் என்ன நடந்தது அதற்கு முன் என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள முடியாத சோக நிலையில் உள்ளோம். இவற்றை மனிதன் வாழ்ந்த குகை ஓவியங்கள் எஞ்சியுள்ள எச்சக் கூறுகளின் உதவியுடன் கற்பனை வடிவமாக கணித்து வருகின்றோம். உதாரணத்திற்கு இப்படி யோசித்துப் பாருங்கள் ஒரு 10 பேர் கொண்ட குழு விண்வெளிக்குச் செல்கின்றது சென்ற அனைவரும் மிகப் பெரும் அறிவியல் மேதைகள். அவர்கள் சென்ற அந்தக் கால கட்டத்தில் உலகில் மாபெரும் அழிவு ஏற்பட்டு உலகமே அழிந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம், ஒரு 10 வருட காலம் கழித்து கடின முயற்ச்சியின் பயனாக மீண்டும் பூமிக்கு வருகின்றார்கள் ஆனால் பூமியில் அனைவரும் அழிந்து விட்டார்கள். ஒரு சில காட்டுவாசிகள் தான் எஞ்சியுள்ளார்கள் என்றால், அவ்வாறு எஞ்சியுள்ள காட்டுவாசிகளுக்கு விண்ணில் இருந்து வந்தவர்களை பார்க்கும் பொது ஆச்சரியமாக இருக்கும் அவர்களை ஓவியமாகத் தீட்டி வைப்பார்கள். விண்வெளி ஆராய்ச்சி முடித்து மீண்டும் பூமி திரும்பிய அந்த விஞ்ஞானிகளுக்கு அறிவியல் ஞானம் இருந்தாலும் அதை செயல்படுத்த போதிய உலோகங்கள் மட்டும் சாதனைகள் இல்லாததால் தங்கள் விஞ்ஞானக் குறிப்புக்களை வாய்வழியாகவும் புத்தகங்களாகவும் எழுதி வைப்பார்கள். கால ஓட்டத்தில் 2000 அல்லது 3000 ஆண்டுகளுக்குப் பின் வரும் தலைமுறைகள் அதை ஆதாரமாக வைத்து கண்டு பிடிப்புக்களை செய்யும். இப்போது புரிகின்றதா எப்படி பறக்கும் தட்டுக்கள் உருவாகியிருக்கும் என்று? இவை அனைத்தும் எம் முன்னோரின் கண்டுபிடிப்புக்களாக இருப்பதற்கு பல வாய்ப்புக்கள் உண்டு ஆகவே எம்முடைய பழமையை நாம் மறக்காமல் மறைக்காமல் தேடிக் கற்றுக்கொள்ள வேண்டும்.முன்னோரின் விஞ்ஞானத்தை முயன்று கற்றுக்கொள்வோம்.






## தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரி





## நீர்வேலியில் இளவாளை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டிகள்

வலி கிழக்கில் மீளவும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டிகள் தடையின்றி நடைபெற்றன கடந்த வருடங்களில் விலங்குகள் சித்திரவதையைக் காரணம் காட்டி தடுக்கப்பட்டிருந்த வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தின் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டிகள் மீளவும் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாடுகள் எவ்வகையிலும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்துடனேயே இப் போட்டிகள் சர்ச்சைகள் இன்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை மலை (24.06.2018) நடைபெற்றுள்ளன.

வலிகாமம் கிழக்குப் பகுதியில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டிச் சவாரிப்போட்டிகள் கிரமமாக நடைபெற்று வந்தன. எனினும் கடந்த ஆண்டுகளில் மாட்டுவண்டிச் சவாரிகளின் போது மாடுகள் சித்திரவதை செய்யப்படுவதாக விலங்குகள் ஆர்வலர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டமையினைச் தொடர்ந்து பொலிசாரின் தலையீடுகளை அடுத்து போட்டிகள் தடைப்பட்டிருந்தன.
எனினும் இவ் வருடத்திற்கான சவாரிப்போட்டிகள் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் ஆகியோர் பல்வேறு மட்டங்களுடனும் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சிகளை அடுத்து குழப்பங்களுக்கு இடமின்றி நீர்வேலி தரவையில் மாட்டுவண்டிச் சவாரி கழகத்தின் தலைவர் கிரி தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. மட்டுவில் வீரபத்திரர் ஆலயத்தின் வளர்ச்சி நிதிக்காக நடைபெற்ற இப்போட்டிகளை பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்தன் ஆரம்பித்து வைத்தார். சுமார் 52 சோடிக் காளைகள் போட்டியிட்டன. ஏ,பி,சீ,டி என பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இப்போட்டிகள் நடைபெற்றன. ஏ பிரிவில் முதலாம் இடத்தினை மட்டுவிலைச் சேர்ந்த மனோகரனின் காளைகளும் பீ பிரிவில் வட்டுக்கோட்டையினைச் சேர்ந்த சுபாஸ்கரனின் காளைகளும் சீ பிரிவில் முதலாம் இடத்தினை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த விக்னேஸ்வரனின் காளைகளும் டி பிரிவில் முதலாம் இடத்தினை வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சற்குணத்தின் களைகளும் பெற்றன. இவ் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கான பரிசில்களை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், நீர்வேலி பிரதேச பிரதேச சபை உறுப்பினர் செல்வம் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

மேலும் நீர்வேலியில் இளவாளை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டிகள் நேற்று (22.07.2018) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. இப் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராகக் தியாகராஜா. நிரோஷன் கலந்துகொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.




25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# வயோதிபம் வாழ்வில் வாராமல் போகுமா!






**கௌசி**

அழகு எதில் இருக்கின்றது என்றால், அது பார்ப்பவர் கண்களில் இருக்கின்றது. இளமையும் அழகுதான் முகத்தில் ரேகை படர்ந்த முதுமையும் அழகுதான். வாழ்வது அவசியமென்றால், முதுமையையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வதும், ஆதரிப்பதும் அவசியமே. முதுமை அருகே இருப்பது இளமைக்கு தொந்தரவு என்று நினைப்பதும், முதுமையைப் பாதுகாக்க இளமைக்கு காலம் கைகொடுக்கவில்லை என்று இளையவர்கள் கலங்குவதும், பிள்ளைகள் மகிழ்ச்சிக்கு இடையூறு எம்மால் வந்து விடக்கூடாது என்றும், அமைதியாக யார் தொந்தரவும் இன்றி வாழவேண்டும் என்றும், இல்லை கடைசி காலத்தில் கலகலப்பாக பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி விளையாடி நான் வாழவேண்டும் என்று முதுமை நினைப்பதும் அவரவர் மனநிலையையும் வாழ்ந்த சூழலையும் பொறுத்தது.

வயதானவர்கள் என்னும் போது தமது வேலைகளைத் தாமே செய்து கொண்டு தமது பிள்ளைகளுக்கு தம்மாலான உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்ற வயதானவர்கள் என்றும், தம்மால் தமது வேலைகளைச் செய்யமுடியாது, சுயமாக நடந்து திரியமுடியாது, தமது உணவுகளைத் தாமே எடுத்து உண்ணமுடியாது, தமது நினைவுகளை இழந்து காணப்படுகின்ற முதியவர்கள் என்றும் இரண்டுவிதமாக வேறுபிரித்துப் பார்க்கலாம்.

வயதானவர்களை இளையவர்கள் தம்மோடு வைத்திருந்தால், அவர்கள் தொழில் ரீதியான வளர்ச்சிக்கும் பிள்ளைகளின் உடல் அறிவு வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்பது உண்மை. அதுகூட பிள்ளைகளின் சொந்த பிரச்சினைகளுக்குள் தலையிடாத வரையிலேயே சாத்தியமாகும். பிள்ளைகள் திருமண பந்தத்துள் இணைந்து தமக்கென ஒரு குடும்பத்தை உருவாக்கியபின் பெற்றோர்கள் உண்மையில் அவர்கள் வாழ்க்கையில் இரண்டாம் பட்சம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு பெற்றோருக்கும் கடமையாக இருக்கின்றது. இவ்வாறான வயதானவர்களில் சிலர், தமக்கென்று ஒரு பொழுதுபோக்கை வைத்திருக்கும் பட்சத்தில் அவர்கள் பேரப்பிள்ளைகளே தமக்குப்பாரமாகக் கருதுகின்ற மனநிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது. ஒரு குழந்தை ஒரு இடத்தில் நீண்ட நேரம் விளையாடாதது போலவும், ஒரு கதையைத் திருப்பித் திருப்பிக் கதைப்பது போலவும் வயதானவர்கள் எவ்வளவு நேரம்தான் பிள்ளைகளுடன் விளையாடுவது, அவர்களின் வேலைகளைச் செய்வது எமக்கென்றும் ஓய்வுதேவை என்று கூறுகின்ற வயதானவர்கள் இருக்கவே செய்கின்றார்கள்.

தாம் வளர்வதற்கும் தாம் கற்பதற்கும் தமது உடல்நிலை உறுதியாவதற்கும் தமக்கென ஒரு சிறப்பான வாழ்க்கை வாழ்வதற்கும் பெற்றோரைப் பயன்படுத்தும் பிள்ளைகள் தமக்கென ஒரு வாழ்க்கை அமைந்தபின் தேவைப்படாத பொருளை தூக்கி எறிவதுபோல் எறிந்துவிடுவது அல்லது சுமையாக எண்ணுவது வழமையாகப்படுகின்றது. காலச்சுழற்சியில் என்றோ ஒருநாள் எல்லோரும் மறையத்தான் போகின்றார்கள். இளையவர்கள் பிரிந்தபின் கலங்குவதைவிட வாழப்போகும் சிறிதுகாலமாவது அவர்களைச் சகித்துக் கொள்வோம் என்று நினைக்க வேண்டியது அவசியம். எதிர்காலத்தில் தமது நிலை என்ன என்று சிந்தித்துப் பார்த்தாலே பெற்றோரைத் தவிக்கவிடும் பிள்ளைகள் திருந்திவிடுவார்கள்.

திருமணம் செய்து பிள்ளைகளைப் பெற்று அதன்பின் பிள்ளைகளுக்காக வாழ்ந்து அதன்பின் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்தபின் நிம்மதியாகக் கணவனுடன் ஒருவருக்கொருவர் துணையுடன் வாழ நினைக்கும் தம்பதிகள் தமது பிள்ளைகளுக்காக தமது துணையைத் தவிக்கவிட்டுவிட்டு தமது பிள்ளைகளின் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பை தலைமேல் கொண்டு அவர்களுடன் சென்று விடுகின்றனர். மீண்டும் அந்த ஆண் தன் பாலிய வயதுத் தனிமைக்குத் திரும்புகின்றான். இதுவும் சுகமே என்று சொல்லும் கணவன்மார்களுக்கும் ஒரு கையை இழந்த துயரம் இருக்கவே செய்யும்.

ஒரு வயதானவர் இறந்தால் ஒரு நூலகம் அழிகின்றது என்பது உண்மை. அனுபவம் கற்றுத்தரும் பாடம் எந்த ஆசானும் கற்றுத் தருவதில்லை. அதனாலேயே பேரப்பிள்ளைகளைத் தமது பெற்றோரிடம் வளர்க்கப் பிள்ளைகள் கொடுக்கின்றார்கள் என்று சொன்னால், அது நிச்சயமாக இல்லை. இப்போதும் பிள்ளைகள் பெற்றோரைப் பயன்படுத்து கின்றார்கள் என்பதுவே உண்மை. ஆனாலும், தாய் மனமோ தந்தை மனமோ வலிகளைத் தாங்கி வரங்களைக் கொடுக்கின்றார்கள் என்பதுவே உண்மை.

தமது எண்ணங்களைத் துலைத்து, நடக்கத்துணை, இருக்கத்துணை, உணவு உண்ணத்துணை என்று துணையில்லாமல் வாழமுடியாத வயதானவர்களை வீட்டில் வைத்திருக்க முடியுமா? இது இன்றைய கேள்வி. முடியும் என்று மனதால் நினைப்போர் அதற்கான வழிகளைத் தேட வேண்டியது அவசியம்.

ஜேர்மனியைப் பொறுத்தவரையில் பணம் இருந்தால் பல நிறுவனங்கள் கைகொடுக்கின்றன. மருத்துவக் காப்புறுதி நிறுவனத்தின் பங்களிப்புடன் பெற்றோருக்காகச் சிறு தொகையை பிள்ளைகள் வழங்கினால், வீட்டிற்கு வந்து வயதானவர்களுக்குப் பல துறைகளில் உதவி வழங்க இந்நிறு வனங்கள் கைகொடுக்கின்றன. உடற்பயிற்சி, மூளைத் தொழிற்படுவதற்கான பயிற்சி, நடைப்பயிற்சி, உணவு தயாரித்துக் கொடுத்தல், சரியான நேரத்திற்கு மருந்து மாத்திரைகளைக் கொடுத்தல், காற்று வாங்கக் கூட்டிக்கொண்டு போதல், அவர்களுக்கு விருப்பமானவற்றை வாசித்து விளக்கம் கொடுத்தல், நினைவுகளைத் திரும்பக் கொண்டுவருவதற்கான பயிற்சிகளைக் கொடுத்தல், மருத்துவரிடம் கூட்டிக் கொண்டு போதல், ஆலயம் அழைத்துச் செல்லுதல் போன்ற உதவிகளைத் தமது கண்காணிப்பிலே செய்யக் கூடிய வசதி வாய்ப்புக்களைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளலாம்.

எங்கள் வீட்டில் எங்கள் பெற்றோருக்கு இடமில்லை என்று நினைப்பவர்கள் வேறு ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொடுத்து இவ்வாறான வசதிகளைச் செய்து கொடுக்கலாம். தேவையேற்படும் போது மட்டும் பெற்றோரைப் போய்ப் பார்க்கலாம். அதுவும் இல்லையென்றால், வயோதிபர் மடங்களில் சேர்த்து விடலாம். தாயைப் பார்ப்பதுபோல் தெய்வங்களாகப் பவனி வரும் எத்தனையோ தாதிகள் இவ்விடங்களில் பணிபுரிகின்றார்கள். அங்கும் தமது பொறுமையைச் சோதிக்கும் வயதா னவர்களை சரியான முறையில் பார்க்காத தாதிகள் உண்டு என்று பிறர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனாலும், ஆதரவற்று பிள்ளைகளின் நச்சரிப்பில் மனவலியுடன் வாழ்வதைவிட தாதிகள் மேலானவர்கள் அல்லவா!

வாழ்க்கையின் பூரணத்துவம் நாம் பெற்ற பிள்ளைகளுடன் முடிவதில்லை. தமது பிள்ளைகளைக் கொஞ்சி விளையாடிய சுகம் திரும்பவும் பேரப்பிள்ளைகளைக் கொஞ்சுவிளையாடுவதற்கு இயற்கை கொடுக்கும் வரம் இந்த சுகம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அந்தக் கன்னங்களின் அழகு, பஞ்சு உடலின் ஸ்பரிசம், அக்குழந்தைகளின் சுட்டித்தனம், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு அரவணைப்போடு கொடுக்கும் பதில்கள் இவையெல்லாம் நாம் வாழ்ந்த வாழ்வின் பூரணத்துவம் என்பதுடன் சொர்க்கம் என்பதையும் வயதானவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். சுகம் என்று நினைத்தால் சுகம். தொல்லை என்று மனம் நினைத்தால், அது தொல்லை.



Frankfurt நகரில்....

# புதுப்பொலிவுடன் மீண்டும் உங்கள் அபிமான ஸ்தாபனம்

21.07.2018 நடைபெற்ற
எமது மகத்தான திறப்பு விழாவிலும்
மாபெரும் மலிவு விற்பனையிலும்
கலந்து ஆதரவளித்த
அபிமான வாடிக்கையாளர்களுக்கு
எங்கள் இதயம் கனிந்த நன்றி!

Jaffna Bazar



## Jaffna Bazar

உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான மரக்கறி
மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்

வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்



Kaiser Straße.49 69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 e.mail:jbspiece2018@yahoo.com

0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425



# சாக்கலேட் சாப்பிடுவதனால் ஏற்படும் நன்மைகள் என்ன?

## அதிசய உலகம்

Dr.நிரோஷனின்

என்னைக் கேட்டால் கிண்டர் (Kinder) சாக்கலேட்ஸ் என்றால் எனக்கு மிகவும் பிடிக்கும்! உண்மை சொல்லப்போனால், சாக்கலேட் பிரியன் என்றே என்னைக் கூறலாம். அதே போன்று உங்களிலும் பலர் இருப்பார்கள். ஆனால் இதில் இருக்கும் ஒரே ஒரு பிரச்சனை என்னவென்றால், சாக்கலேட் சாப்பிடுவது நமது உடலுக்கு கேடு விளைவிக்கின்றது என்று பொதுவாக எல்லோருமே சொல்வார்கள். ஆனால் சாக்கலேட் சாப்பிடுவது கேடு விளைவிக்காது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். அட இந்த நல்ல செய்திக்குப் பின்னால் அப்படி என்ன தான் இருக்கிறது என்று நீங்களும் அறிய விரும்பினால், கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்!

சாக்கலேட் நமது உடலுக்கு கேடு விளைவிக்கின்றது என்று பலர் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், அதிலிருக்கும் கொழுப்புச் சத்தின் அளவும், அதனை உட்கொள்வதால் முகப்பரு, உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்றவற்றை நம்மைத் தாக்கிவிடும் என்கிற தவறான கருத்துகளேயாகும். ஆனால் உங்களுக்கு ஒன்று தெரியுமா? கொஞ்சக் காலங்களுக்கு முன்பு நடாத்தப்பட்ட ஆராய்ச்சியில் சாக்கலேட்டை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் "கொக்கோ" செடியில், உயிரியல் ரீதியாகச் செயல்படும் பினோலிச் சேர்மம் (biologically active phenolic compounds) இருப்பதாகத் தெரிய வந்துள்ளது. இச்சேர்மம் சருமத்தை இளமையாக வைத்துக் கொள்வதோடு, மன அழுத்தத்தையும் தடுக்க உதவுகின்றது.

இதைத் தவிர்த்து, இந்தக் கொக்கோ சீரான இரத்த ஓட்டத்திற்கும், கெட்ட கொழுப்பின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் உதவுகின்றது. மேலும் சாக்கலேட் சாப்பிடுவதால் நல்ல ஞாபக சக்தியையும் பெறலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர், நம்ப முடிகின்றதா? அட இது எல்லாமே போதாது என்று, இருதய மற்றும் பக்கவாத நோய்களைத் தடுக்கும் வல்லமையையும் இந்தச் சாக்கலேட்டிற்கு உள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

நண்பர்களே, இதை நான் அறிந்ததும், அட எனக்குப் பிடித்த அந்த சாக்கலேட்டில் இவ்வளவு நன்மைகள் மறைந்து இருக்கின்றனவா என்று என்னை அறியாமலே எனக்குள் அப்படி ஒரு சந்தோஷம் வந்து விட்டது. இருந்தும் இதில் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் இருக்கிறது. அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சுபோல் இந்த சாக்கலேட்டையும் அளவுடன் சாப்பிடும் வரை தான் அது எங்களுக்கு நன்மையைத் தரும்! எனவே, அளவாகச் சாப்பிடுங்கள்! அப்படிச் சாப்பிட்டு விஞ்ஞானிகள் கூறுவது போல், நீண்ட நாட்களுக்கு இளமையாகவும், ஆரோக்கியமாகவும் வாழலாம்!

சரி, நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். நீங்களும் என்னைப் போல் ஒரு சாக்கலேட் பிரியனா? உங்களுக்குப் பிடித்த சாக்கலேட் எது? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

## இரத்தினத்திற்கும் மாணிக்கத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?



உங்கள் எல்லோருக்குமே இரத்தினம் அதாவது sapphire மற்றும் மாணிக்கக்கல், அதாவது ruby எனப்படும் இரு கற்களை நன்றாகவே தெரிந்து இருக்கும், அது சரி தானே? இதிலும் இரத்தினம் கரு நீல நிறத்திலும், மாணிக்கம் சிவப்பு நிறத்திலும் உள்ளது என்பது மட்டும் இல்லாமல், இரு கற்களுமே விலை உயர்ந்த கற்கள் என்பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆனால் பலருக்குப் பொதுவாகத் தெரியாத ஒரு விஷயம் என்ன தெரியுமா? இந்த இரு கற்களும், உண்மையிலே ஒரே வகையைச் சேர்ந்த கற்கள் ஆகும். என்ன ஆச்சரியமாக இருக்கிறதா?

அது எப்படி இரு விதமான, அதுவும் குறிப்பாக வெவ்வேறு நிறத்தைக் கொண்ட கற்கள், ஒரே வகையைச் சேர்ந்த கற்களாக இருக்க முடியும் என்று கேட்கின்றீர்களா? அது புரிவதற்கு, முதலில் குருந்தம் அதாவது corundum என்றால் என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

தொடர்ச்சி 19ம் பக்கம்







யேர்மனி
குமஸ்பார்க்
குறிஞ்சிக்குமரன்
தேர்த் திருவிழா
01.07.2018
படங்கள்: வெற்றிமணி







## நீயே என் நின்மதி - 01

**நெடுந்தீவு முகிலன்**

இப்போதும் எப்போதும்
நான் பெருமையாய் சொல்லிக் கொள்ள
எனக்கு ஒரு தோழன் இருக்கிறான்.

யார் என்னை விலகி
போனாலும் - அவன்
என்னை விட்டு இருக்கவே மாட்டான்

வராதே போதும் நீ போ என
நான் சொன்னாலும் - எனது பேச்சை
கேட்க்காமல் மீறி வந்து விடுவான்.

அவனுக்கும் எனக்குமான உறவு தொடர்பு
எவ்வளவு காலம் என்று கூட எனக்கு
நினைவில் இல்லை...
அவனைப் போல் எனக்கு ஆறுதல் சொல்லவும்
எவராலும் முடியாது.
என்னோடே அவன் நிறைய பழகி கொண்டதால்
அவனை பிரிந்திருக்க நானும் விரும்பு வதில்லை..

முன்னறிவிப்பு இன்றி சொல்லாமல் கொள்ளாமல்
அவ்வப்போது வந்து நிற்பான்

நான் எல்லாம் சொல்லி அழுவதும்
அவனிடம் மட்டுமே

அவன் பெயரை சொல்லவே எனக்கு
கண்ணீர் வருகிறது - அவன்
பெயரும் கண்ணீர் தான்.

## நான் ஒரு நெருப்பு - 02

நான் ஒரு நெருப்பு இதுவரை
எவரும் என்னை அணைத்ததில்லை - இப்போது
நான் பலரை எரிக்க போகிறேன்.

என்னை எண்ணை ஊற்றி வளர்க்கவோ
தண்ணீர் தெழித்து அழிக்கவோ - இனி
யாராலும் முடியாது.
திரியில் உருகி போனாலும்
தீபமாய் ஒளிர்ந்திருக்கிறேன்.
கருகி புகையாய் மேலெழுந்த போதும்
தராளமாக வெளிச்சத்தை பரப்பியிருக்கிறேன்.

என் வெப்பத்தை தாங்காதவர்கள் பொசுங்கி
போனாலும் ஞாபகமாய் - சாம்பலை
விட்டு போகிறார்கள்.

தற்சமயம் சூடு தணியும் சூழ்நிலையில்
நானில்லை பிரகாசிக்க தொடங்கி விட்டேன்.

ஒன்றை மட்டும் சொல்லி கொள்கிறேன்

**ஒரு போதும் எனக்கு
தலை கீழாய்
எரியத் தெரியாது.**




**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de

# காலத்தால் அழியாத கானங்கள்:
# எங்கிருந்தோ ஆசைகள்!

நவரத்தினம். கிரிதரன்



▲ 'சந்திரோதயம்' படத்தில்...

காலத்தால் அழியாத இன்னுமொரு கானம் இந்தக் கானம். எம்.எஸ்.வி இசையில் டி.எம்.எஸ் ∴ பி.சுசீலாவின் இளங்குரல்கள் கேட்பவரை வசியப்படுத்திவிடும் வல்லமை மிக்கவை. எம்ஜிஆர்.∴ ஜெயலலிதாவுக கிடையிலான "இரசாயனம்" நல்லாத்தான் வேலை செய்கின்றது. கவிஞர் வாலியின் பாடல் வரிகளும் சிறப்புமிக்கவை.

பாடலின் இடையில் "என்னென்ன சுகம் வருமோ? " என்றொரு வரி வரும். அதனைத்தொடர்ந்து டி.எம்.எஸ் (திரையில் எம்ஜிஆர்) "தேவி...!" என்று குரலில் காதலைக் குழைத்து அழைத்திருப்பார். எம்ஜிஆரின் குரலா அல்லது டி.எம்.எஸ்ஸின் குரலா என்று வித்தியாசம் தெரியாத அளவுக்கு எம்ஜிஆருக்கு அவரின் குரல் பொருந்தியிருக்கும். பாடலில் எனக்கு மிகவும் பிடித்த பகுதிகளில் அதுவுமொன்று.

பிடித்த வரிகள்:


" எங்கிருந்தோ ஆசைகள்!
எண்ணத்திலே ஓசைகள்!
என்னென்று சொல்லத் தெரியாமலே
நான் ஏன் இன்று மாறினேன்? "

படம்: சந்திரோதயம்: இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்:
பாடல் வரிகள்: கவிஞர் வாலி: பாடகர்கள்: டி.எம்.எஸ் / பி.சுசீலா
www.youtube.com/watch?v=pF7jMNsrl1c




எங்கிருந்தோ ஆசைகள்!
எண்ணத்திலே ஓசைகள்!
என்னென்று சொல்லத் தெரியாமலே
நான் ஏன் இன்று மாறினேன்?
எங்கிருந்தோ ஆசைகள்!
எண்ணத்திலே ஓசைகள்!
என்னென்று சொல்லத் தெரியாமலே
நான் ஏன் இன்று மாறினேன்?

ஆசை வரும் வயது உந்தன் வயது!
பேசும் இளமனது எந்தன் மனது!
ஆடவன் பார்வையில் ஆயிரம் இருக்கும்!
மாதுளம் நாளொரு தூதுகள் அனுப்பும்!
என்னென்ன சுகம் வருமோ? தேவி...!
எங்கிருந்தோ ஆசைகள்! எண்ணத்திலே ஓசைகள்!
என்னென்று சொல்லத் தெரியாமலே
நான்தான் உன்னை மாற்றினேன்!




மாலை வரும் மயக்கம் என்ன மயக்கம்?
காலை வரும் வரைக்கும் இல்லை உறக்கம்!
பூவிதழ் மேலொரு பனித்துளி இருக்க!
நான் அதைப் பார்க்கையில் நூலென இளைக்க!
என்னென்ன அதிசயமோ?

சந்தித்ததோ பார்வைகள்!
தித்தித்ததோ நினைவுகள்!
மையலை சொல்லத் தெரியாமலே
ஏன் ஏன் இந்த கேள்விகள்?

நன்றி: Giritharan Navaratnam முகநூலில் இருந்து

17 ம் பக்கத் தொடர்ச்சி

## இரத்தினத்திற்கும் மாணிக்கத்திற்கும்

Corundum என்கிற ஆங்கிலச் சொல்லே தமிழ்ச் சொல் ஆகிய குருந்தம் அல்லது குருவிந்தம் என்கிற சொல்லில் இருந்து தான் வந்து இருக்கிறது. இந்தக் குருந்தம் என்பது அலுமினியம் ஒக்சைட்டின் படிம வடிவமாகும். இது நிறம் இல்லாததாக இருந்தாலும், அது அசுத்தம் அடைவதால் பல வண்ணங்களைப் பெறுகிறது. இந்தக் குருந்தம் சிவப்பு நிறத்தில் இருந்தால், அதை நாம் மாணிக்கம் என்கிறோம். இதே குருந்தம் இளஞ்சிவப்பு-ஆரஞ்சு நிறத்தில் இருந்தால், பட்பராட்ச்சா (padparadscha) என்று அழைக்கின்றோம். மீதி இருக்கும் அனைத்து வண்ணக் கற்களையும் இரத்தினம் என்று தான் கூறுகின்றோம்.

எனவே, இரத்தினம் நீல நிறத்தில் மட்டும் இருப்பதில்லை. இது பச்சை நிறத்தையும் சேர்த்து, பல வண்ணங்களில் இருக்கின்றது. குருந்தம் நகை போன்றவற்றை அழகு படுத்த மட்டும் உபயோக்கிப்படுவதில்லை. அதனது கடினத்தன்மை காரணத்தால், அது கிட்டத்தட்ட அனைத்துத் தாதுப் பொருள்களையும் வெட்டக் கூடிய பொருள் ஆகும். இந்தக் குருந்தம் ரஷ்யா, ஜிம்பாப்வே, இலங்கை மற்றும் இந்தியாவில் வெட்டியெடுக்கப் படுகிறது. எனவே, நிறம் வேறு வேறதாக இருந்தாலும், இந்தக் கற்களின் கரு ஒன்றாகத் தான் இருக்கிறது. இது ஆச்சரியமாக இல்லையா?

சரி, நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள். இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரிந்ததா? இதற்குரிய பதிலை மட்டும் இல்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யோ்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Chilli Mixx
Catering
உங்கள் மங்கலகர வைபவங்கள்
சுவைபெற எம்மை அழையுங்கள்!
திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298
+49 176 21303158




# உன் வீட்டுக்குள் ஓர் உளவாளி

## செல்பி மோகத்திற்கு விழுந்த முதல் அடியும்! சவாலும்!!!

எல்லா விசைக்கும் சமமான எதிர் விசை உண்டு எனும் நியூட்டனின் விதி தொழில்நுட்ப உலகிலும் நிஜமாகவே இருக்கிறது. கடந்த ஆண்டு "மிகவும் பாதுகாப்பானது" என நினைத்த விஷயங்கள் இந்த ஆண்டு பாதுகாப் பற்றவையாய் மாறியிருக்கின்றன. இப்போது பாதுகாப்பானவையாய் தோன்றும் பல விஷயங்கள் நாளை பாதுகாப்பு இல்லாதவையாக மாறிவிடும் . தொழில்நுட்பம் நாலுகால் பாய்ச்சலின் முன்னோக்கிச் செல்லும் போது அதை எட்டு கால் பாய்ச்சலின் வேகத்தில் பின்னுக்கு இழுக்கின்றன புதுப் புது சவால்கள்.
ஸ்மார்ட் போனில் தகவல்களைத் திருடுவார்கள், வைரசைப் புகுத்துவார்கள், பாஸ்வேர்டைத் திருடுவார்கள் போன்றவிஷயங்களெல்லாம் இன்று பழைய சங்கதிகளாகி விட்டன. திருடர்கள் எல்லாம் நவீன தொழில்நுட்பத்தின் அதி நவீன அம்சங்களுடன்தான் நமது ஸ்மார்ட் போனை அணுகுகின்றனர்.

இன்றைக்கு பாதுகாப்பு என்பது பாஸ்வேர்ட், பேட்டர்ன் என்பதைத் தாண்டி பயோ மெட்ரிக் வகைக்குத் தாவியிருக்கிறது.கைவிரல்பதிவைக் கொடுத்தால் போன் திறந்து கொள்ளும். அல்லது நம்முடைய முகத்தைக் காட்டினால் திறந்து கொள்ளும் எனும் வகையில் தான் இன்றைய ஸ்மார்ட்போன்கள் வடிவமைக்கப்படுகின்றன.
இன்னும் சில ஸ்மார்ட்போன்கள், அப்ளிகேஷன்கள் குரலை வைத்து இயங்குகின்றன. "அண்டா காகாசம் அபூ காகூகும் திறந்திடு சீசே" என்று சொன்னால் கதவு திறப்பது இப்போது பூதங்களின் கதையல்ல. தொழில்நுட்பத்தின் கதை.
ஓகே கூகிள் என்றால் கூகிள் விழித்தெழுகிறது, ஹேய் அலெக்ஸா என்றால் அலெக்ஸா விழித்தெழுகிறது என குரலை வைத்து கருவிகள் செயல்படும் காலம் இது. விரலுக்கும் குரலுக்கும் இடையே தான் பெரும்பாலான பாதுகாப்பு அம்சங்கள் இன்றைக்கு பயணித்துக்கொண்டிருக்கின்றன எனலாம்.

இந்த பாதுகாப்புக்கு உள்ளே தான் நமது ஸ்மார்ட் போன் இருக்கிறது. நமது ஸ்மார்ட் போனுக்கு உள்ளே தான் நம்முடைய வங்கிக்கணக்குகள் இருக்கின்றன, நமது தனிப்பட்ட தகவல்கள் இருக்கின்றன, நமது பணப்பரிமாற்றத் தகவல்கள் இருக்கின்றன. யாராவது இந்தப் பாதுகாப்பு வளையத்தை உடைத்து விட்டால் நமது முக்கியமான தகவல்களெல்லாம் இன்னொருவர் கைக்குப் போய்விடும் என்பது சர்வ நிச்சயம்.
இப்போது பாதுகாப்பை உடைக்க நினைப்பவர்களெல்லாம் இந்த மூன்று ஏரியாக்களில் தான் கவனம் செலுத்துகிறார்கள். நமதுகைரேகை, கண்கள், குரல் !
அப்படித் தேடுபவர்களுக்கு லட்டு போல கிடைக்கிறது செல்பிக்கள். செல்பிக்கென சர்வதேசம் உருவாக்கி வைத்திருக்கும் ஸ்டைலில் விரல்களை அப்படியும் இப்படியும் உயர்த்திப் பிடிக்கிறது இளைய சமூகம். அந்த




### உங்கள் வீட்டுக்குள்ளேயே உளவாளி

புகைப்படங்களிலிருந்து கைரேகையைப் பிரித்தெடுக்கக் கற்றிருக்கிறது தொழில்நுட்ப திருடர் கூட்டம்.

இப்படி ஒரு அச்சுறுத்தல் இருப்பதை உலகுக்கு முதலில் சொன்ன பெருமை ஜப்பானைச் சேர்ந்த "ஷங்காய் ஷிம்பன்" எனும் பத்திரிகைக்குத் தான் சொந்தம். இன்றைக்கு பல நிறுவனங்கள் தங்களுடைய ஊழியர்களை பயோ மெட்ரிக் அங்கீகாரத்தின் மூலம் தான் நிறுவனத்துக்குள் அனுமதிக்கின்றன. கை விரலை வைத்தாலோ, கண்ணைக் காட்டினாலோ, முகத்தைக் காட்டினாலோ கதவு திறக்கும் வகையில் தான் இன்றைய பயோ மெட்ரிக் சோதனைகள் இருக்கின்றன.

இணைய தளங்களில் புகைப்படங்கள் போஸ்ட் செய்யும் போது அதிலிருந்து முகம், கண்கள் போன்றவை திருடர்களால் பயன்படுத்தப்படலாம். அதே போல புகைப்படங்களில் விரல்கள் தெளிவாகத் தெரிந்தால் அதிலிருந்து கைரேகையைப் பிரித்தெடுத்து போலியாக உருவாக்கலாம் என அந்த நாளிதழ் கட்டுரை வெளியிட்டிருந்தது.
நாம் எடுக்கின்ற செல்பியைத் தாண்டி, இன்றைக்குக் கிடைக்கின்ற ஹை டெ∴ப்னிஷன் கேமராக்கள் மூலமாக யார் வேண்டுமானாலும் நம்மையோ, நமது ரேகையையோ நம்மை அறியாமல் புகைப்படம் எடுத்து விட முடியும். அது நமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாய் மாறவும் முடியும்.

சமீபத்தில் இதை வெற்றிகரமாக செய்தும் பார்த்து விட்டார்கள். ஒரு செல்பியிலிருந்த கைவிரல் ரேகையை காப்பியடித்து பாதுகாப்பு வளையத்தை வெற்றிகரமாக உடைத்தும் காட்டி விட்டார்கள்.

### செல்பி மோகத்திற்கு ....




நாம் விளையாட்டாய் எடுக்கின்ற செல்பிக்கள் நமது பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாய் மாறியிருக்கிறது. அது போல நாம் பேசுகின்ற வார்த்தைகளை அப்படியே எடுத்து அதைக் கொண்டு பாதுகாப்பு வளையங்களை உடைப்பதும் இப்போது சாத்தியமாகியிருக்கிறது. டார்க் வெப் எனும் தளத்தில் சட்ட விரோத பரிவர்த்தனைகள் நடப்பதுண்டு. அதில் சில மாதங்களுக்கு முன்பு ஒரு இலட்சம் தனிநபர் தகவல்கள் ஐம்பதாயிரம் டாலருக்கு விற்கப்பட்டதாய் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த தகவல்கள் அனைத்துமே செல்பி புகைப்படங்களோடு இணைக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



# செல்பி மோகத்திற்கு .....



## உன் வீட்டுக்குள் ஓர் உளவாளி

இப்போது ஆன்ட்ராய்டின் ஓகே கூகிள், ஆப்பிள் தயாரிப்புகளின் சரி, அமேசானின் அலெக்ஸா போன்றவற்றையெல்லாம் ஸ்மார்ட்போன்களின் பயன்படுத்தி வருகிறோம். அவையெல்லாம் 'கூட இருந்து குழிபறிக்கும் வில்லன்களாக' மாறியிருக்கின்றன,

நவீன தொழில்நுட்பம் நமது வீடுகளில் கொண்டு சேர்த்திருக்கும் இன்னொரு விஷயம் ஸ்மார்ட் மெஷின்கள். அமேசான் எக்கோ, கூகிள் ஹோம் போன்றவையெல்லாம் நமது வீட்டு வரவேற்பறைகளில் நுழையத் துவங்கியிருக்கின்றன. ஆர்ட்டிபிஷியல் இன்டெலிஜென்ட் மற்றும் மெஷின் லேர்னிங் நுட்பங்களோடு வந்திருக்கும் புத்திசாலிகள் இவர்கள். “இளையராஜா பாட்டு ஒண்ணுபோடு“ என்றால் போடும். தமிழ் வேண்டாம் பிலீவர் சாங் ப்ளே பண்ணு என்றால் உடனே மாற்றும்.

பக்கத்தில் எங்கே ஹோட்டல் இருக்கிறது என்றால் தகவலைச் சொல்லும். வெளியே போலாமா டிராபிக் இருக்கா என்றால் அட்சரசுத்தமாய் பதில் சொல்லும். இவையெல்லாம் நவீன வரவுகள். ஆனால் இவை முழு நேரமும் நமது வீட்டில் நடக்கும் உரையாடல்களைக் கவனித்துக் கொண்டே இருக்கின்றன என்பதும், தேவைப்பட்டால் அவற்றை ஏதோ ஒரு கிளவுட் சர்வரில் சேமித்து வைக்கும் என்பதும் திகிலூட்டக்கூடிய சமாச்சாரங்களாகும்.

இந்த கருவிகளின் வழியாக நமது வீட்டுக்குள் ஒரு உளவாளியை சுதந்திரமாய் உலவ விட்டிருக்கிறோம் என்று தான் சொல்ல வேண்டும். இந்த குற்றச்சாட்டை தயாரிப்பு நிறுவனங்களே மறுக்கவில்லை. கூப்பிட்டதும் பதில் சொல்லவேண்டும் என்பதற்காக் எப்போதுமே இவை காதை கூர்தீட்டிவைத்துக் காத்திருக்கும் எழும் உண்மையை எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கின்றனர். சொன்னதை கேட்டு பதில் சொல்லும் இந்தகருவிகளுக்கு கேட்பது யார் என்பது முக்கியமில்லை. சன்னல் வழியாக எட்டிப்பார்த்து ஒருவர் கதவைத் திற என்று சொன்னால் கூட டிஜிடல் கதவெனில் திறந்து தரலாம் !

அப்படியே உங்கள் குரலைத் திருடி விட்டால் “பணத்தையெல்லாம் என் அக்கவுண்டுக்கு மாற்று என சொன்னால் சமர்த்தாய் மாற்றிவிட்டு அமைதி காக்கவும் செய்யும்.

நமது மொபைலில் நாம் நம்பி தரவிறக்கம் செய்யும் ஆப்கள் கூட பலவேளைகளில் காலை வாரிவிடுகின்றன. பிட்ஸைட் நடத்திய ஒருஆய்வில் மிகவும் பாதுகாப்பானது என நாம் நினைக்கும் வங்கி போன்ற ஃபைனான்சியல் கம்பெனிகளின் ஆப்களிலேயே கால்வாசி ஆபத்தானவை என தெரிய வந்திருக்கிறது. பல ஆப்கள் நமது தகவல்களை அப்படியே இன்னொரு இடத்துக்கு ரகசியமாய்க் கடத்திவிடுகின்றனவாம் !

பல நிறுவனங்கள், எதிரி நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கவனிக்க இப்போதெல்லாம் உளவாளிகளை அனுப்புவதில்லை. முழுக்க முழுக்க டிஜிடல் உளவாளிகளை மட்டுமே உருவாக்குகின்றன. இவை ஆப்களாகவோ,




சென்சார்களாகவோ, வாய்ஸ் ஹேக்கிங் ஆகவோ எப்படி வேண்டுமென்றாலும் இருக்கலாம். எதிரியின் தொழில் திட்டம் முதல், அவர்களுடைய ஐடியாக்கள், அவர்களுடைய கொட்டேஷன்ஸ் என எல்லாவற்றையும் திருடிக் கொள்ளும் முனைப்புடன் இவை செயல்படுகின்றன.

அதே போல என்கிரிப்ஷன் செய்யப்படாத புளூடூத் கருவிகளைப் பயன்படுத்தும் போதும் நாம் பேசும் தகவல்கள் எளிதில் ஹேக்கர்களால் திருடப்படும் வாய்ப்பு உண்டு. புளூடூத்களின் எல்லையை ஆன்டினாக்களின் உதவியோடு அதிகப்படுத்தி, தொலைவிலிருந்தே நமது தகவல்களைத் திருடும் வழக்கம் புதிதல்ல.

இந்த சூழலில் மொபைலை முழுமையாக பாதுகாப்பது என்பது குதிரைக் கொம்பு தான். இதனால் முடிந்த அளவுக்கு பாதுகாப்பாய் இருக்க சில விஷயங்களை மனதில் கொள்ளுங்கள்.

உங்களுடைய மொபைல் சேமிப்பு தளத்தை 'என்கிரிப்ட் (encrypt)' செய்து வைத்திருங்கள். அப்போது உங்கள் தகவல்களை யாராவது திருடினாலும் அது பயன்படுத்த முடியாததாய் போய்விடும்.

உங்கள் மொபைல் தொலைந்து போனாலும் அதிலுள்ள தகவல்களை தொலைவிலிருந்தே அழிக்கும் வசதியான, 'ரிமோட் வைப் (remote wipe)' ஆப்ஷனை வைத்திருங்கள். வேறு மொபைல், லேப்டால் என எதிலிருந்து வேண்டுமானாலும் உங்கள் தகவல்களை நீங்கள் அழிக்க முடியும்.

பொதுவிடங்களிலுள்ள வைஃபை வசதியைப் பயன்படுத்தவே பயன்படுத்தாதீர்கள்.

புகைப்படங்கள், குரல், போன்றவற்றை இணையத்தில் பதிவிடுவதை நிறுத்துங்கள். உங்களுடைய புளூடூத்தையும், வைஃபையையும் , ஹாட்ஸ்பாட்டையும் தேவையற்ற நேரங்களில் அணைத்தே வைத்திருங்கள். பொதுவிடங்களிலுள்ள வைஃபை வசதியைப் பயன்படுத்தவே பயன்படுத்தாதீர்கள். தேவையற்ற ஆப்களை அழித்து விடுங்கள்.

இப்படிப்பட்ட அடிப்படை விஷயங்களைக் கடைபிடித்தாலே போதும். பெரும்பாலான பிரச்சினைகள் தீர்ந்து விடும். நமது தகவல்களைப் பாதுகாக்க ஒரே வழி, நாம் விழிப்புடன் இருப்பது மட்டுமே !





COMPUTER EXPO 2018 FRANKFURT



கணனிக் கல்வி இதழ் நடாத்தும்
கணனி தொழில் நுட்பக் கண்காட்சியும்
கணனிப் பயிற்சிப் பட்டறையும்

கண்காட்சி ஒரே நாளில் 3 தடவைகளாக விளக்கங்களும் வகுப்புகளும் நடாத்தப்படும் எனவே உங்கள் நேரத்தை எம்முடன் தொடர்பு கொண்டு தெரிவு செய்யவும்.

16.09.2018 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10:00- 20:00

இடம்: Saalbau Volkshaus Sossenheim
Siegener Straße 22
65936 Frankfurt am main

தொடர்புகளுக்கு:
சி.சற்குணநாதன்
தி.லம்பேட்
தொலைபேசி இல: 0151 71 570 894
e.mail: alxlambrtt@aol.com




# கடிகாரம் ஓடும் முன் ஓடு

நேரம் என்பது விலை மதிக்க முடியாததொன்று! தவறவிட்டால் திரும்பி எடுக்கமுடியுமா? இல்லையல்லவா.
சொல்லுகின்ற வார்த்தைகள் போலவே. கூறிய பின் ஒன்றும் செய்யமுடியாது.

வார்த்தைகளைக் கட்டுப் படுத்துவது போல் நேரத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
ஆம். சிலர் கூறுவார்கள் தமிழர்கள் என்றாலே எந்த நிகழ்வுகளையும் நேரத்துக்கு ஆரம்பிக்கமாட்டார்கள் என்று. ஆகவே நாம் பிந்தியே போவோம் என்பர். நான்கூறுவது சரி தானே.
ஏன் இந்தக் கூற்றை நாம் ஒவ்வொருவரும் மாற்றக் கூடாது?

ஏன் நாம் தாமதமாக சிலவற்றை செய்கின்றோம் அல்லது விழாக்களுக்குத் தாமதமாகச் செல்கின்றோம். திருமணவிழாக்கள், பூப்புனித நீராட்டுவிழாக்கள், பிறந்தநாள் விழாக்கள் மற்றும் அனைத்து நிகழ்வுகளுமே கூடுதலாக நேரத்தக்கு நடைபெறுவது இல்லை.

ஏன்? சிலர் கூறுவர் அலங்காரம் செய்பவர் நேரம் எடுத்தவர் என்பர். சிலர் புகைப்படம் எடுப்பவர் நேரம் எடுத்துவிட்டார்கள் என்பர். உணவு கொண்டு வருபவர் நேரத்துக்கு வரமாட்டார்கள். முக்கியமாக விருந்தினர்கள் வரவில்லை ஆகையால் பிந்தியே ஆரம்பிப்போம் என்பர். என்ன செய்வது? ஒருவரும் நேரம் பார்ப்பதில்லை. சிலர் விழாக்களுக்குச் சென்று உடனே திரும்பி விடுவார்கள். ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்?
இப்படியே நடந்து கொண்டால் வரும் காலங்களில் மனிதர்கள் நேருக்கு நேர் சந்திப்பது அருகி Face time இல் வெறும் நிழல்களாக நிஜத்தை தொலைத்து உரையாடவே முடியும். இது கவலைக்குரிய விடயம். அருகில் உள்ள உறவு அருகிப்போகும்.



விழாக்களுக்கு போவதற்கு கூட முன்பு இருந்த உற்சாகம் தற்போது இல்லை. காரணம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். இவையும் சனி,ஞாயிறுகளிலேயே அணிவகுத்து நிற்கும். வாணி ராணி பார்ப்பதா? வாணி விழாவிற்குப் போவதா? சற்று சிந்தித்தால்போதும் மனதுக்குள் பட்டிமன்றம் அனல் தெறிக்கும். போவதா? விடுவதா? பின்பு ஒருவாறு புறப்பட்டால் விழா தொடைங்கும் நேரத்திற்குத்தான் வீட்டில் இருந்தே புறப்படுவோம். அதுவும் அரை மனதோடு. பின்பு கேட்கவா வேண்டும், பெரும் தெருவில் வாகன நெருச்சலில் அரைந்து கொண்டு செல்ல குறித்தநேரம் பறந்து விடும்.

**றஜினா தருமராஜா**

சில சமயங்களில் தாமதமாகுவதைத் தடுக்க முடியாது. இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. வாகனங்களில் வரும்பொழுது போக்குவரத்துப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. விபத்துகளும் ஏற்படுகின்றன. தடுக்கமுடியாது அல்லவா. ஆனால் நாங்கள் ஒவ்வொருவரும் தடுக்க முடிந்ததைத் தடுக்கலாம்.
யேர்மனியில் பேரூந்து வரும் நேரத்தை பாருங்கள். அது பெரும்பாலும் இப்படி இருக்கம். 5.14, 5.28. 5.42. அது என்ன முகூர்த்த நேரமா? அதனை நாம் கடைப்பிடிப்பது இல்லையா. பேரூந்து குறித் நேரத்திற்கு வரும் யாருக்காகவும், காத்திருக்காது. இதுபோல் நாமும் விழாக்களில் நேரத்தை பின்பற்றினால், யாருக்காகவும் காத்திராது விழாத் தொடங்கினால், சிலசமயம் ஒரு ஒழுங்குக்குவருமா? கடிகாரம் ஓடும் முன் ஓடு. பாடசாலைக்கோ எங்கு சென்றாலும் சொன்ன நேரத்தக்கு முன்னரே நிற்றல் வேண்டும். வேலைக்கு மட்டுமே நேரத்துக்கு நாம் அனைவரும் செல்வோம். அங்கு மட்டும் முதலே சென்றுவிடுவோம்.

சிலர் வயது போன பின் கவலைப்படுவார்கள். சிலவற்றை அவர்கள் சிறு வயதிலே செய்யவில்லை என்று. காலங்கள் கடந்து விட்டன என்பர். ஆம் நண்பர்களே நேரம் என்பதனை தவற விடாதீர்கள். காலங்கள் உனக்காகக் காத்திருக்காது. நேரத்திற்கு செய்வதினால் மன அழுத்தம் ஏற்பாடாது நமது உடம்பை பாதுகாக்க முடியும். மன அழுத்த நோக்கு முதல் காரணி இந்த நேரம் என்பது பல ஆய்வுகளின் முடிவும்கூட. எனவே நேரம் தவறாமையை எமது வாழ்வில் கடைப்பிடிப்போம்.






# ஈழத்தில் நம்மை அரவணைக்கும் திருவாசக அரண்மனை!








இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் இருந்த காலம். ஐயத்தின் அடிப்படையில் தமிழ் இளைஞன் ஒருவன் சித்திரவதைக்கு உள்ளானான். அவன் முதுகில் கொடுங்காயத்தை ஒரு இராணுவ வீரன் ஏற்படுத்த, மற்றொருவன் அந்த காயத்தில் நெருப்பிட்டு கொளுத்தினான். வலியில் துடித்து உயிருக்குப் போராடிய இளைஞனை மற்றொரு வீரன் இரக்கப்பட்டு, தப்பிக்க உதவினான். உயிர் பிழைத்த அந்த இளைஞன், "திருமணம் செய்ய மாட்டேன் இந்த இரண்டாம் வாழ்க்கை, சமூகப் பணிக்கும் இறைப்பணிக்கும் மட்டுமே" என்று முடிவெடுத்து... முதியோர் இல்லம், ஆதரவற்றோர் இல்லம், மனவளரச்சி குன்றியோர் இல்லம் போன்ற பல அமைப்புக்களை "சிவபூமி" என்ற பெயரில் நடத்தி வருகிறார். மிகச்சிறந்த பேச்சாளர். உலகெங்கும் சென்று உரையாற்றி, வரும் பணம் அனைத்தையும் இவற்றை நடத்த செலவிடுகிறார். இப்போது, யாழ்ப்பாணத்தில், நாவற்குழி எனுமிடத்தில் திருவாசக அரண்மனை கட்டியுள்ளார். திருவாசகம் முழுக்க கருங்கல்லில், கைகளால் செதுக்கப்பட்டுள்ளது. 108 சிவலிங்கங்கள் கருங்கல் தேரில் லிங்கம் அருகில் மாணிக்கவாசகர் சிவதெட்சணாமூர்த்தி கோயில அந்த இளைஞர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன்!

திருமூலரால் "சிவ பூமி" என்று சிறப்பிக்கப்பட்ட ஈழ மணித் திருநாட்டில் இன்று திருவாசகத்துக்கென ஒரு அரண்மனை கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுகன் அவர்கள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவராகவும், சிவபூமி என்ற சிறுவர் மன வளர்ச்சிப் பாடசாலைகள், சிவ பூமி முதியோர் இல்லம், கீரிமலைச் சிவபூமி மடம் போன்ற அற நிலையங்களை நிறுவி அவற்றைக் கொண்டு நடத்துபவராகவும் இயங்கி வருகிறார். தன் வாழ்வைச் சைவத்துக்கும் அறப் பணிகளுக்காகவும் அர்ப்பணித்திருக்கும் ஆறு திருமுருகன் அவர்களின் அடுத்ததொரு முயற்சியாக எழுந்ததே இந்தத் திருவாசக அரண்மனை.

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வருகை வாயிலாக அமை நாவற்குழியின் முனையில் கட்டியெழுப்பப்பட்டிருக்கும் இந்தத் திருவாசக அரண்மனையின் சிற்ப வேலைப்பாடுகள் உள்ளிட்ட கட்டடப் பணிகள் மாதக் கணக்காக நடந்திருக்கிறது.

திருவாசகத்தின் அனைத்துப் பாடல்களையும் கருங்கல்லிலே செதுக்கி அவற்றை இங்கே இபபோது நிறுவியிருக்கிறார்கள். அழுத்தம் திருத்தமாகப் பிழையற, அழகான எழுத்துருவோடு திருவாசகப் பாடல்கள் மின்னுகின்றன. இங்கே விருந்தினர் அறை, திருவாசக ஆராய்ச்சிக்கான நூலகக் களஞ்சியம் இவற்றோடு அந்த முக்கோணக் கட்டடத்தின் நடு நாயகமாகப் பென்னம் பெரியதொரு சிவலிங்கம் நிறுவப்பட்டிருக்கிறது.

சிட்னி அவுஸ்திரேலியாவில் வதியும் வைத்திய கலாநிதி மனமோகன் அவர்கள் (தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி பழையமாணவன்) தனது காணியை இந்தப் பெரும் பணிக்காக அன்பளிப்புச் செய்ததோடு நிர்மாணத்துக்கும் உதவியிருக்கிறார். மேலதிக தேவைகளுக்கு தன் அறப் பணிகளால் திரட்டிய நிதியையும் சேர்த்து ஆறு திருமுகன் அவர்கள் இந்தப் பணியை முழு மூச்சாக முடித்து வைத்திருக்கிறார்.ஆனி மாதம் 24 ஆம் திகதி "திருவாசக அரண்மனை" உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்த அரும்பணியினைச் செய்த அருளார்கள் அனைவருக்கும் வெற்றிமணி சிவத்தமிழின் பாராட்டுக்களும் நன்றியும். ஈழத்தில் நம்மை இனி என்றம் அரவணைக்கும் திருவாசக அரண்மனை!

வைத்திய கலாநிதி மனமோகன் -திருவாசகக்காவலன் ஆறு.திருமுருகன்







Adchaya International
ADCHAYA INTERNATIONAL
ரியல சுவை
வழங்கும்
கேவலார் மரியன்னையின் திருயாத்திரையை முன்னிட்டு அட்சயா இண்டர் நேஷனல் ஸ்தாபனத்தாரின் மொத்த விற்பனை விலையில் ஓர் சில்லறை விற்பனை !
இன்று, இங்கு ஒரு நாள் மட்டும் (11.08.2018) சனிக்கிழமை உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து வகை பல சரக்கு பொருட்கள், மளிகை மற்றும் சமையலறை சாதனங்கள் இன்னும் பல MISS பண்ணாம ADCHAYA STALL-க்கு வந்து அள்ளுங்க நிச்சய பரிசில்களை வெல்லுங்க...!
ஜெர்மனியில் இவ்வாண்டின் (2018) இறுதி SALE..!
Premier Puttu Maker
100 EURO க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 16.90 EURO பெறுமதியான Premier புட்டு மேக்கர் அல்லது Tawa FREE ! FREE !..
200 EURO -க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 27.90 EURO பெறுமதியான Premier இட்லி குக்கர் அல்லது INDUCTION BOTTOM சமையல் பாத்திரம் FREE..! FREE..!
உங்களுக்காக இன்று மட்டும் சிறப்பு விற்பனை..!
சுவை
CHILE JACK MACKEREL
1BOX மீன் ரின் (24 ரின்) வாங்குங்க...!
மேலதிகமாக 4 ரின்களை FREE யாக ஏடுத்துட்டு போங்க..!
SUVAI
JACK MACKEREL
DON'T MISS IT
DON'T MISS IT
DON'T MISS IT
DON'T MISS IT
ADCHAYA INTERNATIONAL
Alter Hellweg-115 - 117, 44379 Dortmund, Germany.
Vidiem
Premier
SAMAYAL
ULTRA
TRS
Laila
Tilda
Niru
AASHIRVAAD
MOKSH AGARBATTI
Note : இச்சலுகை இன்று மட்டும் , Grinder, Mixie - க்கு இச்சலுகை பொருந்தாது.
உங்கள் ஆர்டர்களுக்கும் வர்த்தக தொடர்புகட்கும் :
ADCHAYA INTERNATIONAL Alter Hellweg-115 - 117, 44379 Dortmund, Germany.
Mobile : 0049 ( 0 ) 17663092804, email : adchayagermany@yahoo.com

# செந்தாமரைக் காடு




**தனசேகர் பிரபாகரன்**

தேம்ஸ் நதியோரம் அமைந்த தேவலோகம் என்று ஆங்கிலக் கவிஞர்கள் புகழும் இலண்டன் மாநகரில் வசிக்கும் ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்களில் ஒன்று இராஜீவனுடையது, ஆசைமனைவியுடன் குடிபெயர்ந்து ஆண்டுகள் ஆறு ஓடிவிட்டன, பெற்றெடுத்த செல்வமகளுக்கு அகவை ஐந்து. அவள் பிறந்ததும் அவளுடைய பாட்டி அவளுக்கு ஆசையாசையாய் வைத்த பெயர் "தமிழினி", என்றுமே அந்த குருந்து இனிக்க இனிக்க தமிழ் பேசவேண்டுமென அப்பெயரை வைத்தாள் போலும், ஆனால் தமிழினிக்கோ ஓரிரு வார்த்தைகளன்றி சரளமாய் தமிழ் பேசுவது மிகவும் சிரமம்.

அம்மையும் அப்பனும் பெரிய இடத்தில் வேலைசெய்வதால் நுனிநாக்கில் ஆங்கிலம், வீட்டிலும் மெல்ல மெல்ல அது பரவியிருந்தது, பெற்றோர்களே மறந்த நிலையில் பிள்ளைக்கு சொல்லவா வேண்டும் ? இப்படி எத்தனையோ தமிழ்க் குடும்பங்கள் மெல்ல மெல்ல தாய்மொழியை இழந்து வருகின்றன, தமிழினி என்று அந்த பெண்பிள்ளை தமிழை பெயரில் தாங்கியிருக்கிறாள், அதனை நாவில் தாங்க வேண்டாமா ?

பல இன்னல்களுக்கு இடையே இற்றைக்கும் தமிழை மறவாமல், பண்பாட்டை விடாமல் இறுக்கி பிடித்துக கொண்டிருக்கின்றன பல குடும்பங்கள், அவர்களது வைராக்யத்திற்கு காரணம் என்ன ? ஒன்றே ஒன்று தான் "நாம் யார் என்று நம்மை அடையாளம் காட்டுவது நமது தாய்மொழிமட்டுமே", மொழி மீது கொண்ட பற்று என்பது மற்றமொழிகளை கற்காமல் தாய்மொழியை மட்டுமே போற்றுதல் அன்று, உலகில் உள்ள மற்றமொழிகளையும் தேவையறிந்து கற்று அதே நேரத்தில் தாய்மொழியை மறவாமல் போற்றுதலே !

அறிவியல் அறிஞர்களின் கருத்துப்படி குழந்தைகள் இயற்கையாகவே தாய்மொழியில் எளிதில் சிந்திக்கவும், மற்ற விடயங்களை உள்வாங்கிக்கொள்ளவும் ஆற்றலை கொண்டுள்ளனர், தாய்மொழியில் பேசி குழந்தைகளோடு உறவாடும்போது பிள்ளைகளோடு இணக்கம் அதிகரிக்கும், மகிழ்ச்சி கூடும்.

குறிப்பாக நமது தமிழ்மொழி அத்துணை இலக்கிய வளங்களை கொண்டு உலகையே வழிநடத்தக்கூடிய திருக்குறள் போன்ற நூட்களை கொண்டது, இவற்றையெல்லாம் நம் குருந்துகள் கற்கவேண்டுமாயின் அவர்கள் முதலில் அடிப்படையில் சிறிது பேசவும் எழுதவும் கற்றுக்கொள்ளவேண்டும், குழந்தைகளுக்கு இந்த சிறு அடிப்படையை சொல்லிக்கொடுப்பது ஒப்பற்ற புதையலுக்கு திறவுகோல் கொடுப்பது போன்றது, ஒரு முறை நம் குழந்தைகள் தமிழின் சுவையை அறிந்துவிட்டால் போதும் அவர்கள் மேலும் மேலும் அள்ளி அள்ளி பருகுவார்கள், மற்றோர்க்கும் பருகக் கொடுப்பார்கள், தமிழின்பத்தில் திளைப்பார்கள் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழுக்கு அத்துணை சிறப்புகள்.



இதழோடு உன் இதழ்
வேண்டும்
உன் இதழ் விரிந்தால்
இன்பத் தமிழே
வேண்டும்.
- நிலாமகள்

உலகத்தில் முதலில் மனிதன் தோன்றியபோது அறிவற்றவனாய் இருந்தான், விலங்குகளோடு மற்றோர் விலங்காய் வாழ்ந்து வந்தான், பின்னாளில் மெல்ல நாவை அசைத்து பேசி, சிந்தித்து, முழுமனிதன் ஆயினான். இவ்வாறு முதலில் தோன்றியது அறிவில்லா மனிதன் புதியதாய் தோன்றிய நீர்நிலை போன்றவன். இந்த அறிவில்லா நீர்நிலை மீது செந்தாமரை செடிகள் போல தமிழ் மொழி படர்ந்து அறிவையும், ஆற்றலையும், திறனையும் தந்தாள் என பாவேந்தர் பாரதிதாசன் வியக்கிறார், கட்டாயம் தமிழ் என்னும் ஒரு சிறு செடியை நமது குழந்தைகளிடம் கொடுப்போம் நிச்சயம் அது பெரிய செந்தாமரைக்காடாகி அவர்களையும் வாழ்வில் உயர்த்தி நம்மையும் உயர்த்தும்.

முந்திய நாளினில் அறிவும் இலாது
மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தாமரைக் காடு பூத்தது போல
செழித்தஎன் தமிழே ஒளியே வாழி !




**தாயகத்தில் வெளிவருகிறது வெற்றிமணி**




தாயகத்தில் வெளிவரும் வெற்றிமணி பத்திரிகையை ஆர்வத்துடன் மட்டுநகர் ஆரயம்பதி மகாவித்தியாலய மாணவர்கள் படிப்பதைக் காணலாம்.

**APIRAAMI ENTERPRISE**




இலங்கை, இந்திய உப உணவுப் பொருட்கள், மற்றும் கடல் உணவு வகைகள் அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925

**மொழிபெயர்ப்புச் சேவை!**
**V.Ramakrishnan**

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில்

A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen



Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
நீங்கள்
IPTV BOX
பாவனையாளரா ?
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€49
மட்டுமே
உங்களிடமுள்ள பழைய BOX களை
எங்களிடம் கையளித்து
விசேட விலைச் சலுகையில்
LYCATV ஐ பெற்றுக் கொள்ளுங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
ஆதவன் HD
HD
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5 .1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
+
SUN NXT
4000 +
திரைப்படங்கள்
புத்தம்புதிய
திரைப்பாடல்கள்
நகைச்சுவை
காட்சிகள்
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
www.lycatv.tv

## யேர்மனியில் 25 வது வருடத்தில் தடம் பதித்த வெற்றிமணியின் வெற்றிவிழா

16.06.2018


செல்வி லுட்ஷிகா இளங்கோவன்


சாருஜா சிவகுமாரன்


கார்த்திகா ஈஸ்வரலிங்கம் அவர்களின் மாணவிகள்


நாட்டியக் கலாஜோதி அனாமிக்கா இரத்தினசிங்கம்



ஆடற்கலாலய மாணவர்கள்

படங்கள் : Koness fotos



எசன் தமிழ் மொழிச்சேவை -கலாச்சார மன்றம் தமிழ்பாடசாலை மாணவிகள்


ஹரனி நித்தியானந்தன்



கஜானி புஷ்பராஜா


மோகனராதா.செந்தூரன்


மாதவன் கருணாநிதி

## பாகுபலியின் பலம் வேண்டாம்! ஆனால் நீங்களும் செய்யலாம்!!

சிவராஜன். புருஷோத் -கனடா







பாகுபலியில் கருங்கல்லில் ஆன பெரிய சிவலிங்கத்தை தாய்க்காகத் தூக்கி நீர்வீழ்ச்சியில் வைக்கிறான் மகன் பாகுபலி. அப்படி எல்லாம் என்னால் அம்மாவுக்காகத் தூக்க முடியாது, அந்தளவு பலம் நம் கைகளில் இல்லை. ஆனால் அம்மாவுக்காக நம்மிடம் உள்ள சிறு அறிவை பயன் படுத்திடலாம்.

Peltier இது ஒரு 20€ க்கு வாங்கலாம். இதற்கு மின்சாரத்தை கொடுத்தால் ஒரு பக்கம் குளிராகவும் ஒரு பக்கம் சூடாகவும் இருக்கும், மேல் சூடான பகுதியை குளிராக வைத்திருந்தால், கீழ் குளிரான பகுதி குளிராகவே இருக்கும். மேல் சூடான பகுதியில் இருந்து கீழ் சூடு பரவாமல் இருக்க ஒரு மின் விசிறியை மேல்பகுதியில் இணைத்துவிட்டால் போதும் கீழ்பகுதி எப்பொழுதும் குளிராகவே இருக்க நீர் அதில் ஒடுங்கி சொட்டு சொட்டாக நீர் விழும். கீழே ஒரு லிங்கத்தை வைத்தால் போதும். பின்பு என்ன! சிவலிங்கத்தின் மேல் நீர் தேனாகச் சொட்டும். இந்த நீர் தொடர்ந்து சொட்டும். பின்பு என்ன சிவலிங்கத்திற்கு தினந்தோறும் தொடர் அபிஷேகம்தான்.





25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்


DORTMUND
மாநகரில்
தமிழர் தெருவிழா
2018
100 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் சங்கமிக்கும் மாபெரும்
ஆடல் பாடல் கொண்டாட்டம்....
Rheinische Str.
Rheinische Str.
Annenstraße
Straßenfest der Tamilen
08.09.2018
தமிழர் அரங்கம்
Verein für tamilische
Künstler e.V
VMDO
Der Verbund der sozial-kulturellen Migrantenvereine in Dortmund e. V.
ஜேர்மன் தமிழர் வர்த்தகர் சங்கம் e.V
GTVS
0151 633 633 33
0157 735 178 49
0177 679 4261
0162 803 1647
0151 152 204 17

## நீரழிவு நோய்!

11 ம் பக்கத் தொடர்ச்சி




பசுமை நிறமான இலை வகைகளில் விற்றமின் K அதிகம் என்றோம். அதன் பலாபலன்கள் என்ன?

குருதி உறைதலைக் கட்டுப்படுத்துகின்றது. மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை ஏற்படுவதற்கு குருதி உறைதல் முக்கிய காரணமாகும். மருத்துவ ரீதியாக இதைத் தடுப்பதற்கே குறைந்த அளவு அஸ்பிரின் (75-100mg) மற்றும் குளபிடோகிரில் போன்ற மருந்துகளை நீண்டகால அடிப்படையில் கொடுக்கிறார்கள். தாவர இலை உணவுகளில் உள்ள விற்றமின் கே இயற்கையான பாதுகாப்பைக் கொடுக்கும்.

விற்றமின் கே ஒஸ்டியோபொரோசிஸ் நோயிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. இன்று வயதான பலரும் முக்கியமாக பெண்கள் இதனால் பாதிக்கப்படுவது தெரிந்ததே. துாவர இலை உணவுகளை தினமும் உபயோகித்து வந்தால் ஒஸ்டியோ பொரோசிஸ் வருவதிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கும்.

நீரிழிவு ஏற்படாமல் தடுக்கவும் உதவும். அழற்சியைத் தடுக்கும் குணம் விற்றமின் கே க்கு இருப்பதால் மூட்டு நோய்களிலிருந்து பாதுகாக்கும்.

இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவதை தடுக்கும் ஆற்றலும் விற்றமின் கே க்கு உண்டு. எனவே நீரிழிவைத் தடுப்பதற்காக மட்டுமின்றி மேற்கூறிய பல பலன்களும் கிட்டும் என்பதால் தினமும் உணவில் பசிய இலை உணவைச் சேர்த்துக் கொள்வது அவசியமாகும் நன்றி: தமிழர் தகவல் - கனடா

12 ம் பக்கத் தொடர்ச்சி

## வெற்றிமணியின் .... வெற்றிமணியின் ....




இலக்கியத்தில் வாழ்வியலைத் தேடுகின்ற தனசேகரன் பிரபாகரன் அவர்களும், நோய்கள் பற்றிய விளக்கங்களைத் தரும் A – Z டாக்டர். கதிர் துரைசிங்கம் அவர்களும், நிகழ்கால பணமீட்டும் வியாபார சம்பந்தமான தகவல்களைத் தருகின்ற Money Clinic ரகு தர்மரெட்ணம் அவர்களும், தமிழ்நாட்டிலிருந்து வெற்றி மைந்தன் அவர்களும், இளவாலை எஸ்.ஜெகதீசன் அவர்களும், கருணாகரமூர்த்தி அவர்களும், பேராசிரியர் எஸ்.சிவலிங்கம் அவர்களும், யாழ்ப்பாண செய்திகள் தரும் ராஜயோகன் அவர்களும், ஆழ்வாப்பிள்ளை அவர்களும், வெற்றிமணியின் வெற்றிக்குப் பங்களிப்பவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்களுக்கும் என் மனப்பூர்வமான வாழ்த்துக்கள் வந்துதிக்கின்றன. என் சொல்லுக்குள் அகப்படாது நான் சொல்ல மறந்தவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களையும் இவ்விடத்தில் வாழ்த்தி நினைவுகூறுகின்றேன்.

யாரிவள்? இத்தனையையும் அப்பட்டமாகக் கச்சிதமாகத் தெரிந்து வைத்திருக்கின்றாளே? என்கின்ற கேள்விக்குறி உங்களுக்குள் எழுவதில் ஆச்சரியமில்லை. எழுத்தாளர் கனக்ஸ் அவர்களால் கவரப்பட்டு வெற்றி மணியின் வரிகளை மூளைக்குள் புதைத்து வைத்திருக்கும் ஒரு வாசகி நான். என்னுடைய முக்கோணமுக்குளிப்பு நூல் வெளியீட்டு விழாவில் வெற்றிமணி ஆசிரியரின் கழுகுப் பார்வைக்குள் அகப்பட்ட நான். இன்று வரை இடைவிடாது மாதாமாதம் என்னுடைய கட்டுரைகளைத் தந்து கொண்டிருக் கின்றேன். வெற்றிமணிக்குள் அடங்கியிருந்த அறிவுக்காகவே தேடிப் பெற்றேன். இன்று என் தேக்கங்களையும் அர்ப்பணிக்கின்றேன். தொடரும் காலங்களில் என் பணியும் தொடரும் என்று உறுதி மொழி கூறி விடைபெறுகிறேன். வாழ்க வெற்றிமணி வளர்க அதன் புகழ்







25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்




# நின்னைச் சரணடைந்தேன்

இதய துடிப்பிலெல்லாம் சுதந்திர காற்றின் ஸ்வரங்களை கோர்த்த படி சந்தம் தப்பாத சாம்ராஜ்யம் நடத்திக்கொண்டிருந்த வேளை...

விட்டு விட்டு சுட்டெரிக்கும் ஒரு பெண்ணின் விரகத்தில் கலை பயின்ற நட்சத்திரங்களை காவல் வைத்து கவிசித்தன் கவிக்குள் கரைந்து கொண்டு இருந்தேன். தீந்தமிழ் கொள்கலனான தேனிதழை கொள்ளை கொள்ள கொள்கை கொண்டவர் போல் , பருவ விண்ணப்பம் தட்டிடாமல் தட்டு தடுமாறி தமிழடிமை ஆகி கிடந்தேன். அவனடியில் சிறு நுனியில் சிக்கி நின்ற என் நாவிற்குள் உமிழ்ந்தது தீந்தமிழ் !

"மலரிலே வைத்த தேன் மலருக்கு உரித்தன்று
இரும்பினை அணுகாதிருப்பது காணின்
காந்தம் அன்று கருங்கல் அகுதே
தீயில் எரியா மரம் ஒன்றில்லை
காதலில் இளகா கன்னி நெஞ்சில்லை
துறத்தலே பெரிது, துறத்தலே பெரிது
மறத்தலும் இறந்தலும் கடந்த நற்காதல்
தோன்று நாள் வரையில் துறத்தலே பெரிது"

உவமையின் அழகை உள்ளூற ரசிக்க வைப்பதில் என்றும் தவறியதில்லை தமிழ் ஆளும் தந்திரன் !
காதலில் இழகாது கன்னி நெஞ்சம் இருக்காது என்ற அழகியலை
தீயில் எரியா மரமொன்று இல்லை என்று உவமிக்கிறார் . இந்த
பொருத்தத்தினை மீண்டும் மீண்டும் எண்ணி பார்த்தன என் இள மனம்..

காற்று போல் எம் நெஞ்சகத்தை தீண்டி செல்லும் காதல். ஆனால் அதன் உணர்வு ஒருவித தீயாய் ஊனில் நர்த்தனமாடும். தன்னை இழக்கும் தன்மையை பருவ வயதில் பக்குவமாய் பாடம் கற்பிக்கும் இந்த காதலை நெஞ்சம் இளகி இளகி வரவேற்க வேண்டும்.

அதுதான் படைப்பின் லீலையும் இயற்கையின் உண்மையும் கூட. இயற்கைக்கு புறம்பாய் நாமே தடுத்து முரண்பட்டால் தடுத்தாட்கொள்ள எந்த சிவனும் துணை நிற்க போவதும் இல்லை. காதல் என்னும் அன்பின் உருவை காதலித்து அதனை அவ்வண்ணமே ஏற்க பழக வேண்டுமே தவிர , பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் அவசியமும் இல்லை. உருகி உருகி திளைக்க திளைக்க விழி வழி வழியும் நீர் பிரவாகம் ஆனந்தத்தின் பரிசாய் அமையும். திருஞானசம்பந்தர் கூட காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி என்று பக்தி மார்கத்தில் குறிப்பிட்டு இருப்பார்.

மறுத்திருந்தால் அது மானிட இயல்பும் இல்லை. காந்தம் என்றால் இரும்பினை கவர தான் செய்யும் . அது தான் அதன் இயல்பின் நியதியும் ஆகும். அதை தவிர்த்து இல்லை என்று வாதிட முனைந்தால் அது காந்தம் அல்ல கருங்கல்லாய் தான் இருக்க வாய்ப்புண்டு என்று மிதமான உண்மையை மெருதுவாக சொல்லுகிறார்.

"மலரிலே வைத்த தேன் மலருக்கு உரித்தன்று"

சங்கிற்குள் சமுத்திரத்தை அடக்குபவனாய் , இலகு தமிழில் இத்தனை உணர்வுகளை எப்படி தான் அடக்குகிறானோ என் அருஞ்சுவை அத்தன் பாரதி !

இயற்கை கற்று தரும் பாடத்திற்கு அளவே இல்லை . நம் ஆறறிவு கொண்டு அனாவசிய திரைகளை இட்டு இருந்தும் இழந்து கிடக்கும் எத்தனை எத்தனை விடயங்களை, இயற்கை எளிதில் கற்று தரும்.

புறமாடி உயிர் பெய்த போழ்தெல்லாம் முக்திக்கு யுக்தியாகும் பக்தி சித்து!
இன்ப அணைப்பில் துனபத்தீ அணைக்கும் மாயாவிலாச மாமருந்து !
மெல்ல கொல்லும் இனிமை , வெல்ல வெல்ல அல்லல் தீரும் !
அன்பு! வழங்கல் , வாங்குதல் எனும் இருநிலை அன்று !
மூழ்கிக் திளைக்கும் ஒருமை.

அன்பினை அடைய முடியாது! எனவே அது ஓர் இலக்ககோ, சாதனையோ அன்று.
சாதாரண நீர் போல்! ஆனால் வாழ்வாதார நீர்!!அதன் ஊற்று எல்லையற்றது , முடிவிலா நதி!!!
அன்பு நிலையில் ஆனந்தம் காண எந்த சக்தி விரயமும் தேவையில்லை. தானாய் நிகழும் சங்கதியை கதியென்று இருந்தாலே போதும் மதியும் விதி பயிலும் !

அங்கங்களின் ஆடல் அல்ல
தங்கும் உயிரின் பாடல்!
புதைந்தொழிந்து கிடந்து புத்தியிர் பெற வைக்கும்
என்றும் அழியா அழகு கவியை
சுவாசிக்கும் போதெல்லாம் உச்சம் !!!

எதனையும் முழுமையாய் அறிந்து தெளிய வேண்டும். தெளிந்த பின்னான நிகழ்வெல்லாம் தெய்வ நிலை எட்ட செய்யமயும். மேற்கூறிய அத்தனையும் சொல்லி விட்டு முழுமை படுத்த இன்னும் ஒரு விளக்கம் தருகிறான் சித்த கவிஞன். இவ்வகையான உயிரியல் செயற்பாடுகளை துறத்தல் பெரிது, துறத்தலே பெரிது, எதுவரை எனில் நல்ல காதல் வரும் வரை என்கிறார். இப்போது நம்மிடை எழும் ஒற்றை கேள்வி யாதென புரிகிறது. ஆம் , நல்ல காதல் என்றால் என்ன ???



ஓவியம் கண்ணா 2018

விஸ்தாரமான வான வெளியில் உங்கள் மனங்களும் துறந்து மறந்து பறக்கட்டும் ! நல்ல காதல் என்றால் என்ன ??

என்னும் கேள்வி சிறகு விரித்து உற்ற துணையாய் தமிழ் இருக்க உயிரை பிழியும் எந்த உணர்வின் துளிர்ப்பையும் வடித்து கடக்கலாம் என்ற நம்பிக்கையில், இனியேது முண்டோ என்னுமளவு இன்பம் பெறுவதற்கு அரிய பிறவி பெற்றவளாய் இறுக தழுவி நிற்கிறேன் அவனடி சரணடையும் ஒவ்வொரு கணமும்.








**ரகு தர்மரட்டணம்** ACMA , CGMA

கடந்த 6 ஆண்டு காலத்தில் இங்கிலாந்து வீட்டு விலைகள் 40 வீதத்தால் அதிகரிச்சிருக்கின்றது! அதாவது, புரட்டாதி 2012 £160.000 ஆக மதிக்கப்பட்ட சராசரி வீடு ஒன்று இன்று £225,000 ஆக அதிகரித்துள்ளதாக Halifax இன் மதிப்பீடு தெரிவிக்கின்றது. இவ்வாறு ஆண்டிற்கு 7வீதம் ஏற்பட்ட அதிகரிப்பு இன்னமும் எதிர்காலத்திலும் தொடருமா? என சற்று ஆராய்ந்து பார்ப்போம்!

பல வர்ணனையாளர்களின் கருத்துக்களின் படி UK வீட்டு விலைகள் அடுத்த பல ஆண்டுகளில் இப்பொழுது இருக்கும் விலைகளை விட சற்றுக் குறைவாகவே இருக்கும் என வர்ணிக்கின்றார்கள். எப்பொழுதும் எந்த ஒரு சொத்து வகையின் (asset class) விலை உயர்வு தாழ்விற்கு ஒரு மிகப்பெரிய தூண்டுதல் (Trigger) காரணமாக இருக்கும், இந்த வகையில் "Brexit" ஐ UK இன் அதாவது முக்கியமாக லண்டன் விலை விழ்ச்சிகளுக்கு காரணமாக இருக்கலாம் என கூறுகின்றார்கள். ஆனால் Brexit ஐ மட்டும் ஒரே காரணமாக நாங்கள் இங்கு கூற முடியாது. கீழே கூறப்படும் பல காரணங்களை லண்டன் வீடுகளின் விலைகளின் எதிர்கால விலை விழ்ச்சிக்கு காரணமாக கூற முடியும்.

1 மேலே கூறப்பட்டது போல் Brexit மற்றும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் பொருளாதார நிச்சயமின்மை (uncertainity).

2 தற்பொழுது இருக்கும் conservative அரசின் நிலைப்பாடும் உயர் அமைச்சர்களின் பதவி விலகல்களும் (resignations)

3 வங்கி வட்டி வீதத்தில் இன்னுமொரு 0.25 வீதம் அதிகரிப்பு அடுத்த இரு மாதங்களுக்குள் நடைமுறைக்கு வரும் சாத்தியக்கூறுகள்.

4 பலவீனமாக நுகர்வோர் நம்பிக்கை (weak consumer confidence)

5 சராசரி ஊதியங்களின் வீழ்ச்சியும் mortgage பற்றாக்குறை சிக்கல்கள்.

6 Royal Institution of Chartered Surveyors (RICS) கருத்தின் படி கடந்த சில மாதங்களாக வீடு சம்மந்தமான செயல்பாட்டில் குறைவுத்தன்மை காணப்படுவது.

7 இலண்டனில் முன்னர் இருந்த நிலையைப் போல் இல்லாமல் அதிக பட்ஷ விலை அடைப்பில் உள்ள (high end house bracket) வீடுகள் credit crunch முடிவடைந்த பின்னர் தற்பொழுது தான் அதி கூடிய அளவு தள்ளுபடி வீதத்தில் குறைத்து விற்பனை செய்யப் படுகின்றது.

8 Buy to Let வரிகளின் அறவீட்டில் மாற்றம், முத்திரை வரிகளில் (Stamo duty) அதிகரிப்பு.

9 அதிக வீத வரி செலுத்துபவர்கள் தமது வாடகை வீடுகளின் Mortgage வட்டி தொகையை தாம் செலுத்தும் வருமான வரிக்கு எதிராக ஈடு செய்து வருமான வரியை குறைப்பதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்.

10 வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களினால் அன்மையில் கொண்டு வரப் பட்ட இறுக்கமான கடன் நிதிகள்.

கீழே உள்ள வரை படத்தின் படி கடந்த 6 வருட காலத்தில் சராசரி விலையில் 40 வீத அதிகரிப்பு ஏற்பட டதை காண முடிகிறது. அடுத்த சில ஆண்டுகளில், வங்கி வட்டி வீதத் தில் அதிகரிப்பு, எந்த அரசாங்கம் பதவிக்கு வந்தாலும் அதன் கொள்கை யான கூடிய வீடுகள் நிர்ணயிப்பு என்பன வற்றினால் வீட்டு விலைகளின் அதிக அதிகரிப்பு ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருக்கின்றன.




03 ம் பக்கத் தொடர்ச்சி.... **புதிய அரசியலமைப்பு ............**

அரசியலமைப்பு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பின்னர் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டு மக்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இவ்வாறான நிலையில் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து நிபுணர்களை அச்சுறுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன" எனத் தெரிவித்திருப்பதும் கவனிக்கத்தக்கது.

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற்சிகளைப் பொறுத்தவரையில், அதனைக் கடுமையாக எதிர்ப்பதென்ற நிலைப்பாட்டில்தான் மகிந்த அணி உள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது. பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை அவர்கள் நடந்துகொண்ட முறை அதனை வெளிப்படுத்தியது. தற்போதைய அரசியல் கள நிலையில், சிங்களக் கடும்போக்காளர் மத்தியில் தம்மைப் பலப்படுத்திக்கொள்வதற்கு அவர்களுக்குக் கிடைத்துள்ள ஒரே ஆயுதம் இதுதான். அதனால், அந்த நிலைப்பாட்டில் அவர்கள் உறுதியாக இருப்பார்கள். புதிய அரசியலமைப்பு யோசனைகளில் அதிகாரப் பகிர்வு இருக்கின்றதோ இல்லையோ அதனை அவர்கள் "சம்ஷ்டி" என்று கூறி தமது பிரச்சாரத்தை முன்னெடுப்பார்கள்.

அதேவேளையில், புதிய அரசியலமைப்பு முயற்சிகளைத் தாங்கிப்பிடித்துக்கொண்டு செல்ல முற்படுபவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மட்டும்தான் உள்ளது. ஐ.தே.க.வில் ஜயம்பதி மட்டும்தான் இதனை நியாயப்படுத்துபவராக உள்ளார். ஐ.தே.க. வில் உள்ள மற்றையவர்களோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரோ புதிய அரசிலமைப்பை உருவாக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பார்களா என்பது கேள்விக்குறி. மகிந்த தரப்புக்கு அது வாய்ப்பாகிவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஜனவரியில் மாகாண சபைத் தேர்தல்கள் வரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், புதிய அரசியலமைப்பை ஆதரிப்பது ஒரு விஷப் பரீட்சையாகவே இருக்கும் என அவர்கள் கருதலாம்.

3 நோக்கங்களுடன் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதாகவே 2015 இல் சொல்லப்பட்டது. முதலாவது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பது. இரண்டு - தேர்தல் சீர்திருத்தம். மூன்றாவது அதிகாரப் பரவலாக்கல். இந்த முதல் இரண்டு விடயங்களில் மட்டும்தான் தேசியக் கட்சிகள் அக்கறை காட்டின. அதிகாரப் பகிர்வு அல்லது இன நெருக்கடிக்கான தீர்வில் அக்கறை காட்ட வேண்டிய அரசியல் தேவை எதுவும் அவர்களுக்கு இருக்கவில்லை. ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதில் மட்டும்தான் அதன் அக்கறை இருந்தது. பிரதான கட்சிகள் அதனையும் கைவிட்டுவிடலாம் என்ற நிலையில்தான் 20 வது திருத்தத்தைக் கொண்டுவர ஜே.வி.பி. முற்பட்டது.

ஜனவரியில் 6 மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறும் என்றால், அதற்கு முன்னதாக அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. ஏனெனில் இன்னும் இருப்பது 5 மாதங்கள் மட்டும்தான். அதன்பின்னர் அடுத்த வருட நடுப் பகுதியில், ஏனைய 3 மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடைபெற வேண்டும். அடுத்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல். ஆக, இந்தளவு தேர்தல்கள் எதிர்கொள்ளப்படும் நிலையில், தமது வாக்கு வங்கி அரசியலைப் பாதிக்கக்கூடிய விடயங்களில் பிரதான கட்சிகள் அக்கறை காட்டும் என்பது எதிர்பார்க்கக்கூடிதல்ல!

கூட்டமைப்பின் தலைமையைப் பொறுத்த வரையில் நாம் முடிந்தளவுக்கு விட்டுக்கொடுத்தோம். யாருடனும் எப்போதும் பேசத் தயாராக இருந்தோம். ஆனால், பிரதான கட்சிகள் தீர்வொன்றைத் தரத் தவறிவிட்டன என்பதைச் சொல்லிக்கொள்ளலாம். சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில், அவர்களும் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை கொடுப்பவர்களாகவே இருப்பதால் இவ்விடயத்தில் அழுத்தம் கொடுப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. ஆக, புதிய அரசியலமைப்பு என்பது வெறும் காணல் நீராகத்தான் இருக்கப்போகின்றதா?



# நான் “தமிழன்” போதுமா?

**ராம் பரமானந்தன்**




தமிழன் என்பதற்கு மொழிமட்டுமே போதும் எனும் எம் தவறான கண்ணோட்டத்தைப் பற்றி.
தமிழ் மக்கள் கூடுகையில், பெற்ரோர்கள் இளையவர்களிடம் சொல்வது: „தமிழில் பேசுங்கோ!“ என்று.

நல்ல எண்ணம் கொண்ட இந்தக் கட்டளையால் பல தமிழ் இளைஞர்களை நாம் இழந்துள்ளோம் என்பது எனது கருத்து. தமிழ்கலாச்சாரம் இந்தக் கட்டளையால் மொழி என்ற அம்சத்துக்குள் குறைக்கப்பட்டுவிடுகிறது. புலம்பெயர்ந்த பெற்றோருக்கு மேற்கத்தேய மொழியை முற்றிலும் சரியாக பேசுவதில் சங்கடமோ, அப்படியே பல இளைஞர்களிற்கும் குறிப்பிட்ட தருணங்களில் தமிழ் பேசுவது சங்கடமானது என்பதை உணர்வதில்லை. இளைஞர்களை சங்கடப்படுத்துவதால், அவர்கள் தப்பி தமிழுலகைவிட்டுப் பிரிகின்றனர். கட்டாயம் இல்லாமல் தமிழ் பேசுவது எப்படி?

மேற்கத்தேயர்களுக்கு, ஈழத்தமிழர்கள் ஆகிய நாம், மறுப்புக் கூறாமல் இருப்பின், இந்தியர்கள் ஆகிவிடுகிறோம். எங்கள் கலாச்சாரத்தின் செறிவு இப்படி குறைக்கப்படுவதால், நாம், அன்றாடம் இன-அடையாளத்திற்காக சமரிடுகிறோம்.
இச்சமரில், மொழியால் மட்டுமல்லாமல், வேறு பல வழிகளிலும் எமது கலாசார அடையாளத்தை நாம் வெளிப்படுத்தி, நிலைநாட்டுகிறோம். தமிழை அடையாளப்படுத்த, உணவு, உடை கலை, வாழ்வுமுறை போன்றவையும் முக்கியமாகின்றன. இரு கண்களில் ஒன்றாக மொழியும் மற்றதாக ஏனைய பண்பாட்டு அம்சங்களையும் அறிஞர்கள் இன அடையாளங்களாக எடுத்துக்கொள்கின்றனர்.

இன்று அனைத்து புலம்பெயர்ந்த தமிழ்க்குடும்பத்திலும், குறைந்தது ஒருவராவது தமிழ்க்கலைஞராகிறார். பரதக்கலையிலிருந்து, பேச்சாளர் கள்வரை கலாசாரத்திறமைகள் பலவகை. இளைஞர்கள் விரும்பியே தமிழ் உணவுகளை உண்கின்றனர். இப்படி மேற்பரப்பில் தெளிவாக இல்லாவிடிலும், தமிழ்க்கலாசாரத்தின் மீது ஈர்ப்பு, இளையவர்களிடம் நிறையவுண்டு, ஆனால் அது மொழியைப்போன்று வெளிப்படையாக இல்லாததால், கவனிக் கப்படுவதில்லை.

கலாச்சாரத்தில் ஈர்ப்பு இருக்க, ஏன் மொழியைப் பேச தயக்கம்? தமிழ் மொழியைப் பேசுவதை அசௌகரீகம் என நினைக்காத இளைஞர்களால் தயக்கமின்றி அதை எப்படி பேசமுடிகிறது?
இவர்களது தமிழ் ஆர்வம், மூத்தவர்களைவிட அதிகமாக உள்ளது. இதன் காரணம்: இவர்கள் தமிழ் ஆர்வம் கலைகளில் மட்டுமல்லாமல் கலையின் வரலாறு, அரசியல் வரலாறு போன்றவற்றிலும் இருக்கிறது. உதாரணத்திற்கு பரதம் பயிலும் சில மாணவமாணவிகள் பரதக்கலையின் பண்டைய அடிப்படைகளை அறிந்து, உலகளாவிய ரீதியில் அதன் பெருமையை புறிந்துகொள்கின்றனர். இதனால் இவர்களுக்குள், தமிழினப் பாரம் பரியங்களை எண்ணி ஒரு வித பெருமை ஏற்படுகிறது. „தமிழ்“ என்னும் அடையாளம் எவ்வித தயக்கமும் இன்றி மொழி, கலை ஏனையவையால் இனவடையாளச்சமரில் இறங்க ஆயுதம் ஆகிறது. மொழி மட்டுமல்லாமல், தம்மினத்தில் பெருமைகொள்வது தாய்மொழியைப் பேசும் சங்கடங்களை விலக்குகிறது என்பது, இங்கு சாட்சியாகிறது.

இங்கனம், தமிழை இலகுவாக பேசமுடியாத இளையவர்கள் மத்தியில், „எனது தமிழ்த்தன்மை போதுமா? நான் தமிழன் என்பது சரியா?“ என்ற கேள்வி எழும்புகிறது.

ஒருவருடைய இனவடையாளத்தை அழிக்கமுடியாது, எங்கு எப்படி இருந்தாலும் அவர் தமிழன் தான். மொழிவழத்தில் மட்டும் தமிழரா என்பதை அளக்கமுடியாத சூழ்நிலையில் நாம் உள்ளோம். அளப்பின், தமிழைப் பேசமுடியாத தமிழர்களுக்கு அது ஞாயமாகாது. தமிழை மிகச்சரளமாக பேசியும், மாற்றுக்கலாசாரத்தை பேணுபவர் தமிழர்களா?
இனத்தின் மேல் இருக்கும் பெருமையே அதன் அம்ச வெளிப்பாட்டை கணக்கிடுகிறது. தன் இனத்தின் மேல் பெருமைகொள்வதும் மொழி பேசுவதும் பல்லுச்சக்கரப் பிணைச்சல். ஒன்றில்லாமல் ஒன்று திடமாகாது. கலாச்சரம் கவர்ச்சியாகவே, மொழியின் மேல் ஆர்வம் ஏற்படுகிறது. அப்படியே இரு கண்கள் ஒரு உறுப்பாகின்றன.

RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG

**Tel:0511 53 07 42 05 (Deutsch) Tel: 0511 - 5307 4208 (Tamil)**
**Fax; 0511 - 5307 4206**





**வீடு விற்பது. 100% இலவசசேவை**
- நீங்கள் வீடு விற்க விரும்புகிறீர்களா?
-ஆமெனின் ஆகக்கூடிய விலைக்கு விற்பதற்கான ஒழுங்குகள்.

**வீடு வாங்குவதற்கான கடன்கள். 100% இலவசசேவை**
- நாம் 350 வங்கிகளின் வட்டி விகிதங்களை ஒப்பிடுவோம்.
- தற்போதைய வட்டி விகிதம் 1.2% இருந்து கிடைக்கும்.
- எமக்கு கையில் எதவித பணமும் தரத்தேவையில்லை.
- இலவசமாக நீங்கள் வாங்கப்போகும் வீட்டின் பெறுமதி மதிப்பிட்டுத்தரப்படும்.
- மேலதிக கட்டணமின்றி அரச கடன் 100000,00€ பெற்றுத்தரப்படும்.

**வீட்டுக் கடனை எம்மிடம் மாற்றுதல். 100% இலவசசேவை**
- நாம் 350 வங்கிகளின் வட்டி விகிதங்களை ஒப்பிடுவோம்.
- தற்போதைய வட்டி விகிதம் 1.2% இருந்து கிடைக்கும்.
- எமக்கு கையில் எதவித பணமும் தரத்தேவையில்லை.

**வீடு வாங்கி வாடகைக்குக் கொடுத்தல். 100% இலவசசேவை**
-வாடகை வரும் வீடு ஒன்றை வாங்கி, அதிக லாபம் பெற விரும்புகிறீர்களா, கிடைக்கும் வாடகையிலிருந்தே கடனைக்கட்டமுடியும்.
**தனிநபர் கடன். 100%** இலவசசேவை
- தனிநபர் கடன் 4.9% லிருந்து கிடைக்கும்.
- உங்களிற்கு பல சிறிய கடன்கள் இருப்பின் ஒரே கடனாக எம்மிடம் மாற்ற முடியும்..
- எமக்கு கையில் எதவித பணமும் தரத்தேவையில்லை.

**எமது முழுமையான சேவை. 100% கட்டண சேவை**
(சேவைக்கேற்ப கட்டணம், இல்லையேல் குறிப்பிட்ட கட்டணம் அறவிடப்படும்.)
-உங்களிற்கான வீடு தேடுவதிலிருந்து நீங்கள் வீடு வாங்கி வீட்டிற்கு செல்லும் வரையிலுமான அனைத்து அலுவல்களை ஒழுங்குமுறைப்படி செய்துதருகிறோம்.
**மேலதிக விபரங்களிற்கு:** http://www.rklimmo.de



# திருமந்திரமும் வாழ்வியலும் 30

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## சக்தியின் பெருமை

இறைவன் (சிவம்) ஆன்மாக்களின் மேல் கொண்ட கருணையினால் ஆன்மாக்களை ஈடேற்றும் பொருட்டு தான் செயல்படுவதற்காகச் சக்தியாகத் திருமேனி கொள்கிறான். இக்கூற்றுக்கு வலுச்சேர்ப்பது போலப் பல புராதன ஆலயங்களில் லிங்க வடிவில் பராசக்தி காணப்படுகிறாள். இருக்கு வேதம் தேவீ சூக்தம் தேவீ, தானே எல்லாமாய் இருந்து உலகைப் படைத்து, காத்து, அழித்து, மறைத்து அருள் புரிவதை தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது. திருக்களிற்றுப் படியார் பாடல் எண் 1 இல்

“அம்மையப்ப ரேஉலகுக்கு அம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர் அம்மையப்பர்
எல்லா உலகிற்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பர் அவர்” எனக் கூறியுள்ளார்.

இக்கருத்தையே (சிவனும் சக்தியும் ஒன்றே என்று) கூறும் திருமந்திரம் (இறைவணக்கம்) பாடல் எண் 1.

“ஒன்றவன்தானே இரண்டவன் இன்அருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழ்உம்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந்து எட்டே”.

இப்பாடலின் பொருள் “ஒன்றாயிருப்பவன், அவனே சிவனும் சக்தியுமாக இரண்டாகவும் இருக்கின்றான். அவனே பிரமன், திருமால், உருத்திரன் என மூன்றாகவும் உள்ளான். அவன் நான்மறை (நான்கு வேதங்கள்) வடிவானவன். படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்தொழிலுக்கும் அவனே தலைவன். சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், சௌரம், கௌமாரம் என்னும் ஆறு சமயப் பிரிவுகளாக இருப்பவன் அவனே. ஏழ் உலகங்களிலும் இருப்பவனும், அவற்றை இயக்குபவனும் அவனே. இப்படி எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் தன்வயமாதல், தூய உடலினன் ஆதல், இயற்கை உணர்வுடைதல், முற்றும் உணர்தல், பற்றற்றிருத்தல், பேரருள் நோக்கு, முடிவில்லாமை, எல்லையில்லாமை ஆகிய எண்குணத்தவனாக இருக்கின்றான்.” என்பதாகும்.
ஒரு சக்தி நவசக்தியாக இயங்குகிறாள் எனக் கூறும் பாடல் எண் 1046

“திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மணி என்ன
வருபல வாய்நிற்கு மாமாது தானே”

சூரியன், சந்திரன், அக்கினி என்று மூன்று கூறாக உள்ள திரிபுரை, அழகானவள், ஆகாயவடிவானவள், உலகத்தை, உயிர்களைப் பரிவுடன் காக்கும் சிவந்த நிறம் கொண்டவள், துர்க்கை, பல நிறமுடையவள், கரிய நிறமுடைய மகேசனுக்குச் சக்தியாக விளங்கும் ஈஸ்வரி, நினைப்பவர் மனத்துள் நின்றருளும் சதாசிவ சக்தியான மனோன்மணி என்று நவசக்தியாக விளங்குகிறாள்.

சக்தியின் அருளால்தான் உலகம் இயங்குகின்றது எனக் கூறும் பாடல் எண் 1053

“ அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகு மாறு அறியேனே”

அன்னை சக்தியை அறிந்துணராத தேவர்களும் இல்லை. இந்தச் சக்தி இல்லாமல் செய்யக்கூடிய தவங்களும் இல்லை.

இவள் துணையில்லாமல் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் புரியும் ஈசர்களும் அதைச் செய்யும் சக்தி அற்றவராவார்கள். அவள் துணை இல்லாமல் திருவடிப்பேறு பெறும் வழியும் நான் அறியேன்.

பேரின்ப வாழ்வு தருபவள் எனக் கூறும் பாடல் 1056

“பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்
தராசத்தி யாய்நின்ற தன்மை யுணரா
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணிய மாகிய போகமே”

அன்னை பராசக்தி எல்லாவிதத்திலும் மிகப் பெரும் ஆற்றலுடைய அருட் சக்தியாகும். உலக உயிர்களைத் தாங்கும் ஆதார சக்தியாக இருப்பவளும் அவளே என்பதை உணர்க. யுகங்கள் தோறும் பரவி நின்று அருள் பாலிக்கும் பராசக்தி அவளே. உயிர்களுக்குப் புண்ணிய பலனைத் தந்தருளும் பேரின்ப வாழ்வும் அவளே.
மூவருக்கும் முதல்வியாயிருப்பவள் பராசக்தி எனக் கூறும் பாடல் எண் 1087

“காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனும்
காணுந் தலைவிநற் காரணி காணே”

காணப்படுகின்ற தெய்வங்கள் அனேகம். இப்படிப் பலவாகத் தெய்வங்கள் இருப்பது, தங்கம் என்ற ஒரு பொருளில் இருந்து அவரவர் விருப்பத்திற்கேற்ப அணிந்து கொள்ளும் பலவகையான ஆபரணங்களைச் செய்து கொள்வதைப் போன்றதே ஆகும். தெய்வங்கள் பலவாக இருந்தாலும், அவை யாவற்றிலும் பெருமையாகப் பேசப்படும் சிவன், பிரமன், திருமால் ஆகிய மூவருக்கும் கூட, அவர்கள் செயல் விழங்கிக் காணக் காரணமாக இருப்பவள் தேவி பராசக்தியே.
ஆதாரம் பன்னிரண்டும் ஆனவள் பராசக்தி எனக் கூறும் பாடல் எண் 1124

“ஆதி அனாதி அகாரண காரணி
வேதமது ஆய்ந்தனள் வேதியர்க் காய்நின்ற
சோதி தனிச்சுடர் சொரூப மாய்நிற்கும்
பாதி பராபரை பன்னிரண்டு ஆதியே”

அன்னை சக்தி ஆதி முதலானவள். அனாதி காலம் தொட்டு இருப்பவள். முன்னைப் பழைமைக்கும் பழைமையானவள். தனக்கு ஒரு காரணத் தன்மை அற்றவள். என்றாலும் உலக இயக்கம் தொடங்கி ஒடுக்கம் வரை அனைத்துக்கும் காரணமாக இருப்பவள். வேதப் பொருளானவள். வேதம் ஓதுவோர்க்கு சோதிச் சுடராய், சுடரொளிச் சொரூபமாய் இருப்பவள். பரம்பொருளின் உடம்பில் பாதியிடம் கொண்ட பராபரை. அவளே பன்னிரண்டு ஆதாரங்களுக்கும் (ஆதாரம் ஆறு, நிராதாரம் ஆறு) ஆதி சக்தியாவாள்.

ஓம் பூரணம் ஓம்
மானுடம் முழுமை பெறும் பூரணம்
பூரண ஆச்சிரமம்
சுவிற்சர்லாந்து
0041 79 839 27 73
உடலினையும் மனதினையும் உறுதி செய்து
வாழ்வினை வெற்றி கொள்வோம்
யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஐபதய சாதனைகள்
Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland Tel: 0041 34 413 02 65

# முன்ஸ்ரர் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் முன்மாதிரியான செயலும் செயற்திறனும்!








புலம்பெயர் தமிழ் இளைஞர்களாகிய நாம் முன்ஸ்ரர் நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் எமக்கேகர்த்த பாடங்களை தேர்நதெடுத்து படித்து வருகின்கின்றோம். ஆனால் எங்கிருந்தாலும் எமது அளடயாமை் தமிழ்.
அதனை மனதில் கொண்டு எமது தமிழ் கலாச்சாரத்தை பேர்மன் மக்களிடம் பரப்புவதில் ஆர்வம் கொணடோம். அதற்காக முன்ஸ்ரர் நகர் பல்கலைக்கழகத்தில் பாடம் கற்கும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து செயற்பட முன்வந்துள்ளோம். நாம் கல்வி மற்றும் பண்பாடு பற்றிய தகவல்களை பரிமாறுவதன் மூலம் மக்களிடையே உள்ள ஒருங்கிணைப்பு மற்றும் சகிப்புத்தன்மை அதிகரிக்கும் என்ற நோக்குடன் ஒன்றுகூடியுள்ளோம். எமது திட்டம் மூலம் நாம் பெற்றுக்கொள்ள இருக்கும் வருமானத்தை இலஙகை மாணவ மாணவிகளிற்கு கொடுத்து உதவவுள்ளோம். மற்றும் போர் பஞ்சம் போன்ற காரணங்களால் அல்லலுறும் தமிழ் மக்களுக்கும் எம்மால் முடிந்த ஆதரவை வழங்கவுள்ளோம்.





இந்த சிறு உதவி அவர்கள் வாழ்க்கைக்கு மிக பெரிய வாய்ப்பாக அமைமயும். முதல் கட்டமாக நாம் எடுத்த முயற்சி ஒரு " கோடைகாலவிழா" இவ்விழா ASV எனும் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு தகவல் நிலையங்களை வைத்திருந்தோம். அத்கதாடு தமிழ் உணவுகள்,சர்பத் மற்றும் மருதாணி போடுடுவதற்கான ஓரிடத்தையும் ஒழுங்கு செய்திருந்தோம். விரும்பினோர் வேட்டி கட்டி சாறி அணிந்து பார்க்கக்கூடிய வாய்ப்பும் கொடுத்தோம்.
வேறு மொழிகளைக்கற்கும் ஆர்வம் கொண்ட யேர்மனியநாட்டவர்கள் அங்கு தமிழ் எழுத்துக்களையும் கற்கும் வாய்ப்பு அமைந்திருந்தது. ஆத்தோடு அதிஸ்ட லாபச்சீட்டு மூலமாக வெற்றிபெற்றவர்கள் கவரிங்நகை பொட்டு மற்றம் சாவிக்கோர்வை போன்றவற்றைப் பெற்றுச் சென்றனர்.
இவ்விழாமூலம் எமக்கு கிடைத்த வருமானம் இரு திட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது முல்லைத்தீவு வாழும் ஒரு மீனவர் போரில் தனது காலை இழந்துவிட்டார். ஆவரின் வாழ்வாதார பாதுகாப்பிற்கு உதவி செய்ய முன்வந்துள்ளோம். இரண்டாவது திட்டம் முல்லைத்தீவு மாணவர்களிற்கு மிதிவண்டிகள் வழங்கி அவர்கள் பாடசாலைக்கு சென்றவரும் நீண்ட பாதையை இலகுவாக்க முயற்சிசெய்கின்றோம். இத்துடன் அவர்களுக்கு பாடசாலைக்குத் தேவையான பொருட்களும் வழங்கப்படும். மேலதிக தகவல்களை எங்கள் முகநூல் பக்கத்தில் பாருங்கள் Deutsch-Tamilische Studierende Münster
இங்கு வாழும் மாணவர்கள் தம்போன்றே தாயக மாணவர்களை நேசிக்கும் பாங்கு போற்த்தக்கது. வெற்றிமணி மாணவ சமூகத்தை வாழ்த்திப் பாராட்டுகின்றது.
ஆதரவு வழங்கினோர்:
Ammas Food (Dortmund), Nandys, Kailas (Dortmund), Fachschaft Wirtschaftswissenschaften, TTS Münster TKS Best Food (Dortmund). Ja Asia Markt (Münster) Younikueme (Online Shop/Frankfurt), SK Silks & Gold Paradise (Dortmund), La Locanda (Münster), Santha Traders (Rheine), Vectone Call Shop (Münster),TNS Asia Food (Münster), Walter (ehemaliger Sozialarbeiter aus Köln) KKL (Dortmund)

Nabil Party- food
Catering Service

உங்கள் இல்ல வைபவங்களுக்கு
அறுசுவைதரும் உணவுச் சேவை!
Menu:
Vegetable biriyani
Beef biriyani
Chicken biriyani
Vegetable,Mutton & beef Kotthurotti
Short eats Rolls,Samosa,Patties & more
Special Fisch Dishes and Roasted Fisch
M.Nazeer Tel:02451 72 578 / 0157 70 77 3416

இலங்கைக்கு பார்சல் அனுப்ப விரும்புகிறீர்களா?
TAMIL-PARCEL.de
ஒரு பாசல் ஆனுப்பும்
கட்டணம் 55€ மட்டுமே!
PARCELS TO COLOMBO ONLY 50 €
Our partners near you
Arnsberg. Bochum. Bonn. Brüggen.Dortmund.Duisburg. Essen.Frankfurt.Heideelberg. Heilbronn.Hornberg.Herne. Hückelhoven.Krefel. Mannheim.Mönchengladbach. Neuss.Mörfelden-Walldorf.Mühlacker. Mühlheim. Solingen.Stuttgart.Wuppertal
Best Price Promiser
மக்கள் தொடர்பு:
www.tamil-parcel.de
0176 56841676
0176 24889539
✓ 60 x 40 x 40 cm அளவு பெட்டிகள்
✓ பெட்டியின் உள்ளடக்கம் 40Kg
✓ பெட்டி மற்றும் டேப் றோல் இலவசம்
✓ நீங்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பார்சல்கள் தாயகத்தில் உள்ள உங்கள் இல்லங்கள் தேடி நேரடியாக கொடுக்கப்படும் (Door-to-Door Delivery)
ஒவ்வொரு பார்சலும் 300€ காப்புறுதியுடன் அனுப்பப்படும்


3 பார்சல்கள் அனுப்பினால் 4ஆவது பார்சல் இலவசம்




தொகுப்பு: ஆன்மீகத் தென்றல் த.புவனேந்திரன்

**ஹம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்**
கொடி 28.07.2018 Ferdinand Poggel Str 25 02381 162 686
தேர் 05.08.2018 59065 Hamm.

**ஹனோபர் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்**
கொடி 10.08.2018 Carl-Buderus Str 3a> 0511 471 149
தேர் 18.08.2018 30455 Hannover.

**பெர்லின் ஸ்ரீ மயூரபதி முருகன் ஆலயம்**
கொடி 16.08.2018 Blaschko Allee 48 030 694 6900
தேர் 08.09.2018 12355 Berlin.

**NETHERLAND.**



**நெதர்லாந்து, றூர்மொண்ட்**
**ஸ்ரீ சிவசுப்ரமணியர் தேவஸ்த்தானம்**

**26.08.2018 ஞாயிற்றுக்கிழமை தேர்**

நெதர்லாந்து, றூர்மொண்ட் ஸ்ரீ சிவசுப்ரமணியர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் 18.08.2018 சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற்று, 26.08.2018 ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் 27.08.2018 திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

SCHIPPERSWAL 26 C, 6041 TC ROERMOND, NETHERLAND.




**யேர்மனி - கற்றிங்கன்**
**ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம் தேர் காட்சிகள்**





படங்கள்: வெற்றிமணி










# யாழ்ப்பாணத்தில் பெண் ஆளுமைகளைச் சிறப்பித்து
## பேராசிரியர் மனோன்மணி சண்முகதாசின் அகவை அறிமுக விழா

மகளிர் பண்பாட்டுக் கழகம் நடத்திய முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் முனைவர் மனோன்மணி சண்முகதாசின் அகவை 75இனை ஒட்டிய அறிமுக விழா கடந்த 27.06.2018 புதன்கிழமை நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ந.செல்வஅம்பிகையும் ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் ஆற்றினர். நிகழ்வில் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய மணற்கேணி என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் அறிமுகவுரையை கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீபன் வழங்கினார் பேராசிரியர் மனோண்மணி சண்முகதாஸின் ஆளுமை பற்றிய பன்முகப் பார்வையை மேலதிக அரச அதிபர் சுகுணரதி தெய்வேந்திரம், எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் மிமிலாதேவி விமலநாதன், திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த க.செல்வமலர், மக்கள் வங்கி முகாமையாளர் சு.யாழினி, வைத்தியர் தாரணி குருபரன் ஆகியோர் வழங்கினர்..

வலிகாமம் கல்வி வலய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் தலைமையில் மகளிர் பட்டிமண்டபம் இடம்பெற்றது. இன்றைய இளைய தலைமுறையை நெறிப்படுத்தவல்லது விஞ்ஞானக் கல்வியா? இலக்கியக் கல்வியா என்ற தலைப்பில் இடம்பெற்ற பட்டிமண்டபத்தில் சாந்திகம் உளவளத்துணை நிறுவனப் பணிப்பாளர் வைதேகி பாலமுரளி, சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கி.தயாபரி ஆகியோர் வாதிகளாகவும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்மினி ரஜீவன், தமிழ்த்துறை விரிவுரையாளர் பூ.செல்வதியம்மா, இலங்கை வங்கி துணை முகாமையாளர் ஜெ.சுகந்தி ஆகியோர் பிரதிவாதிகளாகவும் பங்குகொண்டனர். நிகழ்ச்சிகளை டான் தொலைக்காட்சி ஊடகவியலாளர் சு.முகுந்தன் தொகுத்து வழங்கினார்.பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் 14.10.1943 இல் பருத்தித்துறை தும்பளை நெல்லண்டையில் பிறந்தவர் என்பதும் எதிர்வரும் 14.10.2018 இல் 75 ஆவது அகவையைக் காண்கிறார் என்பதுவும் குறிப்பிடத்தக்கன.






நெதர்லாந்து அருள்மிகு லிம்பேர்க் முருகன் ஆலயத்தில், 08.07.2018 நடைபெற்ற வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா


Restaurent உடன் கூடிய அழகிய மண்டபம்

"Westfälischer Hof'

சுவையான உணவுடன்
உங்கள் கொண்டாட்டங்கள்
இங்கு நடைபெற நாடுங்கள்....



Tel: 02583 30 30 300

M POINT Supermarkt

Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி

M point Supermarkt

M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )



உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள்
கடல் உணவு வகைகள்,மற்றும் மளிகைப் பொருட்களுக்கும்
எம்மை நாடுங்கள்
e.mail: mpointsupermarkt@yahoo.de

Tel: 02583 30 30 300 0179 48 555 54



# யேர்மனி மணிச் செய்திகள்!

வ.சிவராஜா

## யேர்மனியர் சென்ற ஆண்டு விடுமுறைக்காக சென்ற நாடு எது? அது எகிப்து!!! 89%



தற்போது வெய்யில் காலம் தொடங்கிவிட்டதால் பலருக்குப் பெரும் சந்தோசம்தான். அதாவது விடுமுறையில் ஊர் உலகம் சுற்றுவதென்றால் பலருக்கு அலாதி விருப்பம்தான். அதுவும் நாம்வாழும் இந்த யேர்மனியர்களை எடுத்து நோக்கினால் அவர்களுக்கு உழைப்பு எவ்வளவு முக்கியமோ அவ்வளவுக்குச் சுற்றுலா செல்வதும் முக்கியமாகும். ஒரு வருடத்தில் குறைந்தது மூன்று நான்கு தடவையாவது சுற்றுலா செல்வார்கள். அப்போ அவர்களுடைய வாழ்க்கைக் காலத்தில் சுமார் 100 நாடுகளைச் சுற்றிப்பார்த்து விடுவார்கள். ஆனால் நம்மவர்களைப் பார்த்தால் போனல் சிறிலங்கா வந்தால் யேர்மனி எனச் சுற்றுலா முடிந்துவிடும். அதுவும் குடும்ப உறவுகளோடு சுற்றுலாவை முடித்து விடுவார்கள் பிற இடங்களைச் சுற்றிப்பார்க்கவே மாட்டார்கள்.

நமது தாயகத்திலேயே எத்தனையோ அழகான இடங்கள் நாம் பார்க்க வேண்டிய பல இடங்கள் இருக்கின்றன என்பதை யோசிப்பதே கிடையாது. ஆனால் யேர்மனியர்களோ உழைத்துச் சேமித்து சுற்றுலாக்கள் சென்று செலவழித்து வாழ்க்கையை அனுபவிப்பார்கள். அந்த வகையில் யேர்மனியர்கள் சென்றவருடம் சுற்றுலாச் சென்ற நாடுகளில் எகிப்து நாடுதான் முன்னிலை வகிக்கின்றது. அதாவது 89 வீதமான மக்கள் எகிப்துக்குச் சென்று வந்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாகச் சுற்றுலா சென்று உலகம் சுற்றியவர்களின் தொகையைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 2010 ஆண்டில் | | - 1.3 மில்லி பேர் (13 லட்சம்பேர்) | |
| 2012 | “ | - 1.00 | “ |
| 2014 | “ | - 1.2 | “ |
| 2016 | “ | - 1.1 | “ |
| 2017 | “ | - 1.3 | “ |

## யேர்மனியில் மனஅழுத்த நோயில் ஆண்களே முன்னணியில்.

மனித வாழ்வியல் சுற்றோட்டத்தில் பல மாற்றங்கள் முன்னேற்றங்கள் பயன்பாடுகள் அதிகரித்துக் கொண்டாலும் இன்றைய சூழலில் பல்வகைப் பிரச்சனைகளையும் மனிதன் சந்திக்கிறான். பிரச்சனைகள் அதிகரிக்க வாழ்வியல் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து பலவித நோய்களையும் வரவழைத்து இறுதியில் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பாகவே மரணத்தைத் தழுவிக்கொள்ளும் நிலை அதிகரித்துவருகின்றது. அண்மையில் யேர்மனிய சுகாதார அமைச்சு மேற்கொண்ட ஆய்வில் இன்றைய யேர்மனியர்களுக்கு ஏற்படும் மன அழுத்த நோய் சம்பந்தமாக ஏற்படும் பிரச்சனைகளை வெளியிட்டுள்ளது. இனி இதன் பகுப்பைப் பார்ப்போம்.

வேலைத்தளங்களில் ஏற்படும் மனஅழுத்தம் (ஆண்கள் 54% பெண்கள் 46%) தேவையில்லாத பேச்சுக்கள், கதைகள் மூலம் ஏற்படும் மன அழுத்தம். ஓய்வு நேரங்களில் கூறுதலான வேலைப்பழுவில் சிக்குவதால் ஏற்படும் மன அழுத்தம்.போக்குவரத்தின் போது ஏற்படும் சிக்கல்கள் பயம் காரணமாக ஏற்படும் மன அழுத்தம்.. கடும் நோய் காரணமாக ஏற்படும் மன அழுத்தம். குடும்ப உறவுகளிடையே ஏற்படும் சிக்கல்களால் வரும் மன அழுத்தம். பெற்ற பிள்ளைகளால் ஏற்படும் காரணங்களால் வரும் மன அழுத்தம்.நிதி, மற்றும் வருவாயிகளில் ஏற்படும் குறைகளால் வரும் மன அழுத்தம்.

## மாமிசம்

இன்று உலகில் நோய்நொடிகள் இறப்புக்கள் அதிகரித்துவருவதாகவும் மாமிச உணவுகள் மற்றும் அதி வேக உணவுகள் (பாஸ்வூட்) பழக்கவழக்கங்களே இதற்குக் காரணமாக அமைவதாகவும் கூறப்படு கின்றது. ஆனால் பலர் மாமிச உணவை ஒரு நாள்கூட உண்ணாமல் இருக்கமாட்டார்கள்.



நம்மவர்கள் இதற்குச் சற்று விதிவிலக்கானாலும் இன்றைய நமது சிறுவர் மற்றும் இளம் சந்ததியினர் 7 நாட்களும் மாமிச உணவையே விரும்பி உண்ணவும் நம்மவர்களால் பழக்கப்படுத்தி விட்டார்கள் என்பதும் உண்மையே..ஆனால் இந்த மாமிச உணவுகளால் நமது வாழ்வியல் காலம் சுருங்கிவருவதை நாம் உணரவேண்டும். இதற்கு நாம் சைவ உணவுப்பழக்கத்திற்குப் படிப்படியாக மாறவேண்டும். சரி இது இப்படி இருக்க கடந்த 31.12.2017ல் யேர்மனியில் இந்த மாமிச உணவுகளின் உயிரினங்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தபோது யேர்மனியில் காணப்பட்ட உயிரினங்களைப் பார்ப்போம்.....

-கோழி வகைகள் - 631.0 மில்லியன் -பன்றி - 57.9 மில்லியன் -வான்கோழி - 35.1 மில்லியன் -வாத்து - 16.3 மில்லியன் -மாடு - 03.5 மில்லியன் -ஆடு - 01.0 மில்லியன் -தாரா இனங்கள் - 0.6 மில்லியன்

அடுத்தது இந்த உயிரினங்களால் ஏற்பட்ட தொற்று நோய்களால் யேர்மனியில் 2015 தொடக்கம் 2017 வரை 64 பேர் உயிரிழந் திருக்கிறார்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்க விடையமாகும்.





# பொப் மாலியின் இசை இன்றும் வேதங்களாகப் படிக்கப்படுகின்றன.

**BOB MARLEY** கல்லாறு சதீஷ்

உலகப் புகழ் பெற்ற ராகே இசைக் கலைஞர் பொப்மாலி இன்னும் சில நாட்கள்தான் உயிர் வாழ்வார் என அவரைப் பரிசோதித்த அனைத்து மருத்துவர்களும் கூறி விட்டனர். அமெரிக்காவிலிருந்து அவரின் சொந்த தேசமான யமைக்கா நோக்கி தனது இறுதிப் பயணத்தைத் தொடங்கினார் பொப் மாலி.யாராலும் தன்னைக் காப்பாற்ற முடியாது என்று கண்டுகொண்ட பொப் மாலி தனது மரணப் படுக்கையை வளர்ந்த கயானாவின் ஸ்ரேஞ்ஷ்நகரில் ஏற்படுத்திக்கொள்ள ஆசைப்பட்டார்.

அவர்ஆசைப்பட்ட வாழ்வும் அவருக்கு கிடைக்கவில்லை,மரணமும் ஆசைப் பட்ட இடத்தில் கிடைக்கவில்லை. அமெரிக்காவிலிருந்து யமைக்கா போகும் பயணப்பாதையில்,மறு விமானத்துக்காக காத்திருந்த பொப் மாலி மரண வலியில் துடித்தார், புளோரிடா மாநிலத்தில் உள்ள (இன்றைய பெயர்)ஜக்சன் நினைவு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொப் மாலி 1981ம் ஆண்டு மே மாதம் 11 ம் திகதி மரணத்தைத் தழுவிக் கொண்டார்,

1945 பெப்ரவரி 6 இல் பிறந்து ,பத்து வயதில் தனது தந்தையை இழந்து வறுமை வாட்ட,கயானாவின் ஸ்ரேஞ்நகருக்குத் தாயாரால் அழைத்து வரப்பட்டவர் பொப் மாலி,பதினாறு வயதுடன் தனது படிப்பை நிறுத்திக்கொண்டு ஒரு சைக்கிள் திருத்தும் தொழிலாளியாக மாற ஆசை கொண்டார்,

ஆனால், ராகே இசை மேல் அவர் கொண்ட விருப்பு அவரை உலகப்புகழ் மிக்க பெரும் இசைக் கலைஞனாக மாற்றியது. ஆபிரிக்க வம்சாவளித் தயாரின் பதினெட்டு வயதிலும், ஐரோப்பிய வம்சாவழி ஆங்கிலத் தந்தையின் அறுபதாவது வயதிலும் பிறந்தபொப் மாலி இன்றும் உலகம்போற்றும் இசை வேதமாக ஐரோப்பியர்களால் கொண்டாடப்படுகிறார்.

பொப் மாலியின் இழப்பினால்,தாயாரும்,மனைவியும்,பன்னிரண்டு குழந்தை களும் மட்டுமல்ல, ஒட்டு மொத்த இசை இரசிக உலகமே கதறிக் கண்ணீர் விட்டது. பொப் மாலி சாதாரண இசைக் கலைஞனல்ல, விண்ணுக்கும் மண்ணுக்குமாக வியாபித்து நின்ற இசை வள்ளல். இசை யாசகம் செய்த உலக இரசிகர்களுக்கு, பாடல் வரிகளால், இசைக் கருவிகளால்,பாடலால் என்று முப்பரிமாண தன் ஆற்றலால் இசையை அள்ளி வழங்கிய பேராற்றலாளன்.




ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941






## "பெண் இல்லையானால்,கண்ணீரும் இல்லை"

பொப்மாலி பூமியில் வாழ்ந்த 36 வருடகாலத்தையும் விட அவர் இறந்த இந்த 36 வருடங்களின் பின்னரும் அவரின் சுமார் 36 பாடல்கள் வேதம்போல் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன.

யமைக்கா ஸ்ரேன்ஷ் நகரில் ஒரு உணவகத்தை நடாத்திக் கொண்டிருந்த தனது நண்பனை எழுதக் கேட்டுத் தனது திருத்தங்களுடன் பாடிய"பெண் இல்லையானால்,கண்ணீரும் இல்லை" (No Woman,No Cry) எனும் பாடல் உலகப்புகழின் உச்சம்.

பொப் மாலியின் பாடல்கள் கல்லூரிகளில் பாடமாகச் சொல்லித்தரப்படுகிறது, ராகே இசை என்பது அறுபதுகளில் யமைக்கா தேசத்தவர்களின் கண்டு பிடிப்பாக வர,பொப் மாலியால் உலகப் புகழ் பெற்றது,எழுபதுகளில் ஜாஸ் இசைக்கு மிகுந்த போட்டியாக விளங்கியது.

ஒரு அழகிய பெண் உடுத்தியுள்ள உடை நன்றாக இல்லை என்று ஒரு ஆண் கூற,ஆண் உடுத்தியுள்ள ஆடை நன்றாக இல்லை என்று எதிர்த்துப் பெண் கூற உபயோகிக்கப்படும் யமைக்கா பேச்சு வளக்கு வார்த்தையான streggae எனும் சொல் மாறி Reggae Music என வந்ததாகவும்,பொப் மாலி பின்பற்றிய மதமான Rastafari இயிலிருந்தும்,லத்தீன் மொழியான இராஜ இசை என்பதன் அர்த்தம் Reggae என்று மாறியதாகவும்,1968 இல்அவரது முதலாவது பாடலில் வந்த வார்த்தை பிரபலமாகியது என்றும் பல கதைகள் உள்ளன.எப்படியிருப்பினும் ஐரோப்பியர்கள் மத்தியில் பொப் மாலி ஐஸ்கிறீம் என்று இன்றும் விற்பனை செய்யும் அளவுக்கு இசையால் புகழ் பெற்ற கலைஞனைத் தாக்கிய தோல் புற்றுநோய் இன்றும் மக்களைப் பலி கொள்வது பரிதாபமே! பொப்மாலியின் சுமார் நாற்பதுகளுக்கு உட்பட்ட பாடல்களினால் அவரின் குடும்பத்தினருக்கு கிடைத்த வருமானத்தின்

தற்போதைய மதிப்பு 600 மில்லியன் டாலர்கள் என்று கூறப்படுகிறது. 1976 இல் பொப் மாலி எதிரிகளால் தனது வீட்டில் வைத்து சுடப்பட்டார், அதிஸ்ரவசமாகஒரு காயத்துடன் தப்ப,அவரின் மனைவி படுகாய மடைந்தார். அன்று அவர் மரணமடைந்திருந்தால் அது படுகொலை, ஐந்து ஆண்டுகளின் பின் அவர் மரணமடைந்தது புற்றுநோயால்,இது இயற்கை மரணம்! அழியாப் புகழ் பெற்ற பொப் மாலியின் பாடல்களும், அவரின் வாரிசுகளின் பாடல்களும், அவர் பற்றிய புத்தகங்களும் உலகை இயக்கத்தின் ஒரு பகுதியாகிப் போயின. -கல்லாறு சதீஷ் -079 8000 100


Milin Impex GmbH
எமது விலைகளை அறிய
எமது இணையத்தளத்தை
பார்வையிடவும்
Web :www.milinimpex.de

எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288

# பாதி விளம்பரம் ! மீதி?

**நடிகை ஸ்ரீரெட்டி.**





நடிக்க வாய்ப்பு கொடுத்தால் என்ன வேண்டுமானாலும் செய்வேன் என்று கூறிய டீனேஜ் பெண்ணை பிரபல ஹீரோ ஒருவர் திட்டி அனுப்பியதாக நடிகை கஸ்தூரி தெரிவித்துள்ளார்.
பட வாய்ப்பு அளிப்பதாக வாக்குறுதி அளித்து தன்னுடன் படுத்த பிரபலங்களின் பெயர்களை வெளியிட்டு வருகிறார் தெலுங்கு நடிகை ஸ்ரீரெட்டி. தமிழ் திரையுலகிலும் சில பிரபங்களுடன் தான் படுக்கையை பகிர்ந்ததாக தெரிவித்துள்ளார். இந்நிலையில் இது குறித்து நடிகை கஸ்தூரி தனது ஃபேஸ்புக் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

இன்றுதான் நான் ஸ்ரீரெட்டியின் இணையதள பேட்டியை பார்த்தேன். சினிமா ஆசை காட்டி தங்கள் ஈனபுத்திக்கு பெண்களை இரையாக்கிக்கொள்ளும் ஓநாய்களின் முகத்திரையை கிழித்து தொங்கபோட்டுக் கொண்டிருக்கிறார். பெயர்களை இறைக்கிறார். இவர் கூடவா என்று சிலர் பெயரை கேட்டதும் அதிர்ச்சியாக உள்ளது, ஆனால் அவர் சொல்லும் விவரங்கள் நம்பும்படியாக உள்ளன.
குற்றம் ஸ்ரீரெட்டியின் நிலை நமக்கு உணர்த்துவது இதைத்தான் - லஞ்சம் வாங்குவதும் குற்றம், கொடுப்பதும் குற்றம். கொடுப்பதே லஞ்சம், இதில் கொடுத்த லஞ்சத்துக்கு வாங்கியவர்கள் உண்மையாக இல்லை என்று பிறகு கூப்பாடு போடுவது .... கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் இல்லையா? அதிலும், ஒரு ஊரில் பல பேரிடம் ஏமாந்து, பிறகு அடுத்த ஊரிலும் அதே தவற்றையே மறுபடி மறுபடி செய்வதற்கு பெயர் என்ன? தவறு தவறு குறுக்குவழி ஏமாற்றம் நிறைந்தது. அதில் பலமுறை பயணித்திருக்கிறார் இவர். ஒருமுறைகூட அந்த வழி பயன்தரவில்லை. அப்புறமும் தன் அணுகுமுறை தவறு என்று ஏன் இந்தப் பெண் உணரவில்லை? அப்படியென்றால், சினிமாவுக்கு தேவையான தகுதியோ திறமையோ அதிர்ஷ்டமோ தனக்கு இல்லை, சமரசங்கள் செய்தாலாவது வாய்ப்பு கிட்டாதா என்று அந்த பெண் யோசித்ததாகவே தெரிகிறது. தகுதிக்கு மேல் பேராசைப்பட, சமரசம் செய்யக்கூட ஒரு மனநிலை வேண்டும்.... எல்லோருக்கும் அது கைகூடாது.

திருடி தின்பது சுலபமென்றால் எல்லோரும் திருடர்களாத்தான் இருப்பார்கள். நேர்வழிதான் கடைசியில் நிலைக்கும் என்பதை பட்டுத்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை. நம் முன்னோர்கள் நமக்கு அதை சொல்லித்தந்து போயிருக்கிறார்கள். அந்த ஒழுக்கத்தை கடைபிடித்தால் வாழ்க்கையில் ஜாக்பாட் அடிக்காமல் போகலாம், ஆனால் என்றும் சீராக, இழப்பில்லாமல் செல்லும். பெண்கள் பெண்கள் ஸ்ரீரெட்டி செய்த மிக பெரிய தவறு என்ன என்று அவர் இன்று வரை உணர்ந்தாரா தெரியவில்லை.

அவர் சினிமாவில் உள்ள ஆண்களை தவறாக எடைபோட்டு ஏமாந்ததாக நினைத்துக்கொண்டிருக்கிறார். இல்லை. அவர்,தவறாக எடைபோட்டது

# கஸ்தூரியா! கருத்தைமட்டும் பாருங்கோ!




சினிமாவில் உள்ள பெண்களைத்தான் .எல்லா நடிகைகளும் படுத்துதான் சினிமாவில் முன்னேறியுள்ளார்கள் என்று தப்புக்கணக்கு போட்டுவிட்டார். சான்ஸ் கிடைத்திருந்தால் யார் முகத்திரையையும் கிழித்திருக்க மாட்டார். சினிமாவை மிக தவறாக எடைபோட்டதன் விளைவையே இப்பொழுது சந்தித்துக்கொண்டிருக்கிறார். முட்டாள்தனம் படுத்தால் சான்ஸ் கிடைக்கும் என்று அவர் நினைத்தது மிக பெரிய முட்டாள்தனம் மட்டுமல்ல, திறமையையும் உழைப்பையும் ஒழுக்கத்தையும் மூலதனமாக வைத்து முன்னேறிய என்னை போன்ற நடிகைகளுக்கு எவ்வளவு அவதூறு ! சினிமாவில் நிறைய நல்லவர்கள் உள்ளார்கள். அவர்கள் யாரையும் இப்பெண் சந்திக்கவேயில்லையா?

இந்த இடத்தில் ஒரு சம்பவத்தை நினைவு கூறுகிறேன். நான் ஒரு பெரிய நடிகருடன் கதாநாயகியாக நடித்தபடம். அந்த படத்தின் கிளைமாக்ஸ் காட்சியின் படப்பிடிப்பு ஜனத்திரள் மிகுந்த காட்சி. அங்கே, ஒரு டீனேஜ் பெண், ஸ்டைலான நாகரிகமான அழகிய பெண், நடிகரை சந்தித்து வாய்ப்பு கேட்கிறது. வேறு பக்கம் அமர்ந்திருந்த என் காதில் அவர்கள் பேச்சு தெளிவாக கேட்டது. பெண்: "சார் நான் உங்க பெரியவிசிறி உங்களோட தனியா பேச முடியுமா" நடிகர்: தனியாவா? இங்கேயே சொல்லுமா ! " பெண்: "உங்க கூட நடிக்கணும் சார் ! அதுக்கு நான் என்ன வேண்டும் என்றாலும் பண்ண தயாரா இருக்கேன் சார்! I am ready for anything" நடிகருக்கு சுர்ரென்று கோபம் வந்து விட்டது. எனினும் குரலை உயர்த்தாமல் மிக கடுமையான தொனியில் சொன்னார் - "பைத்தியமா உனக்கு? படிக்கிற பொண்ணு பேசுற பேச்சா இது? என்னை என்னானு நினைச்சு பேசுறே? என்கிட்டே சொன்ன மாதிரி வேற யாருகிட்டயும் போய் பேசிடாத. உங்க அப்பா அம்மாவுக்கு தெரியுமா உன் சினிமா ஆசை? You are a child. You are not fit for cinema. முதலில் ஊரு போய் சேரு. படிக்கிற வேலைய பாரு. இப்படியான எண்ணங்களை விட்டுவிடு. இன்றும் எனக்கு அந்த ஹீரோவின் சொற்கள் நன்றாக நினைவுள்ளது. இத்தனைக்கும் அந்த ஹீரோ ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி எல்லாம் இல்லை. ஆனால் யாரையும் ஏமாற்றுமளவுக்கு மலிவான புத்திபடைத்தவா் அல்ல.
எதற்கு சொல்கிறேன் என்றால், சினிமாவில் எல்லோருமே ஏமாற்றுப்பேர்வழிகள் இல்லை. இன்னும் சொல்ல போனால்,பெண்கள் விடையத்தில் பலவீன மானவா்கள்கூட கூட எல்லோரிடமும் வம்புக்கு போக மாட்டார்கள். நடவடிக்கை ஸ்ரீரெட்டி போன்ற எந்த பின்புலமும் இல்லாத, தனிமனிஷியை கண்டிப்பாக துன்புறுத்துவார்கள்.

இது போன்ற பாலியல் பிரசினைகளில் ஒரு மாற்றம் வேண்டுமானால் சினிமாவுக்கு வரும் பெண்களுக்கு பாதுகாப்பு தர, அவர்கள் உரிமைகளுக்கு போராட, அநீதியை எதிர்த்து கேட்க, மற்ற பெண்களுக்கு தோள் கொடுக்க ஒரு அமைப்பு அவசியம். இத்தனை காலம் இல்லாமல் தற்போது ஒருவா் மாறி ஒருவா் படுக்கைபற்றி செய்தி பகிர்கிறார்கள் என்றால் அது தம்மை விளம்பரப்படுத்த எடுக்கும் குறுக்கு வழியாகவும் இருக்கலாம். தற்போது எல்லாமே சாதாரணம் ஆகிவரும் காலம்.

Nimal
Video & Photo
சிறந்த ஒளிப்பதிவு!
0049 152 33 83 29 55
namilvideo@gmail.com



ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
தரமும் மலிவும் நிரந்தரம்!
ஆசிய ஆபிரிக்க மற்றும், இலங்கை, இந்திய
பலசரக்குப் பொருட்கள்,மரக்கறி வகைகள்,
கடல் உணவுவகைகள், அனத்திற்கும், எம்மை நாடுங்கள்.
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30
R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com
Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan
துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven



உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
# EurAsian - Tours
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
VALUTRANS MONEY TRANSFER
துரித பண மாற்றுச் சேவை!
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!

# Jasmine Silk House
புத்தம் புது வரவுகள் என்றும் எமக்கு பண்டிகை நாட்களே!!!
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen

# ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS MONEY TRANSFER
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

Stuttgart நகரில்...
# Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976

Photography Video Filming Album Making Graphic Desiging
# AKR Visualizers
Your Dreams Comes True
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com

# SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

Dortmund மாநகரில்
தாயக மரக்கறிகள்
பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை
மொத்தமாக
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Snacks
Getreide
Gewürze
Getränke
Tiefkühlkost
Obst &Gemüse
Hülsenfrüchte
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
# Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
Tel:0231 860 26 96
StaR Impex :
Inh :K.Sivasubramaniam